விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 தை 08 ஞாயிற்றுக்கிழமை (21.01.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 033

## யாழ் - கொழும்பு ரயிலை மறித்து வவு.வில் ஆர்ப்பாட்டம்



(வவுனியா)

வவுனியா, ஓமந்தை பெரியவிளாத்திக்குளம் கிராமத்திற்கு செல்லும் வீதி ரயில் திணைக்களத் தால்மூடப்பட்டுள்ளமையை கண்டித்து, கிராம மக்கள் ரயிலை மறித்து பாரிய ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்து 16

## சிங்கப்பூர் பிரதமர் நாளை இலங்கையில்



(கொழும்பு)

சிங்கப்பூர் பிரதமர் லீ ஷியன் லூங் இலங்கைக்கு உத்தி 15

## மரப்பெட்டிக்குள் இருந்து வெடிகுண்டுகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கடல் பகுதியில் மீட்கப்பட்ட மரப் பெட்டிக்குள் இருந்து வெடிகுண்டுகள் சில மீட்கப்பட்டதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை மணடைதீவு கடற்பரப்பில் மிதந்துவந்த இப் பெட்டி தொடர்பாக மீன 15



## ஊழல் மோசடியில் ஈடுபட்ட அனைவருக்கும்

# கட்சி பேதமின்றி தண்டனை உறுதி

## பிரதமர் நாட்டு மக்களுக்கு சிறப்புரை



(கொழும்பு) இலஞ்சம், ஊழல் மோசடியில் ஈடுபட்ட அனைவருக்கும் கட்சி பேதமின்றி தண்டனை உறுதியாக வழங்கப்படும் என தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாட்டில் முற்றாக ஊழலை தடுப்பதற்காகவே நல்லாட்சி அரசு அமைக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். (15-ம் பக்.)

## பொலிஸ் நிலையத்தில் நஞ்சருந்தியவர் வைத்தியசாலையில்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் வைத்து தனிநபர் ஒருவர் நஞ்சு அருந்திய நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் 15

## சந்திரிகாவின் அழைப்பு!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரிவு அல்ல எனவும் அது தனியான கட்சி எனவும் முன்னாள் ஜனா 15

## மைத்திரி - ரணிலுக்கு இடையில் பனிப்போர்

### மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த வருடம் பதவிக் காலம் முடிந்து வீடு செல்லப்போகிறார் என்பதை மறந்து கருத்துத் தெரிவித்து வருவதாக முன்னாள் ஜனா 15

## அரசின் மோசடியை மறைக்கவே எதிர்க்கட்சி தலைவர் பதவி

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(மட்டக்களப்பு)

அரசாங்கம் செய்யும் அரசியல் மோசடியை மூடி மறைப்பதற்கே, தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சி தலைவர் பதவி வழங்கப்பட்டது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேச சபைக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, தேர்தல் பிரசார கூட்டம் 15

## தகுதியற்றவர்களை நீக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இல்லை

### மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர்கள், தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவர்களைத் தகுதியிழப்புச் செய்வதற்கு, தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசபணியில் கள அதிகாரிகளாகப் பணியாற்றுபவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது 15



## பொலிஸ் மா அதிபர் முல்லைக்கு விஜயம்



(முல்லைத்தீவு)

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர நேற்று முல்லைத்தீவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். அவர் முல்லைத்தீவு பிரதான பொலிஸ் நிலையத்துக்கான 15

## இலங்கையின் கோரிக்கை ஜெனிவாவில் நிராகரிப்பு

(ஜெனிவா)

சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க உலக நாடுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து ஆராயும் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட கூட்டத் தொடரின் போது ஜெனிவாவுக்கான இலங்கை அரசின் பிரதிநிதியின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால் சென்று இலங்கைக்கு விசேடமான அணுகுமுறையொன்று கையாளப்பட வேண்டும் என்று ஜெனிவாவிற்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க விடுத்த கோரிக்கை உடனடியாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடு 15

## ஐ.தே.கட்சியின் வசமிருந்த பொருளாதார முகாமைத்துவம்

### ஜனாதிபதி மைத்திரி பொறுப்பேற்பு

(கொழும்பு)

இவ்வருடம் தொடக்கம் நாட்டின் பொருளாதார முகாமைத்துவத்தை தாம் பொறுப்பேற்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகவும், கடந்த மூன்று வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேவைக்கமைய பொருளாதார முகாமைத்துவத்திற்கு இட 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுகிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர் **மகேஸ்வரி சர்வேஸ்வரசெவ்வேள்**

(முன்னாள் ஆசிரியை யாழ்/மானிப்பாய் மகளிர் கல்லூரி, யாழ்/சுன்னாகம் மயிலணி மகா வித்தியாலயம்)

யாழ்/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்

யாழ்/சுதுமலை வடக்கு தமிழ் கலவன் பாடசாலை

(இறைவனடி சேரும் காலம் வரை)

| மாணவர்க்காக | வானவர்க்காக |
|---|---|
| 02 - 08 - 1958 | 22. - 12 - 2017 |



ஆண்டவன் நினைத்தானோ வானவர்க்கும் வேண்டும் என்று ஓர் பள்ளி
அதனாலே உங்களை இங்கிருந்து விரைந்து எடுத்தானோ
உங்கள் ஓய்வு நிலைக்கு முன்பே அள்ளி
உங்களுக்கு பலவித உறவுகள் என்று நாமிருந்தாலும் உங்கள்
அறிவுரைக்கு முன்னே நாமெல்லாம் மாணவர் தானம்மா உங்களுக்கு
என்றென்றும் அமைதியை விரும்பும் உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்க எமக்கு தகுதி உண்டோ
என்ற ஏக்கம் தானம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும்
இறைவனை பிரார்த்திக்கும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**உங்கள் நினைவுடன் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் கல்வி சமூகத்தினர்**

21.01.2018 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் (இன்று) நடைபெற இருக்கும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும், மதிய போசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புள்ளம் கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் சேவைக்கால நண்பர்கள், மாணவ செல்வங்கள் (பழைய, புதிய) அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் நோயுற்ற காலத்தில் கால நேரம் பாராது அவரது நோயினை குணமாக்க போராடிய சேவை மனம் கொண்ட அரச தனியார் வைத்தியதுறை அன்புள்ளங்களுக்கும் நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் எமக்கு ஆலோசனை வழங்கி ஆறுதல் தந்த மருத்துவ துறையினர் ஏனைய துறையினருக்கும் பல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்த வெளிநாட்டு உள்நாட்டு உறவுகளுக்கும் பெரும்பான்மை சகோதர சகோதரிகளுக்கும்.

அன்னாரின் மரண செய்தி கேட்டு நேரடியாகவும் தொலைபேசி மூலமும் ஆறுதல் வழங்கிய மற்றும் துண்டுப்பிரசுரம், பாதாகைகள் வெளியிட்டும் மலர்வளையங்கள் வைத்தும் அஞ்சலி செலுத்திய மற்றும் அஞ்சலி உரை நிகழ்த்திய பிரமுகர்களுக்கும் குறுகிய நேர அறிவித்தலை ஏற்று சேவையாற்றிய பராசக்தி அச்சகம் (கொக்குவில் சந்தி மற்றும் அந்திய கால சேவையை வழங்கிய யாழ் துதி அந்திய கால சேவையர்களுக்கும் சைவசமய குருமார், பாடகர் மற்றும் ஏனைய வழிகளில் சேவையாற்றியவர்களுக்கும் மற்றும் வலம்புரி பத்திரிகை நிறுவனத்தினருக்கும் கொக்குவில் மேற்கு ஜெயந்தா பந்தல் சேவையினருக்கும் இன்று நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனை, மதிய போசன நிகழ்வில் கலந்துகொள்பவர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிதனை தெரிவித்து கொள்கிறோம்.

மாவடி வீதி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய் (சி-1295)

நன்றி உணர்வுடன்
குடும்பத்தினர்

# பொலித்தீன், பிளாஸ்டிக் உற்பத்தி நிறுவனம் சுற்றிவளைப்பு

(கொழும்பு)

தடை செய்யப்பட்டுள்ள பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களை சுற்றிவளைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

சட்ட விரோத பொலித்தீன், பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் நிறுவனங்கள் என்பன இச்சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது கருத்தில் கொள்ளப்படும் எனவும் சபையின் கழிவு முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் அஜித் வீரசுந்தர குறிப்பிட்டுள்ளார். (ம)

## சீமெந்து விற்பனை வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையில் சீமெந்து விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2016 ஆம் ஆண்டை விட 2017 ஆம் ஆண்டில் சீமெந்து விற்பனை 29.2 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது.

எனினும், சீமெந்து விற்பனை வீழ்ச்சியால் நிர்மாணத்துறையில் எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை என மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம)

## Invitation to an Educational Seminar

The International Teachers College (ITC)-a dual-degree program between universitas Pelita Harapan in Indonesia and Corban University in the USA-will hold an educational seminar on Nurturing Teachers for Nations. The ITC is internationally accredited by both the Indonesian and American accrediting agencies for higher education, as well as recognized by the university Grants Commission-Sri Lanka as an accredited foreign university.

**The ITC Offers full scholarships to eligible candidate for its Bachelor of Education (B.Ed) degree program**

**Speaker & Assessor:-Dr.Curtis J.Taylor,ph.D**

(VP For Student Development and Spiritual Formation Director of Admissions, International Teachers college Universitas Pelita Harapan,Lippo Karawaci,Indonesia)

Date: 27th January 2018

Time: 10:00 am

**Venue: Trinity Reformed Presbyterian church, No 32/2, Ponnalai Road, Manipay, Jaffna**

For more detail please contact 0774027105(RSVP) (2465)



**ICAS உடன் இணைந்து வெளி நாட்டில் உயர் கல்வியினை ஆரம்பியுங்கள்**

உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள்

- ★MBBS // MD
- ★BBA
- ★Engineering
- ★Tourism
- ★Hotel Management
- ★Arts & Cultural
- ★Nursing
- ★LAW
- ★Computing
- ★Bio-Medical Science
- ★Software Developer

India China Malasiya Russia UK USA Europe Ukrain Lativia Georgia

வைத்திய குழுவினால் வழிநடாத்தப்படும் கல்வியின் பின் இலங்கை மற்றும் ஐரோப்பாவில் தொழில் வாய்ப்பு பற்றிய ஆலோசனை வழங்கப்படும்

(2483)

ICAS
38, சென்பெற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம். 0214333001

மேலதிக தகவல்:-
0772882458

## உங்கள் பழமை வாய்ந்த பொருட்கள்

புதிய அல்லது பாவித்த மாணிக்கக் கற்கள், இரத்தினக் கற்கள், கைக்கடிகாரம், பழமை வாய்ந்த சிலைகள் தகுந்த விலைக்கு வாங்கும் ஒரே ஸ்தாபனம்.

**உடனடித் தொடர்புகளுக்கு :**

**071 059 9971** (ஏ-12897)

## வீடு வாடகைக்கு

கொக்குவில் சம்பியன் லேனில் வீடு வாடகைக்கு உண்டு. யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தொடர்பு:-**

**0779689119**

அனுமதிப்பத்திரங்களுக்கான அடையாள அட்டை புகைப்படங்கள் 5 நிமிடத்தில் பொற்றுகொள்ள முடியும்
திங் - சனி 8.00am to 7.00pm



JEYAN GRAPHICS STUDIO®
PHOTOGRAPHY & VIDEOGRAPHY

Special Offer
February 28 வரை மட்டும்

Chemical Photo Frame
12x18 - ~~2500~~/= 2000/=
10x15 - ~~1750~~/= 1500/=
Duro Photo Frame
12x18 - ~~1200~~/= 950/=
10x15 - ~~1000~~/= 800/=

திருமணம்,
பூப்புனித நீராட்டு விழா,
பிறந்தநாள் நிகழ்வு
அனைத்தும் உயர்தரத்தில்
புகைப்படம் / ஒளிப்பதிவு
செய்து தரப்படும்

(2479)

www.facebook.com/jeyangraphics இல.106, BOC அருகில் கொக்குவில் சந்தி, கொக்குவில், யாழ்ப்பாணம் தொ: 021 222 1101 , 077 375 4341

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதமர் பதவியில் கைவைத்தால் கூட்டு எதிரணி உதவியுடன்

# ஜனாதிபதி மீது பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை நிச்சயமாகக் கொண்டு வரப்படும்



## ஐ.தே.க.எம்.பி.விஜேசிறி எச்சரிக்கை

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் இருந்து அகற்ற முயற்சித்தால் பாராளுமன்றில் ஜனாதிபதி மைத்திரிபால சிறசேன மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை நிச்சயமாகக் கொண்டு வரப்படும் என ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி எச்சரித்துள்ளார். மேலும் அப்படியொரு பிரேரணை கொண்டு வரப் படும் சந்தர்ப்பத்தில் கூட்டு எதிரணியினரின் ஆதரவைப் பெறவும் தாம் தயங்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர் தலின் பின் பிரதமர் மாற்றப்ப டுவார் என்றும் புதிய அரசு தோற்றுவிக்கப்படும் என்றும் கிளம்பியுள்ள வதந்திகள் குறித்து கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, உள்ளூ ராட்சித் தேர்தலின் பின் புதியதொரு அரசியல் பயணத்தை ஜனாதிபதி ஆரம்பிக்கவுள்ளதாக வும்அதற்கு ஐ.தே.க. மற்றும்கூட்டு எதி ரணியினரின் ஆதரவு கிடைக்கும் எனவும் ஸ்ரீல.சு.க.வின் முக்கியமான உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந் நிலையிலேயே ஐ.தே.க. எம்.பி விஜேசிறி மேற்கண்டவாறு ஜனாதிபதிக்கும சுதந்திரக்கட்சிக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

## 1-ம் தரத்திலிருந்து ஆங்கிலம் கல்வியமைச்சர் விசேட திட்டம்

(கொழும்பு)

மாணவர்களின் மொழி ஆற்றலை விருத்தி செய் வதற்கான வேலைத்திட்ட த்தை நடைமுறைப்படுத்த கல்வி அமைச்சு திட்டமிட் டுள்ளது. இதற்காக நாட்டின் அனைத்து பாடசாலைகளி லும் முதலாம் தரத்திலிருந்து ஆங்கில பாடம் கற்பிக்கப்படவுள்ளது. கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவச த்தின் வழிகாட்டலு க்கு அமையவே இத்திட்டம் உருப் பெற்றுள்ளது.

இவ்வாறு ஆரம்ப வகுப்புக்களில் ஆங்கில பாடவிதானத்தை கற்ப தற்கு தேவையான பாடப் புத்தங் களை அச்சிட்டு விநியோகிப்பதற கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி வெளியீட்டு ஆணை யாளர் தெரிவித்துள்ளார்.

இதற்காக ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சிகளும் வழங்கப்பட வுள்ளன. இத்திட்டம் இவ்வாண்டு அறிமுக ப்படுத்தப்பட்டாலும் அடுத்த ஆண்டு முதல் முழுமையாக அமுல்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-7)

## செல்லுபடியற்ற அரசு

### கூட்டு எதிரணித் தலைவர் தினேஷ் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

19 ஆவது அரசியல் சீர் திருத்தம் கொண்டு வரப்பட்ட தன் மூலம் தற்போதைய அரசாங்கம் செல்லுபடியற்ற தாக மாறியுள்ளதாக கூட்டு எதிரணியின் தலைவரும் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த் தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவி த்தார். தனிக் கட்சியினால் ஆட்சியை உருவாக்க முடியா விட்டால் அரசியல் அமைப்பின் பிரகாரம் தேசிய அரசா ங்கம் ஒன்றை உருவாக்க முடியும். அரசியல் அமைப் பின் சட்ட நடை முறைக்கு அமைய ஐக் கிய தேசிய கட்சிக்கும், ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சிக்கும் இடையில் செய்து கொள்ள ப்பட்ட உடன்படிக்கை கடந்த டிசெம்பர் மாதத்துடன் நிறைவடைந் துள்ளது. எனவே அரசியல் அமைப் பின் பிரகாரம் அமைச்சரவையின் உறுப பினர்கள் எண்ணிக்கை உடன டியாக குறைக்கப்பட வேண்டும்.

அவ்வாறில்லையெனில் அரசி யலமைப்பை மீறிய நெருக்கடிக்கு முகம்கொடுக்க வேண்டிய நிர்ப்ப ந்தம் ஏற்படும் என தினேஷ் குண வர்த்தன மேலும் சுட்டிக்காட்டியு ள்ளார். (இ-7)


## அன்புடன் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு...

மீண்டும் ஒரு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள சூழலில், உங்களின் நியாயமான தீர்ப்புக்காக உங்களுடன் மனந்திறந்து சில கருத்துக்களைப் பறிமாறிக்கொள்ள முற்படுகின்றேன்.

1989ஆம் ஆண்டுக்குப் பின்னர் எமது தாயகப் பிரதேசத்தில் இயல்புச் சூழல் முடக்கப்பட்டுக் கிடந்ததையும், அரசியல் தலைமைகள் செயற்பட முடியாமல் இந்த மண்ணைவிட்டு வெளிநாடுகளுக்கும், தென் இலங்கைக்கும் ஓடியதையும், அரச இயந்திரம் இயங்க முடியாமல் போனதையும் உங்களில் பலர் அறிந்திருப்பீர்கள். அவ்வாறான ஓர் இருண்ட சூழலிலேயே துணிச்சலோடு தேசிய நீரோட்டத்தில் நான் கலந்துகொண்டேன்.

அந்தச் சூனியச் சூழலையும், தடைகளையும் எதிர்கொண்டு, எமது தாயகத்தில் ஜனநாயகச் சூழலை ஏற்படுத்துவதற்கும், எமது மக்கள் இயல்புச் சூழலை அனுபவிப்பதற்கும் உயிர் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்தபடி நானே முன்னின்று உழைத்திருந்தேன்.

மக்கள் சேவையை திறம்படச் செய்து முடிப்பதற்காக இரவு பகல் பாராமலும், நேர, காலம் பாராமலும், மழை, வெய்யில் பாராமலும் நான் செயல்பட்டபோது, எனக்கு உங்களின் ஆலோசனைகள் தேவையாக இருந்தன. உங்களின் பங்களிப்பும் தேவையாக இருந்தது. அதற்காக, எந்தவேளையில் நான் உங்களை அழைத்தாலும் நீங்கள் வருகை தந்து மனம் சோராமல் உதவி செய்தீர்கள்.

அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது பணியைச் செய்தாலும், அதை ஒரு சமூக சேவையாகவும், மனிதாபிமானப் பணியாகவும் நினைத்து மக்களுக்கு செய்ய வேண்டும் என்று நான் உங்களிடம் கோரிக்கை விடுத்ததையும், நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அத்துடன் நீங்கள் நியாயமாகவும், சுதந்திரமாகவும் செயல்பட உங்களுக்கு நான் பக்கபலமாக இருந்ததையும் நினைவில் கொண்டிருப்பீர்கள் என்றும் நம்புகின்றேன்.
உங்கள் பங்களிப்பும், உதவியும் கிடைக்கப்பெற்றதால்தான், யுத்த இடிபாடுகளாகக் கிடந்த யாழ், குடா நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடிந்தது.

எனது அயராத முயற்சியினால்தான் வடக்கிலும், கிழக்கிலும் பல ஆயிரம் பேருக்கு அரச வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்கவும் முடிந்தது. அந்த நன்றி உணர்வோடு இன்னும் பலர் இருப்பதையும் அன்போடு ஞாபகத்தில் வைத்திருக்கின்றேன்.எமது மக்கள் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நேரகாலம் பாராமல் நான் அரச அதிகாரிகளை அழைத்திருந்தேன் என்பதற்காகவும், மக்கள் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு நியாயமான உடனடித் தீர்வு காணப்பட வேண்டும் என்று பிடிவாதமாக கேட்டுக்கொண்டதற்காகவும் உங்களில் சிலர் அதிருப்தியடைந்திருப்பதாலேயே தபால் மூல வாக்குகளில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி)க்கு கணிசமான வாக்குகள் கிடைப்பதில்லை என்று கூறப்படுவதை நான் உண்மையென்று நம்பவில்லை.

எமது மக்களுக்காகவே நான் பாடுபட்டேன். எமது மண்ணுக்காகவே உழைத்தேன். கடந்த மூன்று வருடங்களாக எனக்கு எதிரான சக தமிழ் அரசியல் கட்சிகள் செய்த சதி காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் எமது மக்களும், அபிவிருத்தியற்று முடங்கிப்போனது எமது தாயகப் பிரதேசமும்தான். இப்பாதிப்பையும், பின்னடைவையும் எமது மக்கள் உணர்ந்து வருவதையும், அதை வெளிப்படுத்தி வருவதையும் நான் புரிந்து கொள்கின்றேன்.
இந்த முடக்கத்திலிருந்து அபிவிருத்தியும், மீள் எழுச்சியும் முழு வீச்சில் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும். எதிர்காலம் மீதான நம்பிக்கையை எமது மக்களிடையே மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். சமூகச் சீர்கேடுகளை நிறுத்தி, அதனால் பாதிப்புக்குள்ளானவர்களை அதிலிருந்து மீட்டெடுக்க வேண்டும். அதற்காக நீங்களும் எனக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நீங்கள் கடந்த காலத்தில் எவ்வாறான தீர்மானம் எடுத்திருந்தாலும் பரவாயில்லை. இம்முறை நியாயத்திற்காக எனது கோரிக்கையை ஏற்று நியாயத் தீர்ப்பை எழுதுவீர்கள் என்று நம்புகின்றேன்.



**முயல்வோம்! வெல்வோம்! உளம்சோரோம்!!**




என்றும் மக்கள் சேவையிலுள்ள
**டக்ளஸ் தேவானந்தா பா. உ**
செயலாளர் நாயகம்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

(2457)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## அரியகுட்டி சௌந்தரதாசன் (சௌந்தி)



"பாக்கியபவனம்" மனோகரா அல்வாயைப்பிறப்பிடமாகவும் ஜனசக்தி வீதி, சிறுப்பிட்டிமேற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட அரியகுட்டி சௌந்தரதாசன் (சௌந்தி) அவர்கள் 20.01.2018 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிதம்பரிகோவிந்தன் (சந்திரன்) மற்றும் சோதிலட்சுமி தம்பதிகளின் மருமகனும், நளாயினிதேவியின் அன்புக் கணவரும், சந்தீபன், சர்மிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திராவதி, சந்திரதாசன், சத்தியதாசன், சத்தியகலா, சபேசன் ஆகியோர்களது அன்புச் சகோதரனும், சிவராசா (உரிமையாளர் நிமலன்ஸ் உதிரிகள் வாணிபம் - கிளிநொச்சி), சிறீதரன் (மாநகரசபை யாழ்ப்பாணம்), யோகராணி, ஜனகராணி, மைதிலி, ரஞ்சனாதேவி (சுவிஸ்), கலாதேவி ஆகியோரின் மைத்துனரும், பிரேமதாஸ், மகேஸ்வரன் ஆகியோரது சகலனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (21.01.2018) ஞாயிற்றுக் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(2493)

ஜனசக்தி வீதி,
சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.

தகவல் : குடும்பத்தினர்

# ஐ.பி.எல் ஏலத்தில் 578 பேர் தெரிவு



ஐ.பி.எல் ஏலத்தில் கலந்து கொள்ள 1122 பேர் விண்ணப்பம் செய்திருந்தார்கள். இதில் 578 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய கிரிக்கெட் வாரியத்தால் ஐ.பி.எல் கிரிக்கெட் தொடர் நடத்தப்பட்டு வருகிறது. 11ஆவது சீசன் ஏப்ரல், மே மாதங்களில் நடைபெற இருக்கிறது.

இதற்கான வீரர்களின் ஏலம் வரும் 27ஆம் திகதி மற்றும் 28ஆம் திகதிகளில் பெங்களூரில் நடக்கிறது.

ஐ.பி.ல் ஏலத்தில் கலந்து கொள்வதற்காக இங்கிலாந்து டெஸ்ட் அணித் தலைவர் உட்பட 1122 பேர் விண்ணப்பம் செய்திருந்தார்கள். அதில் 578 பேர் ஏலத்தில் கலந்து கொள்ள தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

அஸ்வின், டுவெயின் பிராவோ, கிறிஸ் ஹெய்ல், பொலார்ட், ஜோ ரூட், பென் ஸ்டோக்ஸ் போன்றோர் ஏலம் மூலம் எடுக்க இருக்கிறார்கள்.

மொத்தம் 36 பேரின் அடிப்படை விலை 2 கோடி ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதில் 13 பேர் இந்திய் வீரர்கள். 23 பேர் வெளிநாட்டு வீரர்கள்.

32 பேரின் அடிப்படை விலை 1.5 கோடியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 31 பேரின் அடிப்படை விலை ஒரு கோடி ரூபாயாகவும், 23 பேரின் அடிப்படை விலை 75 லட்சம் ரூபாயாகவும், 122 பேரின் அடிப்படை விலை 50 லட்சமாகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

14 வீரர்களின் அடிப்படை விலை 40 லட்சமாகவும், 17 பேரின் விலை 30 லட்சமாகவும், 303 பேரின் விலை 20 லட்சமாகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

ஐ.பி.ல் தொடரில் பங்கேற்க உள்ள 8 அணிகள் அதிகபட்சமாக 25 வீரர்களை ஏலம் எடுக்கலாம்.

# ஒரே ஓவரில் 37 ஓட்டங்கள் குவித்த டுமினி

தென்னாபிரிக்க இடது கை துடுப்பாட்ட வீரர் ஆன ஜேபி டுமினி ஒரே ஓவரில் 37 ஓட்டங்கள் குவித்து சாதனை படைத்துள்ளார்.

தென்னாபிரிக்காவின் உள்ளூர் ஒருநாள் கிரிக்கெட் தொடரான மொமென்டம் ஒருநாள் கிண்ண தொடர் நடைபெற்று வருகிறது. கடந்த 17ஆம் திகதி நைட்ஸ் - கேப் கோப்ராஸ் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய நைடஸ் அணி 9 விக்கெட் இழப்பிற்கு 239 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் 240 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கேப் கோப்ராஸ் அணி 36ஆவது ஓவர் முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு 208 ஓட்டங்கள் எடுத்திருந்தது. எஸ்எம் கோமறி 65 ஓட்டங்களும் ஜேபி டுமினி 30 பந்தில் 34 ஓட்டங்களும் எடுத்திருந்தனர்.

37ஆவது ஓவரை எடி லெய் வீசினார். டுமினி எதிர் கொண்டார். முதல் நான்கு பந்துகளையும் சிக்சருக்கு விளாசினார். ஐந்தாவது பந்தில் இரண்டு ஓட்டங்கள் அடித்தார். 6ஆவது பந்தை எடி லெய் முறையற்ற பந்தாக வீசினார். அதில் ஒரு பவுண்டரி விளாசினார். இதனால் ஓட்ட எண்ணிக்கை சமநிலையானது. முறையற்ற பந்துக்குப் பதிலாக வீசிய கடைசி பந்தையும் சிக்சருக்கு துரத்தினார். இதன் மூலம் ஒரே ஓவரில் 37 ஓட்டங்கள் குவித்து டுமினி சாதனைபடைத்துள்ளார்.

டுமினி ஒரே ஓவரில் 5 சிக்ஸ், ஒரு பவுண்டரி விளாச கேப் கோப்ராஸ் 37 ஓவரில் 245 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. டுமினி 37 பந்தில் 70 ஓட்டங்கள் குவித்தார்.





BUSINESS MANAGEMENT MARKETING | HRM
HND Leading to BA (Hons) from the UK Universities

QUANTITY SURVEYING
HND Leading to BSc (Hons) from the UK Universities

COMPUTING
HND Leading to BSc (Hons) from the UK Universities

UGC Recognized TVEC

BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY
HND Leading to BSc (Hons) from the UK Universities

CIVIL ENGINEERING
HND Leading to BEng / BSc (Hons) from the UK Universities

LAW
LLB Leading to LLB (Hons) from the UK Universities

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

பதிவுகள் இப்பொழுது ஆரம்பம்
Sanchu 0777 102 131
Ragavan 0777 692 318

Platinum Partner No.1 BTEC Centre in Sri Lanka 2016
Best Employer Brand Award 2017
Asia's Training Excellence Award 2017

(C-1294)

BCAS Jaffna Campus, #. 16, Point Pedro Road, Jaffna

Mount Campus
54, Galle Road, Mt. Lavinia.
T : 011 272 8082

Kandy Campus
344, Peradeniya Road, Kandy.
T : 081 222 4731

Kalmunai Campus
392/1, Main Street, Kalmunai.
T : 067 222 6899

Corporate Office
32, Dharmarama Road,
Colombo 6. T : 0112597217

021 221 9910 | 011 259 7217 | info@bcas.lk | www.bcas.lk


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிணைமுறி மோசடி விவகாரம்

# குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பிக்க பிரதமரிடம் கவசம் உள்ளதாம்

## ரவி கருணாநாயக்க கூறுகிறார்



(கொழும்பு) இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் இருந்து பாதுகாப்பு பெற பிரதமர் கவசம் ஒன்றை பெற்றுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனை தெரிவித்தார்.

முறி மோசடி தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சியினிடையே பிளவுகள் ஏற்படவில்லை.

ஐக்கிய தேசிய கட்சி தமது அதிகாரத்தை பயன்படுத்தி ராஜபக்ஷக்களை கட்டுப்படுத்த முயற்சிக்கவில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்குவதற்கு ஆரம்பித்த பயணத்தை தொடர்ச்சியாக முன்னெடுக்கவே தமது அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

பிறீமா கோழிக்குஞ்சுகளின் வடபிராந்திய அங்கீகாரம் பெற்ற ஏக விநியோகஸ்தர்
**VSP**
**077 704 8972**
(1288)

## 90 ஆம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



அமரர். கந்தசாமி சுந்தரேஸ்வரன்

தோற்றம்
1952 - 10 - 29

மறைவு
2017 - 10 - 24

கடந்த 24.10.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் கந்தசாமித்துரை சுந்தரேஸ்வரன் அவர்களின் 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் நாளையதினம் 22.01.2018 திங்கட்கிழமை அன்று காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் மு.ப. 11.30 மணியளவிலும் இடம்பெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு:** தயவு செய்து இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வி.எம்.றோட்,
பருத்தித்துறை.
தொ.பே.இல: 077 872 8721 (1292)

இங்ஙனம்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இராசையா மகாதேவா



தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா மகாதேவா அவர்கள் (16.01.2018) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா துரையம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (அம்பாறை மணியம்) சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், பாக்கியலட்சுமியின் அன்புக்கணவரும், துரைராசா, காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம் (தெய்வேந்திரம்), பாலச்சந்திரன், இராசேந்திரம் மற்றும் இந்திராணி, இந்திராசு, மல்லிகா ஆகியோரின் சகோதரரும், இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, யோகநாதன், ரஞ்சிதன், ஜெயதாசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரூபன், ரூபி ஆகியோரின் அன்புத் தந்தையும், சற்குணராசா, மதிமலா ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரவீன், மதுமிதா, சினேகா, நிஷா ஆகியோரின் பேரனும், கேசவநாதன், காலஞ்சென்ற இராமேஸ்வரனின் சகலனும், மற்றும் மின்னொளிதேவி, யமுனா, இராஜேஸ்வரி, இராசலட்சுமி, அன்னம், காலஞ்சென்ற சிவசோதிநாதன், சிவாநந்தன், சற்குணநாயகி ஆகியோரின் மைத்துனரும், பொன்னுத்துரை, ரஜினி ஆகியோரின் சம்மந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.01.2018 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கொக்குவிலிலுள்ள அவரது பெறாமகனின் (சுதன்) இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி (மனேச்சர் சுதன்)
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்: சுதன் - 077 345 0591
இந்திரராசா - 077 869 7296
ரூபன் - 077 687 4946
(கனடா - 416-271-6851)

(2480)

## துயர் பகிர்கின்றோம்



மலர்வு
1958 - 08 - 02

உதிர்வு
2017 - 12 - 22

### மகேஸ்வரி சர்வேஸ்வர செவ்வேள்

எமது வித்தியாலய மனையியல், பொருளியல் பாட ஆசிரியரும் ஆசிரியர் நலன்புரிக் கழக செயலாளருமாகவிருந்த அமரர் மகேஸ்வரி சர்வேஸ்வர செவ்வேள் 22.12.2017 அன்று இறைவனடி சேர்ந்தமையையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்,
மானிப்பாய்.

(சி-1264)

## இராசிபலன்

**மீனம்:** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், உறவினர்கள் சிலரின் அன்புக்கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**மேடம்:** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**இடபம்:** புதிய முயற்சிகள் கைகூடும் நாள், உறவினர்கள், நண்பர்கள் வலிய வந்து உதவுவார்கள், மாற்றுக்கருத்துடையோர் மனம் மாறுவர், போசன நன்மையுண்டு.

**மிதுனம்:** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்கு செல்ல வேண்டிய நாள், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**கும்பம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உறவினர்கள் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சந் | இராசிபலன் கிரகநிலை | | ராகு |
| சூரி, சுக் கேது | சந்திராஷ்டமம் பூரம் | | |
| சனி புத | செவ் | குரு. | |

**21.01.2018**
தை 08, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 06.35 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 1.33 மணிவரை
பூரட்டாதி பின்னிரவு 4.59 மணிவரை
சுபநேரம் 9.35-11.05 மணிவரை
இராகுகாலம் 5.05-6.35 மணிவரை
சித்தாமிர்தம்

வளவன்

**கடகம்:** வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், எடுத்த காரியத்தை முடிப்பதில் சில சிரமங்கள் ஏற்படலாம், சிலர் காரணமில்லாமல் உங்கள் மீது கோபப்படுவர்.

**மகரம்:** கல்யாண கனவுகள் நிறைவேறலாம், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், வ்ாக்கு மேன்மையுண்டு, பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**சிம்மம்:** களஸ்திர நன்மையுண்டு, சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், கனவு பலிதமுண்டு, உடல் நலன் சீராகி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.

**தனுசு:** தொலைபேசி வழித் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், அதிகாரிகளின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், சுப செலவுகள் கூடும் நாள்.

**துலாம்:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறலாம், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும், தாய்வழி உறவில் நன்மையுண்டு.

**கன்னி:** கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்,போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன மத பேதங்களைக்கடந்து அனைவரையும் ஒன்றிணைத்து செயற்படுகின்றது ஐ.தே.கட்சி

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசிய கட்சி நாட்டில் இன மத பேதங்களை கடந்து சமூகத்தில் அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து செயற்படுகின்ற கட்சி யென அக் கட்சியின் யாழ். கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



மேலும் பிரதேசத்தின் அபிவிருத்தியை நோக்காக கொண்ட தேர்தலாக இது காணப்பட்டாலும் தற்போதைய சூழ்நிலையில் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாக அமைந்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்ளூராட்சி தேர்தலுக்கான விஞ்ஞாபன வெளியிட்டு வைக்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்து உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

எமது கட்சியானது கடந்த 1946ஆம் ஆண்டு உருவாக்கப்படும் போது நாட்டில் சிறுபான்மை உறுப்பினர்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட கட்சியாகும். அந்த வகையில் தற்போதும் இவ் உள்ளூராட்சி தேர்தலிலும் சமூகத்திலும் அனைத்து மட்டத்திலும் உள்ள மக்களையும் ஒன்றிணைத்து உள்வாங்கியே வேட்பாளர்களை நியமித்துள்ளோம்.

கடந்த காலத்தில் மக்கள் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கும் ஶ்ரீலங்கா சுதந்திர கட்சி போன்றவற்றிற்கு வாக்களித்ததன் ஊடாக எதனை அவர்கள் செய்தார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. ஆனால் நமது ஐக்கிய தேசிய கட்சி புதிய நல்லாட்சி அரசாங்கத்தை கொண்டு வந்து மூன்று ஆண்டுகளில் எத்தனை செய்தது என்பதை எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளோம்.

குறிப்பாக எமது கட்சியின் தலைமையில் அரசாங்கமானது அமைக்கப்பட்டவுடன் நடைபெற்ற முதலாவது தேசிய சுதந்திரதின நிகழ்வில் தமிழில் தேசிய கீதமானது பாடப்பட்டது.

தற்போது வடக்கு கிழக்கு முழுவதும் தமிழில் இசைக்கப்பட்டு வருகின்றது.

தமிழ் மக்களின் பல்லாயிரம் ஏக்கர் காணிகள் மீள கையளிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கேப்பாபிலவு, வலி வடக்கு, சம்பூர் போன்ற பிரதேசங்களில் மக்களது காணிகள் பல மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன. வாழ்வாதார மேம்பாட்டிற்காக 10 இலட்சம் ரூபா நிதி கிராமங்கள் தோறும் ஒதுக்கப்பட்டு அவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவற்றைவிட வீடமைப்புத் திட்டங்கள், சுகாதார போஷாக்கு திட்டங்கள், பெண்களுக்கான உதவித்திட்டங்கள், கல்விக்கான உத வித்திட்டங்கள், விவசாயிகளுக்கான உதவித்திட்டங்கள் போன்றன வழங்கப்பட்டு வருகின்றன.

இவையாவும் நல்லாட்சி அரசாங்கத்தை நாம் ஆட்சிக்கு கொண்டு வந்ததன் ஊடாக குறுகிய நாட்களில் செய்த வேலைத்திட்டங்களாகும்.

எனவே இம் முறை உள்ளூராட்சி தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியினை வெற்றி பெற செய்வதனூடாகவே கிராமிய அபிவிருத்தியுடன் மக்களின் அனைத்து தீர்வுகளுக்கும் அரசாங்கத்துடன் நேரடியாக பேசக் கூடிய ஓர் நிலையை உருவாக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கருகம்பனை இந்து இளைஞர் கழகத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு தமிழ் மன்ற சனசமூக நிலையத்தில் தெல்லிப்பழை இளைஞர் சேவை அதிகாரி வி.கௌதமி முன்னிலையில் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்றது.

இதில் தலைவராக எஸ். கோபிகன், செயலாளராக எஸ்.யமீலா பொருளாராக எஸ்.வேணுஜன அமைப்பாளராக எஸ்.இசைவா ணன் ஆகி யோர் தெரிவு செய்யட்டனர். (இ-10)




## வாய்க்காலுக்குள் ஆட்டோ



(கரணவாய்)

வீதியைக் கடந்த வயோதிபரை காப்பற்றுவதற்காக சடுதியாக திருப்பப்பட்ட ஆட்டோ ஒன்று வாய்க்காலுக்கள் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

நேற்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் மாலுசந்தி வைரவர் ஆலயத்திற்குஅருகாமையில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பிரதாக வீதி வழியாக பயணித்த ஆட்டோ மேற்படி பகுதியில் சென்று கொண்டிருந்த போது வயோதிபர் ஒருவர் வீதியைக் கடந்துள்ளார்.

அவரில் மோதுண்டு விபத்து ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக சடுதியாக திருப்ப முற்பட்ட போது ஆட்டோ அருகில் இருந்த வாய்க்காலுக்குள் பாய்ந்து விபத்துள்ளானது. அதில் யாருக்கும் காயம்ஏற்படவில்லை.(இ-19-60)

## கலை இலக்கிய பண்பாட்டு பெருவிழா

(யாழ்ப்பாணம்)

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கலை இலக்கிய பண்பாட்டு பெருவிழா எதிர் வரும் 27ஆம் திகதி யாழ்ப்பாணம் 'வீரசிங்க மண்டபத்தில் நடைபெறஉள்ளது. இந் நிகழ்வில் சர்வதேச பிரதிநிதிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந் நிகழ்வுக்கான ஒழுங்கு முறைகள் பற்றிய விரிவான கலந்துரையாடல் யாழ்.மாவட்ட சர்வோதய தலைமைக் காரியாலயாத்தில் விழாக்குழுவினரால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் இந்த அமைப்பின் உறுப்பினர்களாக இணைந்து கொள்ளவிரும்புவர்கள் மற்றும் தமிழ் துறைசார்ந்த பெரியோர்கள், மதகுருமார்கள், பல்கலைக்கழகம் சார்ந்தோர் என பலதரப்பினர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-7)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

குருநகர் சென்.ஜேம்ஸ்மகா வித்தியாலயத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் கே. கலியுகம் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில்பிரதம விருந்தினராக புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்பணி ம. ரவிச்சந்திரன் கலந்து கொள்வார். (இ-10-106)

## பால் நிலை சமத்துவம் குறித்து கலந்துரையாடல்





(யாழ்ப்பாணம்)

சொலிடாரிட்டி நிறுவனத்தின் அனுசரணையில் ஆரோக்கியமான வேலைச் சூழல் மற்றும் பால்நிலை சமத்துவம்தொடர்பான கலந்துரையாடல் அண்மையில், யாழ்.மாவட்ட செயலக அரச அதிபர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் சட்டத்தரணிகள், மனித உரிமை ஆணைக்குழு, யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், யாழ்.பல்கலைக்கழக பால்நிலை சமத்துவத்திற்கான செயற்ப்பாட்டு மையம், ஐக்கியநாடுகள் நிறுவனம், அரச தாதியர் சங்கம், அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம், அரச சார்பற்ற நிறுவனம், முகாமைத்துவ உதவியாளர் சேவைச்சங்கம், பொலிஸ்திணைக்கள சிறுவர் பெண்கள் பிரிவு, தொழில் திணைக்களம் என்பனவற்றின் பிரதிநிதிகள் யாழ். மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோ கஸ்தர்களுக்கான இணைப்பாளர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, சொலிடாரிட்டி நிறுவன பால்நிலை சமத்துவம் தொடர்பான ஆலோசகர் ஆகியோர்கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் குறித்த செயற்குழுவின் கடந்த ஆண்டு செயற்பாடுகள் தொடர்பான மீளாய்வும் 2018, 2019 ஆம் ஆண்டுக்கான செயற்திட்ட முன்மொழிவுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-9)



வலித்தூண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் கால்கோள் விழா கடந்த 15ஆம் திகதி நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்க உபதலைவர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி வைத்ததுடன் தரம்-1 மாணவர்கள் வரவேற்கப்படுவதை படங்களில் காணலாம் (படங்கள்:- இளவாலை செய்தியாளர்)

## மஹோற்சவ விஞ்ஞாபனம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்- வண்ணை-மணிக்கூட்டு வீதி ஶ்ரீ அரசடி விநாயகர் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை 22 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.15 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர் ந்து பத்து நாட்கள் நடைபெறவுள்ளன

எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 9.30 மணக்கு தீர்த்தத் திருவிழாவும்இடம்பெறும்.(இ-7)

◆◆◆◆◆◆◆◆◆

திருநெல்வேலி கிழக்கு ஶ்ரீ பூதநாத சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை மறுதினம் செவ்வாய் கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் இடம்பெறும். எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-10-102)

◆◆◆◆◆◆◆◆◆

(ஏழாலை)

களபாவோடை அருள்மிகு வசந்த நாகபூசனி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவம் விஞ்ஞாபனம் நாளை 22ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் அபிஷேக ஆரதானைகளுடன் இடம்பெறும்.

எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழாவும் மறுநாள் 29ஆம் திகதி திங்கட்கிழமை சப்பரதிருவிழாவும் அடுத்தநாள் 30ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தேர்த்திருவிழாவும் 31ஆம் திகதி புதன்கிழமை ஶ்ரீ வசந்த நாக புஷ்கரணி தீர்த்தத்தடாகத்தில் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (இ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையானதொரு
தனித்துவமிக்க பயிற்சி நிலையம்

யாழ் கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- *கேக் ஐசிங்* - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- *உணவு தயாரித்தல்* - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங் கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
- FACIALS *(முக அழகுக்கலை)* Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- *கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்* 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS *(மணப்பெண் அலங்காரங்கள்)* இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள். முறைகளும் பயிற்று விக்கப்படும்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- *பிளவுஸ், சாறி பிளவுஸ், சுரிதார்,* மற்றும் ஆடைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற கிழமை நாள் தையல் பயிற்சிகள்.

**பயிற்சிகள் யாவும் பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படும்!**

கிழமை நாள் மற்றும் சனி, ஞாயிறு பிரிவுகள் 31-01-2018 புதன்கிழமை
(தைப்பூச நாளில்) ஆரம்பமகின்றது
நேரம் 10.00மணி


மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். -இயக்குநர்-

Guru

# மரண அறிவித்தல்

## திரு. இராமு ஜெகதீஸ்வரநாதன்

பிறப்பு: 1945.06.27
இறப்பு: 2018.01.15



(நாதன்-ஞானம் மில் உரிமையாளர்)

யாழ்.கரவெட்டி துன்னாலை மேற்கு ஞானசாரியார் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமு ஜெகதீஸ்வரநாதன் அவர்கள் 15.01.2018 திங்கட்கிழமை அன்று கரவெட்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான V.இராமு இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான கந்தவனம் தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சத்தியலீலா அவர்களின் அன்புக்கணவரும் ஜெகந்தினி(அவுஸ்திரேலியா), நிரஞ்சன் (கரன்-லண்டன்), ரஜீவன் (கண்ணா- லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் கஜேந்திரன், கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் விசாகன், சாருஜன், ஆதனா, அஷ்னா ஆகியோரின் அன்புப் பேரனும் ஜெகதீஸ்வரதேவி, இராமச்சந்திரன், இராமதாஸ், சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற துரைரட்ணம் துரைராஜா,சந்திரலீலா, சமாதானலீலா, சத்தியபாமா, சாந்தா, காலஞ்சென்ற ரட்ணராஜா (ரத்தி), தாமோதரம், இராஜேஸ்வரி, ஜெயமங்களேஸ்வரி, பவானி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21.01.2018 இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேரோண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


துன்னாலை மேற்கு,
கரவெட்டி

தொலைபேசி இல:
021 226 2051
(சத்தியலீலா)

தகவல்:
நிரஞ்சன்
(கரன்-மகன்)

# மரண அறிவித்தல்

## அமரர். அப்பாத்துரை யோகேஸ்வரன்



பிறப்பு: 1937.06.23 இறப்பு: 2018.01.18

(ஈசன் அண்ணா)
ஓய்வுபெற்ற இலங்கை கடற்படை உத்தியோகத்தர்,
இல.14, கணேசபுரம், கிளிநொச்சி)

மூளாயைப் பிறப்பிடமாகவும் இல.14, கணேசபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர். அப்பாத்துரை யோகேஸ்வரன் 18.01.2018 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாத்துரை வள்ளியாச்சி ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பேரம்பலம் காமாட்சிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும் மகாலட்சுமியின் அன்புக் கணவரும் காயத்திரி(லண்டன்), தனறஞ்சன்-பொறியியலாளர்(லண்டன்), மகிந்தன்- வைத்தியர்(அவுஸ்திரேலியா), தனேஸ்குமார்-பொறியியலாளர் (லண்டன்), தூஜேந்தினி-பட்டதாரி, உணவு விஞ்ஞானமும் போசாக்கும் (அவுஸ்திரேலியா), கௌதமன்-பேராதனை பல்கலைக்கழக பல்மருத்துவபீட மாணவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் துதிபவநந்தன்(லண்டன்), தாரணி (லண்டன்), கிருத்திகா (அவுஸ்திரேலியா), சுகந்தினி(லண்டன்), நகுலன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அமரர் முத்தையா, நாகேஸ்வரி (அவுஸ்திரேலியா), அமரர் கணேஸ்வரன், அமரர் விஷ்ணுநாதன், அம்பிகாவதி (வட்டுக்கோட்டை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நாகேஸ்வரி (அவுஸ்திரேலியா), நாகராசா(அவுஸ்திரேலியா), சுசீலாதேவி (திருநெல்வேலி), கணேசரட்ணம் (வட்டுக்கோட்டை), அமரர். இராமலிங்கம், சேதுகாவலிங்கம் (மூளாய்), பரமலிங்கம்(அச்சுவேலி) ஆகியோரின் மைத்துனரும், லக்ஷிகா, பிரவீனா, தனுஜன், ரிஷ்வினி, ராகவன், சகர்ஷன், சர்னிகா, கிருஷாந், அஷ்மிகா ஆகியோரின் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 21.01.2018 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் திருநகர் இந்து மயானத்திற்கு பி.ப. 2.00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
021 228 3639, 077 776 5941.

தகவல்,
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## அமரர். சிற்றம்பலம் குமாரசாமி



பிறப்பு: 1934.03.11 இறப்பு: 2018.01.19

(இளைப்பாறிய ஆசிரியர்- யா/மீசாலை விக்னேஸ்வரா ம.வி,
யா/வரணி மத்திய கல்லூரி,யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.)

வரணி வடக்கு மாசேரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் குமாரசாமி அவர்கள் 2018.01.19 (வெள்ளிக்கிழமை) அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் (விதானையார்), பாறுபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், அருந்தவநாயகி (கனடா) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முருகேசு (ஆசிரியர்), தங்கநேசம் (கொடிகாமம்) அவர்களின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான சி.வேலுப்பிள்ளை (கூட்டுறவு தலைமைக் காரியாலய பரிசோதகர்), மெ.பராசக்திப்பிள்ளை, சி.நடராசபிள்ளை (விதானையார்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காண்டீபன் (கனடா), கவிதா (நிதிஉதவியாளர், மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்-யாழ்ப்பாணம்), பார்த்தீபன்(கனடா), பிரதீபன்(கனடா)ஆகியோரின் அன்புத் தந்தையும், கா.யாழினி(கனடா), பா.முரளீதரன் (விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி), பா.தர்மா(கனடா), பி.கௌதமி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஹரிஸ்,நிகேஸ்(கனடா), சஞ்சீவன் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன்), அசார் (யாழ். இந்து.ஆரம்பப் பாடசாலை), விதுஷன், ஹரிணி(கனடா), அக்சயா(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22.01.2018 திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் இல.53-சிவகுருநாதர் வீதி, பிறவுண்வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.53, சிவகுருநாதர் வீதி,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(2486)

தகவல்.
குடும்பத்தினர். (077 798 9830)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாந்தோட்டையில் சீனக் கடற்படைத் தளம்

## ஜப்பானிய தளபதி எச்சரிக்கை



(டில்லி)

இந்தியப் பெருங்கடலில் சீனாவின் கடற்படை நடவடிக்கைகள் விரிவடைந்து வருவது குறித்து ஜப்பானிய கூட்டுப்படைகளின் தளபதி அட்மிரல்கட்சுரோஷி கவானோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

டில்லியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "சீனக் கடற்படை தனது நடவடிக்கைகளை உறுதியாக விரிவுபடுத்தி வருகிறது.

இந்தியாவைச் சுற்றி கட்டமைப்புகளை உருவாக்குவதற்காக சீனா தனது நிதியை முதலீடு செய்து வருகிறது. பிராந்தியத்தில் தனது இராணுவத் தளங்களின் வலையமைப்பை உறுதியாக விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறது.

சீனாவின் கடற்படை விரிவாக்க மூலோபாயத்துக்கு உதவும் கட்டமைப்புகளுக்கு உதாரணமாக, பாகிஸ்தானின் குவடார் துறைமுகம், சீனாவின் முதலீட்டுடன் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த ஓகஸ்ட் மாதம் டிஜிபோட்டியில், சீனாவின் முதலாவது கடல் கடந்த கடற்படைத் தளம் திறக்கப்பட்டுள்ளது. இலங்கையில் அம்பாந்தோட்டை துறைமுகம், 99 ஆண்டு குத்தகைக்காக சீனாவுக்கு கடந்த டிசெம்பரில் வழங்கப்பட்டுள்ளது.

டிஜிபோட்டியில் உள்ள சீன கடற்படைத் தளம் இந்தியப் பெருங்கடலில், அந்த நாட்டின் கடல் நடவடிக்கைகளுக்கு வெளிப்படையாகவே உதவியாக இருக்கும்.

மெடிட்ரேரியன் கடலைச் சுற்றிய பகுதிக்கு இலகுவாகச் சென்றடையும் வகையில், சீன கடற்படை தனது செயற்பாடுகளை உறுதியாக விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறது.

அம்பாந்தோட்டை துறைமுகம் ஒரு வர்த்தக கட்டுமானமே என்று இலங்கையும், சீனாவும் கூறுகின்றன.

ஆனால், 99 ஆண்டு குத்தகை என்பது சீனாவின் இராணுவ முன்னெடுப்புக்கான காத்திரமான நகர்வாகவே மாற்றியுள்ளது.

சீனா தனது கடல் கடந்த இரண்டாவது தளத்தை தெற்காசியாவில் அம்பாந்தோட்டையில் கட்டியெழுப்பினால், சீன கடற்படையின் ஆற்றல்கள் புதிய மட்டங்களுக்கு அதிகரிக்கக் கூடும்.

இத்தகைய விநியோக வசதிகளை பயன்படுத்தினால், சீனக் கடற்படைக் கப்பல்கள் தமது நாட்டுக்குத் திரும்பாமல் நீண்ட காலத்துக்கு இந்தியப் பெருங்கடலில் தங்கியிருக்க முடியும்.

சீனா தனது அணுசக்தி நீர்மூழ்கிகள் மற்றும் கடற்படைக் கப்பல்களை அண்மைய ஆண்டுகளாக இந்தியப் பெருங்கடலில் தொடர்ச்சியாக நிறுத்தி வருகிறது.

எமது முக்கியமான கப்பல் பாதைகள் இந்திய பெருங்கடல் மற்றும் தென் சீனக் கடல் வழியாகவே இருக்கின்றன.

இந்தப் பிராந்தியத்தில் சீனாவின் கடற்படை விரிவாக்கத்தை எதிர்கொள்ளும் வகையில், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகளுடன் ஜப்பான் இணைந்து பணியாற்றும்.

தற்போதுள்ளது போன்ற சீனாவின் இராணுவ செலவின விரிவாக்கம், தொடர்ந்தால், ஜப்பான் தீவிரமான பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்கொள்ளும். அந்தச் சூழலைக் கணிக்க முடியாது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## சாய்ந்தமருதுக்கு உள்ளூராட்சி மன்றை வழங்க ஜனாதிபதி மைத்திரி பணிப்புரை

### அமைச்சர் பைசர் தகவல்



(ஏறாவூர்)

சாய்ந்தமருதுக்கு தனியான உள்ளூராட்சி மன்றம் வழங்கு மாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

சாய்ந்தமருது பேர்ல்ஸ் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற, சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றம் தொடர்பான விசேட கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"சாய்ந்தமருது பகுதியை பிரதிநிதித்துவம் செய்கின்ற கட்சிகளின் தலைவர்களான அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன் மற்றும் பிரதி அமைச்சர் ஹரீஸ் போன்றோர் சாய்ந்தமருது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறி, உங்களையும் என்னையும் ஏமாற்றி யுள்ளனர். இங்கு உங்களுக்கு ஒரு வாக்குறுதியை தந்து விட்டு, என்னிடம் வந்து இன்னொன்றை கூறுவார்கள். இவர்கள் உண்மைக்கு உண்மையாக செயற்பட்டிருந்தால் சாய்ந்தமருத்துக்கான உள்ளூராட்சி மன்றத்தை எப்போதோ ஏற்படுத்தித் தந்திருப் பேன். இந்த விடயம் நிறைவேற் றப்படாமல் போன மைக்கு நான் மிகவும் வேதனையடைகின்றேன். இங்கு வாக்குறுதியளித்து விட்டு, என்னிடம் வந்து அதனை செய்து கொடுக்க வேண்டாம் என்று வற்புறுத்தினார்கள்.


கல்முனை மாநகர சபையை நான்காக பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டதால் சாய்ந்த மருத்துக்கு தனியாக உள் ளூராட்சி மன்றத்தை உருவாக்க நான் எடுத்த நடவடிக்கை தடைப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அரசியல் வாதிகளை கொலை செய்யாத அரசியல் கலாசாரம் உருவாக்கம்

### அமைச்சர் ஹக்கீம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

எதிராளி அரசியல்வாதிகளை படுகொலை செய்யாத அரசியல் கலாசாரம் உருவாக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.



மஹரவெவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த மூன்று ஆண்டுகளில் என்ன செய்தீர்கள் என பலர் கேள்வி எழுப்புகின்றனர்.

எழுபதுகள் முதல் தொடர்ச்சியாக பார்த்தால் எதிராளி அரசியல்வாதிகள் படுகொலை செய்யப்படாத மூன்று ஆண்டுகள் எமது ஆட்சிக் காலத்திலே ஆகும்.

இந்த மூன்று ஆண்டுகளில் சுயாதீன ஆணைக் குழுக்களை நிறுவுதல், ஊடக சுதந்திரத்தை உறுதி செய்தல், தகவல் அறிந்து கொள்ளும் சட்டம் போன்றவற்றை உருவாக்க முடிந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மகிந்தானந்த எம்.பிக்கு எதிரான வழக்கு வாபஸ்

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கொன்று திரும்பப் பெறப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் நேரத்தில் 53 மில்லியன் ரூபா பெறுமதியான கரம் போட்களை விநியோகித்தமை சம்பந்தமாக முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளரான அஜித் பிரசன்ன ஆகியோருக்கு எதிராக இலஞ்ச ஆணைக்குழு தாக்கல் செய்திருந்த வழக்கே நேற்று முன்தினம் திரும்பப்பெறப் பட்டுள்ளது.

வழக்கில் மற்றுமொரு சந்தேகநபரின் பெயரை சேர்த்த பின்னர், மூன்று பேருக்கு எதிராக மீண்டும் வழக்குத் தொடரப்படும் என இலஞ்ச ஆணைக்குழு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. (இ-7)

## மட்டக்களப்பில் வேட்பாளரின் அலுவலகத்தின் மீது தாக்குதல்



மட்டக்களப்பு மாநகரசபை தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளரின் அலுவலகத்தின் மீது, நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக, மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபை தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் சார்பில் 6 ஆம் வட்டாரம் கறுவப் பங்கேணி-இருதயபுரத்தில் போட்டியிடும் வேட்பாளர் காந்தனின் அலுவலகம் மீதே, இந்தத் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது. இதன்போது அலுவலகத்தின் முன்பக்கமாகவுள்ள பதாகை எரியூட்டப்பட்டுள்ளது.

வீதிகளில் எரிந்து கொண்டிருந்த மின் குமிழ்கள் அணைக்கப்பட்டே, தமது அலுவலகத்தில் இருந்த பதாகையினை எரியூட்டியுள்ளதாக, வேட்பாளர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

தமது வெற்றியைப் பொறுத்துக் கொள்ள முடியாத வர்கள் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகவும் வேட்பாளர் காந்தன் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீமைக்கிழுவை மரத்திலிருந்து மின்சார உற்பத்தித் திட்டம்

## சீனா-இலங்கை இடையே ஒப்பந்தம்

(கொழும்பு)

சீமைக்கிழுவை (கிளிரிசீ டியா) மரத்தை எரிபொருளா கப் பயன்படுத்தி, பசுமை மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்றை இலங்கையுடன் இணைந்து சீனா மேற்கொள்ளவுள்ளது.

மொனராகல மாவட்டத் தில், 70 ஆயிரம் மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வகையில் இந்த மின் திட்டம் அமைக்கப்பட்வுள்ளது.

சீனாவின் Beijing Full Dimension Power Tech Company Ltd, Nanjing Turbine and Electric Machinery Group Company Ltd மற்றும் Electric Machi nery Group Company Ltd, ஆகிய நிறுவனங்கள், இலங்கையின், IMS Holdings நிறுவனத்துடன் இணைந்து இந்த மின் திட்டத்தை அமைக்கவுள்ளன.

இதற்கான உடன்பாடு நேற்று முன்தினம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

சீமைக்கிழுவை எனப்படும் கிளிரிசீடியா மரத்தை எரித்து, பெறப்படும் எரிபொருளில் இருந்தே, மின்சாரம் தயாரிக்கப்படவுள்ளது.

இதன்மூலம், நூற்றுக்கணக்கான விவசாயிகள் பயனடைவர். ஆண்டுக்கு 3.2 மில்லியன் டொலருக்கு சீமைக்கிழுவை மரங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் மூலம், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் மின்சார உற்பத்தி, தொடங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 140 | 100 | 120 | 120 |
| தக்காளி | 80 | 60 | 60 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 | 40 |
| கோவா | 50 | 70 | 80 | 80 |
| கரட் | 60 | 100 | 200 | 100 |
| பூசணி | 80 | 40 | 80 | 50 |
| புடோல் | 60 | 60 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 350 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 160 | 160 |
| பாகற்காய் | 180 | 180 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 140 | 120 | 120 | 120 |
| லீக்ஸ் | 180 | 220 | 240 | 200 |
| பீற்றூட் | 80 | 80 | 100 | 120 |
| கறிமிளகாய் | 140 | 150 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 600 | 800 | 800 | — |
| போஞ்சி | 120 | 120 | 120 | 180 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 60 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 40 | 20 |
| தேசிக்காய் | 50 | 50 | 40 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 75 | 75 | 100 |
| இராசவள்ளி | 180 | 160 | 200 | 180 |
| வெங்காயப்பூ | 150 | 280 | 240 | 200 |
| முள்ளங்கி | 30 | 100 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 30 | 60 | 80 | 70 |

## பாட்டியின் தங்கச்சங்கிலியை அடகு வைத்து நண்பர்களுக்கு பியர் விருந்து வைத்த பேரன்

(நீர்கொழும்பு)

தனது பாட்டியின் தங்க சங்கி லியை திருடிச் சென்று அடகு வைத்த பணத்தில் நண்பர்களுக்கு பியர் விருந்து வைத்த நபர் நீர்கொழும்பு பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார். குறித்த சந்தேகநபர் 93 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள தங்கச் சங்கிலியை 80 ஆயிரம் ரூபாவிற்கு அடகு வைத்துள்ளார்.

20 வயது பேரன் இந்தப் பெண் ணின் மூத்த மகளின் மகன் என தெரிவிக்கப்படுகிறது.

தனிமையில் வாழ்ந்து வந்த குறித்த வயோதிபப் பெண்ணின் வீட்டிற்குச் சென்ற அவரின் பேரன் இந்த திருட்டினை மேற்கொண்டு நண்பர்களுக்கு பியர் விருந்து வைத்துள்ளார்.

நீர்கொழும்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர், நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (இ-7)

## விகாரையில் தீவிபத்து பிக்கு ஒருவர் காயம்!



(கொழும்பு)

மத்துகம - யடதொல அளுத்கம்கொட விகாரையில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக வெலிபென்ன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்துச் சம்பவம் நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதன்போது தீயினை அணைக்க முற்பட்ட பிக்கு ஒருவர் தீக் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் களுத்துறை - நாகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும், இந்த தீ விபத்தினால் விகாரையில் பிக்குகள் தங்குமிடம் முற்றாக சேதமடைந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## 28 ஆயிரம் ரூபாவை மோசடி செய்து தப்பிச் செல்ல முயன்ற 2 பேர் கைது

(கொழும்பு)

மாரவில - கடுதேரிய பிரதேசத்தில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் 28 ஆயிரம் ரூபாவை மோசடி செய்து தப்பிச் செல்ல முயன்ற 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த 2 பேரும் ஈரான் நாட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் இரவு நீர்கொழும்பு பிரதேசத்தில் சுற்றுலா விடுதி ஒன்றில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் குறித்து மாரவில பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-7)

## யானைகளின் மர்ம மரணம் தொடர்கிறது

(ஏறாவூர்)

மட்டக்களப்பு- வெல்லாவெளி பிரதேசத்துக்குட்பட்ட திக்கோடை காட்டுப் பகுதியில் மர்மமான முறையில் உயிரிந்த நிலையில் யானை ஒன்று வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த யானை சுமார் 35 வயது மதிக்கத்தக்க ஆண் யானை எனவும், யானை எவ்வாறு உயிரிழந்துள்ளது என்பது தொடர்பான பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் அதன் பின்னரே இறப்புக்கான காரணம் தெரியவரும் எனவும் வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள பிரதேச சுற்றுவட்டப் பொறுப்பதிகாரி ஏ.ஏ. ஹலீம் தெரிவித்துள்ளார்.

இப் பிரதேசத்தை அண்டிய தாந்தாமலை காட்டுப் பகுதியில் கடந்த ஒரு வாரத்தினுள் மற்றுமோர் காட்டு யானை மர்மமான முறையில் இறந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பிணைமுறி மோசடி குறித்து கூட்டு எதிரணி கணக்கெடுப்பு




(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணை முறி மோசடி குறித்து கூட்டு எதிர்க் கட்சியினால் கணக்கெடுப்பு ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பொருளாதார ஆராய்ச்சி பிரிவினால் இவ்வாறான கணக்கெடுப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிசிர ஜயகொடி தெரிவித்தார். (இ-7)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 31செவ் 4 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:BSc, CIMA<br>அரசதொழில்<br>தொ.இ: B/8194 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: CBF, DBF/<br>வங்கியாளர்<br>தொ.இ: G/7448 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 6'3"<br>தகைமை/தொழில்:A/L/வியாபாரம்<br>தொ.இ: B/8195 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்: 167cm<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ: G/7449 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 18<br>உயரம்: 178cm<br>தகைமை/தொழில்:BSc, MCA<br>ஆசிரியர் இந்தியா<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/8199 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 51<br>கி.பா: சூரிசெவ் 4 இல்<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ: G/7453 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 30<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BED/ஆசிரியர்<br>தொ.இ: B/5777 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/7457 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நடக்காதென்பார் நடந்துவிடும்'

## கம்பவாரிதி இ.ஜெயராஜ் 3

(நேற்றைய தொடர்ச்சி)

அரசியற்சபையின் பெரும்பான்மை அபிப்பிராயம் பெறப்பட்டே,

இச்சபைகளுக்கான உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

இதையெல்லாம் ஊடக நண்பன் சொல்லச்சொல்ல,என் உடம்பெல்லாம் புல்லரித்து விட்டது போங்கள். உங்கள் நிலையும் அதுவாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். இவ்வளவும் தானா? என்றேன் நண்பனிடம்.

என்ன அவசரப்படுகிறாய் கொஞ்சம் பொறு என்றவன்,

மேலும் சில செய்திகளைச் சொன்னான்.

அவன் சொன்னவற்றைக் கேட்டு,

இத்தனை ஆற்றல்களையும் வைத்துக் கொண்டா,நம் தலை





வர்கள் இதுவரை சும்மா இருந்தார்கள் என ஆச்சரியப்பட்டேன். அவன் சொன்னவற்றையும் சொல்லி முடித்துவிடுகிறேன்.

மேற்படி சபைகளைத் தவிர, தேர்ந்தெடுக்கப்பட்ட இம்மொத்த சபை அங்கத்தவர்களை உள்ளடக்கி,அரசியற்சபை, மக்கள்சபை என இருவகையான சபைகளை,

இக்கூட்டமைப்பினுள் உருவாக்குவார்களாம்.

இவற்றுள் அரசியற்சபை, இன முன்னேற்றம் சம்பந்தமான அனைத்து முடிவுகளையும் தீர்மானிக்கு மாம்.

மக்கள் சபை அரசியற்சபையை சரியாக வழிநடத்தும் பொறுப்பினைக் கொண்டிருக்குமாம்.

அரசியற்சபையால் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள்,

மக்கள் சபையால் ஏகமானதாகவோ பெரும்பான்மை யாகவோ அங்கீகரிக்கப்பட்ட பின்பே, நடை முறைப்படுத்தப்படுமாம்.

மேற்படி அரசியற்சபையில் 9 கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும்,

பாராளுமன்ற, மாகாணசபை, உள்ளூராட்சிசபை உறுப்பினர்களும் அங்கம் வகிப்பார்களாம்.

முரண்பாடுகள் ஏற்படின் வாக்களிப்பில்,

பாராளுமன்றத் தலைவர்களுக்கு ஐந்து வாக்குகளும்,

மாகாணசபை உறுப்பினர்களுக்கு மூன்று வாக்குகளும்,

உள்ளூராட்சி சபை உறுப்பினர் களுக்கு ஒரு வாக்கும் வழங்க ப்படுமாம்.

அவர்கள் அனைவரும் ஒன்று கூடி,

ஏகமனதாக அல்லது பெரும்பான்மையாக எடுக்கும் முடிவுகள்,

மக்கள்சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, பெரும்பான்மை பற்றி அங்கீகரிக்கப்பட்ட பின்பே,அவை நடைமுறைப்படுத்தப்படுமாம்.

மக்கள்சபையில் மேற்படி பதினைந்து குழுக்களிலும் உள்ள ஒவ்வொருவர் அங்கம் வகிப்பார்களாம்.

அங்கம் வகிக்கும் உறுப்பினரை அந்தத்தச் சபையினரே தேர்ந்தெடுத்து,

மக்கள்சபைக்கு அனுப்பிவைப் பார்களாம்.

அரசியல்சபை, மக்கள்சபை ஆகியவற்றின் கூட்டங்களும்,

அவ்விரண்டு சபைகளும் இணைந்து நடத்தும் கூட்டமும் மாதம் ஒருதரம் நடத்தப்படுமாம்.

மக்கள் சபையில் அமைந்துள்ள பதினைந்து குழுக்களும்,

வாரந்தோறும் தனித்தனி சந்தித்து,தத்தம் துறை சார்ந்த மக்கள் நலம் பற்றிய திட்டங்களை வடிவ மைக்குமாம்.

அங்ஙனம் அவர்களால் வடிவ மைக்கப்படும் திட்டங்கள்,

அரசியல்சபை, மக்கள்சபை ஆகியவை இணைந்து நடத்தும் கூட்டங்களில்,

பெரும்பான்மை பற்றி அங்கீகரிக்கப்பட்ட பின்,

அத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை,

அரசியல்சபை ஏற்றுக்கொள்ளுமாம்.

மாகாணசபை, உள்ளூராட்சி சபை ஆகியவற்றில் எதிரணிகள் இருக்கும் வாய்ப்பு பெரும்பாலும் இல்லாமல் போவ தால்,மேற்படி கூட்டமைப்பின் உறுப்பினர்களே, கொண்டு வரப்படும் திட்டங்களை திறந்த மனதோடு விவாதித்து மக்கள் நலம் நோக்கி அத்தி ட்டங்களை நெறிப்படுத்த வேண்டும் என்றும், தலை வர்கள் முடிவு செய்தி ருக்கிறா ர்களாம்.

உங்கள் மனநிலை எப்படியோ தெரியவில்லை. மேற் சொன்ன செய்திகளை ஊடக நண்பன் விபரித்ததும்,என் கால்கள் தரையிலிருந்து மேலே கிளம்பிப் பறப்பதாய் உணர் ந்தேன்.

இனி என்ன? ஈழத்தமி ழினத்தை எவராலும் அசைக்க முடியாது.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்று தலைவர்கள் உணர் ந்து கொண்டார்கள். தலைவர்கள் உணர்ந்தால் இ[illegible] மக்களும் உணர்வார்கள்.

'அவன் கெட்ட வன்', 'இவன் நல்லவன்' என்று பிரிவுகள் பேசி,

நம்மை நாமே பலவீனப்படுத்தும் துன்பம் இனி தொலைந்து போகும்.

ஆளுக்கொருவராய் அறிக்கைகள் விட்டு சீர்குலைந்த நம் இனம்,

இனி எதிரிகள் உள் நுழையாவண்ணம் இறுக்கமுறும்.

ஒற்றுமைப் பலத்தை எவர் தான் மதிக்காமல் இருக்கமுடியும்?

தமிழர்கள் தலைநிமிரப் போவதை எவராலும் இனி தடுக்க முடியாது, என்றெல்லாம் எண்ணி என் மனம் துள்ளியது.

'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்று, உரக்கக் கூவியபடி உற்சாகத்தில் ஒரு துள்ளுத் துள்ளினேன்.

'தொப்படீடீடீர்' என்று ஒரு சத்தம்.முதுகு கையெல்லாம் ஒரே வலி.

என்ன நடந்தது என்று நிதானிப்பதற்கு முன்?

வீட்டில் இருந்தவர்கள் எல்லாம் அறைக்குள் ஓடி வந்தா ர்கள்.

தரையில் இழுத்துப் போடப்பட்ட திமிங்கலம் போல,

கட்டிலால் நிலத்தில் விழுந்து கிடக்கும் என்னைப் பார்த்து,

'என்ன?', 'என்ன?' என்று எல்லோரும் பதறினார்கள்.

அரைத்தூக்கத்தில் இருந்த நான்,'ஆர் விழுந்தால் என்ன? தமிழினம் இனித் தலைநிமிர்ந்துவிடும்,நம் தலைவர்கள் ஒன்றுபட்டு விட்டார்கள், வாழ்க! தமிழ் இன உரிமை மீட்புக் கூட்டமைப்பு' என்று உரத்துக் கூவ, எல்லோரும் என்னைக் கவலையாய்ப் பார்த்தார்கள்.

'தலையில் அடிபட்டிருக்கும் போல,ஆளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவம்' என்று டாக்டர் நண்பர் சொல்ல,

ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொருவராய்ப் பிடித்து என் னைத் தூக்க முனைகிறார்கள்.

முழுமையாய்த் துயில் கலைய, அப்போதுதான் நான் கண்டது கனவு என்பதும்,

கனவில் துள்ளிய துள்ளலில் கட்டிலால் விழுந்திருக்கிறேன் என்பதும் தெரிகிறது. கண்ணோரத்தில் கண்ணீர்.

விழுந்த வலியால் அல்ல. இனிய கனவு முடிந்த வலியால்.


கனவிலாவது நல்லதைக் கண்டேனே! கனவு தான் வெற்றியின் முதல்படி என்றார் அப்துல்கலாம். யார் கண்டது? தமி ழர்க்கு நல்ல காலம் வரும் போது,என் கனவும் நனவாகும் போல!.

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை". (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊவா மாகாண முதலமைச்சர் சாமர மண்டியிடச் செய்தது உண்மையே!

## அதிபர் கண்ணீருடன் ஒப்புதல்



(கொழும்பு)

தமது சிபாரிசைப் புறக்கணித்த பாடசாலை அதிபரை ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தன் முன் மண்டியிடச் செய்தது உண்மையே என்பது அம்பலமாகியுள்ளது. ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் மற்றும் மாகாண கல்வி வலய அதிகாரிகள் முன்னிலையில், பாதிக்கப்பட்ட பாடசாலை அதிபரே இதை உறுதிசெய்துள்ளார்.

பதுளை தமிழ்ப் பெண்கள் பாடசாலை அதிபர் ஆர்.பவானிக்கு, ஊவா மாகாண முதலமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

அந்தக்கடிதத்தைக்கொண்டு வரும் பிள்ளையை பாடசாலையில் இணைத்துக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் பாடசாலை விதிகளுக்கு அமைவாக இல்லாத காரணத்தால் அந்தக் கடிதத்தை ஏற்க மறுத்ததுடன், குறித்த பிள்ளையை பாடசாலையில் அனுமதிக்கவும் மறுத்துவிட்டார்.

இதனால் கோபமடைந்த முதலமைச்சர் சாமர சம்பத், தமது அதிகாரிகளை அனுப்பி அதிபரை தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு அழைத்து வந்து, தன் முன் மண்டியிடச் செய்தார்.

இச்செய்தி ஊடகத்தில்வெளியானது. அது குறித்த குரல் பதிவு ஒன்றையும் அதிபர் அளித்திருந்தார்.

எனினும் தேர்தல் இலாபங்களுக்காக தாம் மிரட்டப்பட்டே தமது குரல் பதிவு செய்யப்பட்டது என்று அதிபர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் குறித்த பாடசாலைக்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் உட்பட கல்வி வலய அதிகாரிகள் பலர் முன்னிலையில், தாம் மிரட்டப்பட்டதும் மண்டியிடச் செய்யப்பட்டதும் உண்மையே என அதிபர் கண்ணீருடன் தெரிவித்துள்ளார்.

"என்னைத் தனது அலுவலகத்துக்கு வரவழைத்த மாகாண கல்விச் செயலாளர், முதலமைச்சர் குறித்த குரல் பதிவை வழங்கியதற்காக என்னைக் கடிந்து கொண்டார். என்னை மிரட்டியே அந்தப் பதிவு மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறினார். அவரது மிரட்டலுக்குப் பணிந்தே நான் அவ்வாறு செய்திருந்தேன்.

"உண்மையில், என்னைத் தமது இல்லத்துக்கு வரவழைத்த முதலமைச்சர் என்னைக் கண்டபடி திட்டினார். என்ன, ஏது என்று கேட்பதற்குள் கடுமையாகத் திட்ட ஆரம்பித்துவிட்டார். கடைசியில் என்னை மண்டியிடச் செய்த பின்னரே அவரது கோபம் அடங்கியது" என, குறித்த அதிபர் தெரிவித்துள்ளார். (இ-7)

# தமிழர் விடயத்தில் கண்மூடித்தனமாக செயற்படுவோரை ஓரங்கட்ட வேண்டும்

## துரைராஜசிங்கம் கூறுகிறார்

(ஏறாவூர்)

தமிழ் மக்களை மேலும் வேதனைக்கு உட்படுத்தும் வகையில் கண்மூடித்தனமாக செயற்படுவோரை ஓரங்கட்ட வேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகரசபை தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர் சிவம் பாக்கியநாதனின் தேர்தல் அலுவலக திறப்பு விழாவும் பரப்புரை கூட்டமும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"யார் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினை விட்டுச் சென்றாலும் புதியவர்களை மக்கள் உருவாக்கிக்கொண்டே இருப்பார்கள். யார் சென்றாலும் அவர்கள் கைவிடப்பட்டவர்களாகவே கருதப்படுவார்கள்.

தமிழ் மக்களின் தொடர்ச்சியான ஆணையைப் பெற்றிருப்பது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு. தற்போது நாடாளுமன்றத்தில் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நாங்கள் கூறிக்கொண்டிருக்கும் விடுதலை என்னும் சொல்லுக்கான' அடைவு புதிய அரசியலமைப்பு உருவாக்கமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உடனடி நடவடிக்கை வேண்டும்

## ஆசிரியர் சங்கங்கள் வலியுறுத்தல்

(கொழும்பு)

பதுளை தமிழ் மகளிர் வித்தியாலய அதிபரை ஊவா மாகாண முதலமைச்சர் முன் மண்டியிடச் செய்த விவகாரத்தில், அதிகாரிகள் உடனடியாகத் தலையிட்டு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆசிரியர் சங்கங்கள் கோரிக்கை முன்வைத்துள்ளன.

தான் மண்டியிடச் செய்தமை உண்மையே எனவும் ஊவா மாகாண கல்வித் துறை செயலாளரின் மிரட்டலையடுத்தே அப்படியொரு சம்பவம் நடைபெறவில்லை என்று தாம் கூற நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் பாதிக்கப்பட்ட அதிபர் ஆர்.பவானி தெரிவித்தார்.

குறித்த பாடசாலைக்கு நேற்று முன்தினம் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் விஜயம் செய்தபோதே இவ்விவகாரம் வெளியே தெரியவந்தது.

இந்நிலையிலேயே ஆசிரியர் சங்கங்கள் மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளன. (இ-7)

# தேர்தலை மையப்படுத்தி பொருட்கள் விநியோகித்தால் சட்ட நடவடிக்கை

## மகிந்த தேசப்பிரிய எச்சரிக்கை



(கொழும்பு)

தேர்தலை மையப்படுத்தி பொருட்கள் விநியோகித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இது குறித்து கண்டறிய தேர்தல்கள் ஆணைக் குழுவினால் விசேட குழு அமர்த்தப்பட்டு கண்காணிக்கப்படுவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய எச்சரித்தார்.

தேர்தலை மையப்படுத்தி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொருட்களை விநியோகிப்பவர்களுக்கு எதிராக முறைப்பாடு கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதன் தலைவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மகிந்த தலைமையில் இடம்பெற்ற பிரபல நடிகையின் திருமணம்





(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் பிரபல சிங்கள தொலைக்காட்சி நாடக நடிகை அஞ்ஜ°லா ராஜபக்ஷ திருமணம் செய்து கொண்டுள்ளார்.

இந்த திருமணம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதுடன், பதிவுத் திருமண சான்றிதழில் மகிந்த ராஜபக்ஷ கையெழுத்திட்டுள்ளார்.

அஞ்ஜ°லா ராஜபக்ஷ ஏற்கனவே திருமணமாகி விவகாரத்துப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வில்பத்துவில் சட்டவிரோத மணல் அகழ்வு



(கொழும்பு)

வில்பத்து வனப்பகுதிக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தில் இருந்து சட்டவிரோதமான முறையில் குழுவொன்று மணல் அள்ளிச் செல்வதாக வனப் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் கரையோர வள முகாமைத்துவ நிறுவனம் என்பவற்றின் அனுமதி பெற்றே தாம் மணல் அகழ்வதாக, போலி ஆவணங்களைக் காண்பித்து மேற்படி நபர்கள் மணல் அள்ளிச் செல்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதுபோன்ற நடவடிக்கைகள் சட்டவிரோதமானவை எனவும் தடுக்கப்பட வேண்டியவை எனவும் வலியுறுத்தியிருக்கும் வனத்துறை இயக்குநர் நாயகம், குறித்த நபர்கள்மீது நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளார். (இ-7)

# எந்தவொரு வழக்கிற்கும் 3வருடங்களுக்குள் தீர்ப்பு

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

எந்தவொரு வழக்கின் தீர்ப்பும் மூன்று வருடங்களுக்குள் வழங்கப்படவேண்டும் என்ற புதிய திருத்தத்தை சட்டத்துறையில் அமுல்படுத்தவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஹோமாகமயில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"ஊழல்வாதிகள் மீது வழக்குத் தொடர்ந்தாலும் அது எட்டு வருடங்கள் வரை முடிவடையாது என்று கூறுகிறார்கள். இதற்காகவே, புதிய சட்ட திருத்தம் ஒன்றைக் கொண்டு வரவுள்ளோம்.

"அதன்படி, பொலிஸ் ஆவணங்களை நீதிபதிகளே நேரடியாகச் சரிபார்த்து அவற்றை உச்ச நீதிமன்றம் வரை அனுப்ப முடியும். அவ்வாறு அனுப்பப்படும் வழக்குகளை மூவர் அடங்கிய அமர்வு விசாரணை செய்யும். ஒத்திவைப்புகள் எதுவுமின்றி, அடுத்தடுத்த நாட்கள் தொடர்ச்சியாக இந்த விசாரணைகள் நடத்தப்பட்டு தீர்ப்பு அளிக்கப்படும்.

"தேவைப்பட்டால் ஒன்றுக்கு மேற்பட்ட நீதிமன்றங்களையும் உருவாக்கி வழக்குகளை விசாரணை செய்ய வழிவகை செய்யப்படும். இதன்மூலம், எந்தவொரு வழக்கிலும் ஆகக் கூடியது மூன்று வருடங்களுக்குள் தீர்ப்பு வழங்கப்பட்டுவிடும்" என பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிமன்ற அபராதங்கள்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப்பகுதியில் 15 ஆயிரம் மல்லிலீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டவருக்கு 80 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 15ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு வழக்குப்பதிவு செய்த புதுக்குடியிருப்புப் பொலிஸார் குறித்த நபரை கடந்த 18ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 80 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

★★★★★★★★★★★★★★★

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றியவருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச்சென்ற ஒருவரைக்கைது செய்து அவருக்கு வழக்குப்பதிவு செய்த புதுக்குடியிருப்புப் பொலிஸார் குறித்த நபரை கடந்த 18ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 60 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

★★★★★★★★★★★★★★★

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் ஆபத்தான முறையில் வாகனம் செலுத்திய இரண்டு பேருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதியில் ஆபத்தான முறையில் வாகனம் செலுத்திச் சென்ற இரண்டு பேரைக் கைது செய்து அவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்த ஒட்டுசுட்டான் பொலிஸார் குறித்த இரண்டு பேரையும் கடந்த 18ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் ஆஜர்படுத் தியதையடுத்து தலா 2ஆயிரத்து 500 ரூபா வீதம் 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது

★★★★★★★★★★★★★★★

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் மதுபோதையில் சாரதியனுமதிப்பத்திரமின்றியும் வாகனம் பதிவு செய்யப்படாமலும் வாகனத்தைச் செலுத்தியவருக்கு 18 ஆயிரத்து ஐந்நூறு ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் மதுபோதையில் பதிவு செய்யப்படாத உரிய ஆவணங்கள் இன்றியும் சாரதியனு மதிப்பத்திரமின்றியும் வாகனம் செலுத்திச்சென்ற ஒரு வரை கைது செய்து வழக்குப்பதிவு செய்த ஒட்டுசுட்டான் பொலிஸார் குறித்த நபரை கடந்த 18ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் ஆஜர்படுத்தி யதையடுத்து 18 ஆயிரத்து ஐந்நூறு ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

★★★★★★★★★★★★★★★

ஒட்டுசுட்டான் பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திய வருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன், சாரதியனுமதிப்பத்திரம் ஆறு மாத காலத்திற்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திச்சென்ற ஒருவரைக் கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த ஒட்டுசுட்டான் பொலிஸார் குறித்த நபரை கடந்த 18ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் ஆஜர்படுத் தியதையடுத்து 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன், சாரதியனுமதிப்பத்திரத்தை ஆறுமாதகாலத்திற்கு இடைநிறுத்தி வைக்குமாறும் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது. (2-315)

## வைத்தியசாலை பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள் இல்லையேல் பூட்டு போட வேண்டிய நிலை ஏற்படும்

### அமைச்சர் ராஜிதவிற்கு அபிவிருத்தி குழு செயலாளர் கடிதம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள வைத்திய நிபுனர்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு காணுங்கள். இல்லாவிட்டால்வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவே வைத்தியசாலையை பூட்டுப் போட்டு பூட்ட வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்படலாம் என வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு செயலாளர் வி.எஸ் சிவகரன் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ணவிற்கு நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

மன்னார் மாவட்ட வைத்தியசாலையின் ஆளணி பற்றாக்குறையினால் நிர்வாகம் நிலையிழந்து போவதாக தங்களுக்கு பல முறை கடிதம் மூலமாகவும் நேரடியாகவும் எமது நிலையை தெரிவித்திருந்ததுடன் ஜனாதிபதிக்கும் கடிதம் எழுதியிருந்தோம்.

இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை வீதியிலே குழந்தை பிறப்பு நிகழ்வும் நடைபெற்று விட்டது. மனித வாழ்வின் அத்தியாவசிய தேவையாகிய மருத்துவ சேவையைக் கூட அந்த நாட்டு மக்களுக்கு வழங்க முடியாவிட்டால் அந்த ஆட்சி நடப்பதில் என்ன பயன்?

மன்னார் வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகளை தீர்க்குமாறு பல்வேறு தரப்புகளால் விடுத்த கோரிக்கையை நிராகரிக்கும் நீங்கள் மன்னார் வைத்தியசாலையை மூடிவிடுங்கள்.

தற்போதைய சூழலில் அவசிய தேவையாகிய மகப்பேற்று வைத்திய நிபுணர் உட்பட பல்வேறு விதமான துறை சார்ந்த பிரிவுகளுக்கும் வைத்திய நிபுணர்கள் இல்லை.

குறைந்த பட்சம் மயக்க மருந்து ஏற்றுவதற்குகூட ஆள் இல்லை. பெயரளவில் தான் மாவட்ட வைத்தியசாலையாக காணப்படுகின்றது. எனவே கர்ப்பிணிதாய்மார் வீதியில் இறங்கி போராடி ஒருவாரம் கடந்த நிலையும் எந்தவித தீர்வும் கிடைக்கவில்லை. எந்த விதமான அதிகாரமும் இன்றி பெயரளவில் தான் மாகாண சுகாதார அமைச்சு இயங்குகின்றது.

ஆகவே மன்னார் மாவட்டத்தில் வைத்தியசாலையில் உள்ள பல்வேறு விதமான குறைபாடுகளை ஆராய்ந்து உடனடியாக தீர்வுகாண வேண்டும்.

இல்லாவிட்டால் வைத்திய சாலை அபிவிருத்திக் குழுவே வைத்தியசாலையை பூட்டுப் போட்டு பூட்ட வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்படலாம் என குறித்த கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. (2-4-281)

## புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலைக்கு ஒதுக்கப்பட்ட காணியில் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு துப்பரவு பணி



(கண்டாவளை)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலைக்கு புதிதாக ஒதுக்கப்பட்ட காணியில் அபிவிருத்திகளை முன்னெடுக்கும் வகையில் குறித்த காணி துப்பரவு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மருத்துவத் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் பல்வேறு கட்டுமான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்ட புதுக்குடியிருப்பு வைத்தியசாலை தற்போது செயற்பட்டு வருகின்ற காணியில் போதிய இடவசதியின்மையால் இதன் சில பகுதிகளை ஏ-35 பரந்தன் புதுக்குடியிருப்பு வீதியில் வைத்தியசாலைக்கென ஒதுக்கப்பட்ட காணிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் முதற்கட்டமாக குறித்த காணியை அடையாளப்படுத்தி துப்பரவுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதாவது, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையாக மாஞ்சோலை வைத்தியசாலை இயங்கி வருவதுடன், பிரதேச வைத்தியசாலைகளாக இருந்த மல்லாவி வைத்தியசாலை புதுக்குடியிருப்பு வைத்தியசாலை ஆதாரவைத்தியசாலைகளாக தரம் உயர்த்தப்பட்டு அதற்கான கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை ஆதார வைத்தியசாலையாக இருந்த மாங்குளம் வைத்தியசாலை நெதர்லாந்தின் அரசின் நிதியுதவியுடன் புனர்வாழ்வு வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டு அதற்கான கட்டுமானப் பணிகளும் முன்னெடுக்கப்படவுள்ளதாக மாகாண சுகாதார அமைச்சினால் அண்மையில் மல்லாவி பிராந்தி சுகாதார சேவைகள் பணிமனையில் திறப்பு விழா நிகழ்வில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-315)




## தேர்தல் பிரச்சார சுவரொட்டிகள் ஒட்டிய மூவர் கைது

(பனிக்கன்குளம்)

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு உள்ளூராட்சி தேர்தல் சம்பந்தமான சுவரொட்டிகளை ஒட்டிய மூவரை வவுனியா பண்டாரிக்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா கூமாங்குளம், பண்டாரிக்குளம் பகுதியில் தேர்தல் பிரச்சார சுவரொட்டிகள் ஒட்டுவதாக பண்டாரிக்குளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சுவரொட்டிகளுடன் உக்குளாங்குளம் பகுதியினை சேர்ந்த மூன்று இளைஞர்களை கைது செய்துள்ளதுடன் அவர்களிடமிருந்து சுவரொட்டிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

இவர்களிடம் பெறப்பட்ட மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-281)

## வேகக்கட்டுப்பாட்டை இழந்த ஹன்டர் ரக வாகனம் விபத்து

### மூவர் படுகாயம்

(பனிக்கன்குளம்)

வவுனியா ஓமந்தை நொச்சி மோட்டை பகுதியில் ஏற்பட்ட விபத்தில் பெண் உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் வவுனியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஹன்டர் ரக வாகனம் ஒன்று நொச்சி மோட்டை பகுதியை அண்மித்தவேளை அதே திசையில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கர வண்டி ஒன்றின் மீதும் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோதி விபத்துக்குள்ளானதில் துவிச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர். படுகாயமடைந்தவர்கள் வவுனியா பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப்பெற்று வருவதுடன் ஹன்டர் வாகனத்தின் சாரதி ஓமந்தை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர். (2-281)

## நீதிமன்ற அபராதங்கள்

கிளிநொச்சி திருவையாறுப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்றவருக்கு 25ஆயிரம் ரூபாதண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி திருவையாறுப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்ற ஒருவரைக்கைது செய்து வழக்குப்பதிவு செய்த கிளிநொச்சிப் பொலிஸார் கடந்த 18ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப் பட்டுள்ளதுடன், மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

★★★★★★★★★★★★★★★

முல்லைத்தீவு மல்லாவிப்பகுதியில் வரிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியவருக்கு 2 ஆயிரத்து ஐந்நூறு ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மல்லாவிப் பகுதியில் வரிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியவரை கைது செய்து வழக்குப்பதிவு செய்த மல்லாவிப்பொலிஸார் குறித்த நபரை கடந்த 18ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 2 ஆயிரத்து ஐந்நூறு ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

★★★★★★★★★★★★★★★

முல்லைத்தீவுப் பகுதியில் மதுவரித்திணைக்கள அதிகாரிகளால் 375 மில்லிலீற்றர் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவுப்பகுதியில் மதுவரித்திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது 375 மில்லி லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டு கடந்த 18ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

★★★★★★★★★★★★★★★

முல்லைத்தீவுப்பகுதியில் மதுபோதையில் சாரதியனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவரை 50 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்லுமாறும் சாரதியனுமதிப்பத்திரம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு மன்றிற்கு அறிக்கையிடுமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது. முல்லைத்தீவு நகரப்பகுதியில் மதுபோதையில் சாரதியனுமதிப்பத்திரமின்றி வாகனத்தைச் செலுத்திச்சென்ற ஒருவரைக்கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த முல்லைத்தீவு பொலிஸார் குறித்த நபரை கடந்த 18ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது, குறித்த நபருக்கு சாரதியனுமதிப்பத்திரம் உள்ளதா? என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் பொருட்டு 50 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்லுமாறும் சாரதியனுமதிப்பத்திரம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு மன்றுக்கு அறிக்கையிடுமாறும் பொலிஸாருக்கு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

★★★★★★★★★★★★★★★

முல்லைத்தீவுப்பகுதியில் கசிப்புடன் கைது செய்யப்பட்ட இரண்டு பேருக்கு 32 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவுப்பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது 2 ஆயிரத்து 250 மில்லிலீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 375 மில்லிலீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த மற்றுமொருவருக்கு 7 ஆயிரத்து ஐந்நூறு ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்டுள்ளது. மேற்படி குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட இரண்டுபேரையும் கடந்த 18ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து மேற்படி தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

★★★★★★★★★★★★★★★

முல்லைத்தீவு மாங்குளம்பகுதியில் மதுபோதையில் பொது இடத்தில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டவருக்கு ஆயிரத்து 500 ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் பொது இடத்தில் மதுபோதையில் ஒழுங்கீனமாக நடந்து கொண்ட ஒருவரை கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த மாங்குளம் பொலிஸார் குறித்த நபரை கடந்த 18 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

★★★★★★★★★★★★★★★

முல்லைத்தீவு பனிக்கன்குளம் காட்டுக்குள் அனுமதிப்பத்திரமின்றி உள்நுழைந்து மணல்ஏற்றிய உழவு இயந்திர சாரதிக்கு 95ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு பனிக்கன்குளம் காட்டுப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி உள் நுழைந்து மணல் அகழ்விற்கான அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிய ஒருவரை கைது செய்து வழக்குப்பதிவு செய்த மாங்குளம் பொலிஸார் குறித்த நபரை கடந்த 18ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து அனுமதிப்பத்திரமின்றி காட்டிற்குள் நுழைந்தமைக்கு 15 ஆயிரம் ரூபாவும், அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்வில் ஈடுபட்டவருக்கு 80 ஆயிரம் ரூபாவும் என 95 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (2-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு
ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு
- பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இளைஞர் மாநாடு ஒன்றை முதலமைச்சர் கூட்டவேண்டும்

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் கடந்த 16ஆம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த கருத்தாடல் நிகழ்வில், ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் உணர்வு பூர்வமாக கலந்துகொண்டனர்.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் விசேட உரையும் சிங்கப்பூர் பல்கலைக்கழக சட்டத்துறைப் பேராசிரியர் மு.சொர்ண ராசா, யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் கு.குருபரன் ஆகியோரின் கருத்துரையும் மக்களை ஈர்த்துள்ளன.

இத்தகைய கருத்தாடல் நிகழ்வுகளை வடக்குக்கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் தமிழ் மக்கள் பேரவை நடத்த வேண்டும் என்பது பலரினதும் கோரிக்கை.

இதற்கு மேலாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கை பல்கலைக்கழக நிர்வாகம் பேரவையின் நிகழ்விற்கு வழங்கியிருந்த போதிலும் அந்த அனுமதியை ரத்து செய்யும்படி விடுக்கப்பட்ட உத்தரவு சட்டத்திற்கு முரணானது எனில் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது விடயத்தில் தமிழ் மக்கள் பேரவை சட்ட நடவடிக்கைகான உப குழுவொன்றை உருவாக்குவது பொருத்துடையது என்பது நம் சிற்றறிவின் சிந்தனை.

நம் தமிழ் சட்டத்தரணிகள் அடங்கிய உப குழு ஒன்றை தமிழ் மக்கள் பேரவை உருவாக்குமாக இருந்தால், எந்தெந்த விடயங்களில் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அது விடயத்தில் அதிரடியாக சட்டநடவடிக்கை எடுக்க முடியும்.

குறிப்பாக முற்றவெளியில் புத்தபிக்கு ஒருவரின் தகனக்கிரியை நடைபெற்றபோது அதனைத் தடுப்பதற்கு சட்டத்தரணிகள் அடங்கிய உபகுழு தமிழ் மக்கள் பேரவையிடம் இருந்திருக்குமாயின் குறித்த விடயம் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுத்திருக்க முடியும்.

பல விடயங்களில் குழுவாக இயங்குவது வெற்றி தரும் என்பது ஞாபகத்துக்குரியது. எனவே இது விடயத்தில் தமிழ் மக்கள் பேரவை கவனம் செலுத்தும் என நம்பலாம்.

தவிர இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் அரசியலுக்கு அப்பால் எங்கள் ஒட்டுமொத்த தமிழ் இளைஞர்களையும் ஒன்று திரட்டி ஒரு பெரும் தமிழ் இளைஞர் மாநாட்டை வடக்கின் முதலமைச்சர் நடத்தவேண்டும் என்பது நம் தாழ்மையான கருத்து.

இது விடயத்தில் முதலமைச்சரை இணை தலைவராக கொண்ட தமிழ் மக்கள் பேரவையும், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் அமைப்பும், யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் சேர்ந்து இளைஞர்கள் மாநாட்டை கூட்ட முடியும்.

இதன் மூலம் தமிழ் மக்களின் உரிமை சார் விடயங்களில் நம் அரசியல்வாதிகள் நேர்மையுடனும் விசுவாசத்துடனும் செயற்படுவதை உறுதி செய்ய முடியும் என்பதால்,

தமிழர் தாயகத்தை ஒன்றிணைத்த இளைஞர் மாநாட்டை முதலமைச்சர் நடத்துவார் என நம்பலாம்.

# பெண்களின் புதிய அரசியற் பிரவேசத்திற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவளிக்க வேண்டும்

## அனைத்து கட்சிகளின் பெண் வேட்பாளர்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பெண்களினை நேரடி வேட்பாளராக உள்வாங்கியகட்சிகளுக்கும், கூடுதலான பெண்களை உள்வாங்கியகட்சிகளுக்கும் தனது மனப்பாங்கினை மாற்றி பெண்களின் புதிய அரசியற் பிரவேசத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் இம்முறை பெண்களின் வெற்றிக்காகப் போராட வழிசமைப்போம், என உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுகின்ற பெண் வேட்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் பல்வேறு கட்சிகள் சார்பில் போட்டியிடுகின்ற பெண் வேட்பாளர்கள் ஒன்றிணைந்து நேற்றைய தினம் யாழ். ஊடகஅமையத்தில் பத்திரிகையாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தனர். இதன் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

கடந்த முப்பதாண்டு கால யுத்தத்தின் கொடூரத்திலிருந்து மீண்டு சற்று மூச்சு விடும் தருணத்தில்தான் எமக்கு புரிகின்றது சத்தங்கள் ஓய்ந்தாலும் எமது சமூக, பொருளாதார, கல்வி மற்றும் பண்பாட்டுத் தளங்களின் இருப்பு கேள்விக்குரியதென்று. ஆம் எதிர்காலத்தையே எவ்வாறு சமாளிக்கப் போகின்றோமென்ற தவிப்பு. இதை மீளக் கட்டியெழுப்புவது எப்படியென்ற சிந்தனைக்கு முன்பாகவே எமது பிரதேசத்தின் உள்ளூராட்சி மன்றத் தேர்தலைச் சந்திக்கவேண்டிய நிலை.

எமக்கென தனித்துவமானதொரு அரசியற்தளத்தினைப் போடவேண்டுமெனில், கடந்தகால அரசியலுக்கு மாறுபட்ட விதத்தில் மக்களின் சமூக, பொருளாதார, கல்விமற்றும் பண்பாட்டில் மேம்பாட்டினைக் கொணர்வதன் ஊடாகவே இதனை அடைய முடியும். அதனால்தான் பெண்களாகிய நாம்பொறுத்தது போதுமென்ற நிலையில் நீதியையும், நியாயத்தினையும் எமது பிரதேசத்தில் நிலைநாட்ட இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில்போட்டியிட கட்சிகள் மூலமாகவும், சுயேட்சைக் குழுக்கள் மூலமாகவும் களம் இறங்கியிருக்கின்றோம்.

நீதிக்காகப் போராடத் தயாராகின்ற பெண்களாகிய நாம்இம்முறை புதியதொரு ஜனநாயகரீதியிலான அரசியற்பண்பாட்டைப் படைக்கப் போவது உறுதி.

எமது அரசியல் சமூகத்தில் வாழும் சகல மக்களையும் எவ்வித இன, மத, மொழி வேறுபாடின்றி அவர்களை மதித்து, அவர்களின்தேவைகளை அனைத்துத் தரப்பினரின் பங்கேற்பு, பங்களிப்புடன் நிறைவேற்ற முன்னின்று செயற்படுவோம். இங்கு எமது வெளிப்படைத் தன்மை, சமூகத்தின் மீதான பொறுப்புடைமை மற்றும் சமூகத்திற்குக்கணக்குக்காட்டுந்தன்மை போன்றவற்றால் எமக்கு சமூகத்தின் செல்வந்தர்கள், ஏழைகள், ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், யுவதிகள், மதத் தலைவர்கள், அரசியற் தலைமைத்துவங்கள் என அனைவரும் பக்கபலமாக இருப்பார்கள்.

உண்மையும், நேர்மையும் கொண்ட எமது அரசியலில் தனிமனித சிபாரிசுகளோ, பொய்யான வாக்குறுதிகளோ அல்லதுசலுகை காட்டி வாக்குப் பெறுவதோ இருக்காது. பலவருடங்களாக சமூகத்திற்குப் பணியாற்றிய எமக்கு மக்களின் ஆதரவு இந்த வட்டாரமுறைத் தேர்தலில் வெற்றியைப்பெற்றுத் தரும்.

எம்மால் முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு அபிவிருத்தி நடவடிக்கைகளிலும், ஊழல் நடவடிக்கைகளுக்குத்துணை போகாத, பக்கச்சார்பற்ற, வெளிப்படைத் தன்மை பேணப்படும்.

வன்முறையினால் வளர்ந்த அரசியலை மாற்றிவன்முறையற்ற, சகலருக்கும் நன்மை பயக்கும் அரசியற் பண்பாட்டை மீளவும் எமது சமூகத்தில் எமக்காக, எம்தாய்மாருக்காக, எம் சகோதர சகோதரிகளுக்காக உருவாக்குவோம்.

உள்ளூராட்சி மன்றங்களின் சகல சேவைகளையும் சமூகத்தின் சகல தரப்பினரும் பெறக் கூடியதாகச் செய்வோம்.

ஒவ்வொரு குடிமகனின் திட்டமிடலையும், பங்கேற்பையும், பங்களிப்பையும், அமுல்படுத்தலையும், கண்காணிப்பினையும் மக்களுக்கான சேவைகளில் உறுதிப்படுத்துவோம்.

இன, மத, மொழி பேதமின்றி எந்தக் கட்சியில் பெண்போட்டியிட்டாலும் அவளுக்கான முழுமையான ஆதரவினைமக்களுடன் இணைந்து வழங்குவோம்.

தேர்தல் வன்முறைகளையும், அரசியற் பழிவாங்கல்களையும் சமூகத்தில் அடியோடு இல்லாதொழித்து புதியதொரு வன்முறையற்ற அரசியற் பண்பாட்டினை ஏற்படுத்துவோம்.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 52 வீதம் பெண்கள். இன்னும் வாக்களிக்கும் சனத்தொகையில் 56 வீதம் பெண்கள். இந்த நிலையில் கடந்த காலங்களில் பெண்ணுக்கொருவாக்களித்து அவளது வெற்றிக்கு வாய்ப்பளிக்காத ஒவ்வொரு பெண்ணும் தனக்குள் உணர்ந்து பெண்களினை நேரடி வேட்பாளராக உள்வாங்கிய கட்சிகளுக்கும், கூடுதலான பெண்களை உள்வாங்கிய கட்சிகளுக்கும் தனதுமனப்பாங்கினை மாற்றி பெண்களின் புதிய அரசியற் பிரவேசத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் இம்முறை பெண்களின் வெற்றிக்காகப் போராட வழி சமைப்போம்.

யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் நாம். பாதிப்புக்குள்ளான பெண்கள் தங்கள் பாதிப்புக்களிலிருந்து மீண்டுவர அவர்களுக்கான வாழ்வாதார மற்றும் தொழினுட்ப ஆற்றல், தகைமை மற்றும் தலைமைத்துவம் பெறவும், அவர்களுக்கான ஒளிமயமான வாழ்வுக்கு கட்டியங் கூறவும்பெண்கள் நாம் இம்முறை தலைமைத்துவப் பொறுப்பினைத் தேர்தலில் பெறுவோம்.

எங்கள் அரசியல் மொழியானது இனிமை, சிநேகம், புரிந்துணர்வு, ஒத்துழைப்பு, ஆழ்ந்தசிந்தனை, கடும்முயற்சி, உறுதி, சுய கௌரவம், பணிவு, தன்னடக்கம் கொண்டதாக இருப்பதனா லேயே உங்கள் தாயாக, சகோதரியாக, மகளாக உங்களுக்காகத் தேர்தலில் போட்டியிடுகின்றோமெனத் தெரிவித்துள்ளனர். (ம-4)

### மாத்தறை ஊருபொக்க பிரதேசத்தில்

## வயரினால் மனைவியின் கழுத்தை நெரித்து கொலை செய்த கணவன்

(மாத்தறை)

மாத்தறை மாவட்டத்தில், ஊருபொக்க பிரதேசத்தில் 27 வயதுடைய பெண்ணொருவர் கழுத்து நெரித்துகொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீடொன்றில் வாடகைக்கு தங்கியிருந்த பெண்ணொருவரே இவ்வாறு நேற்று முன்தினம் இரவு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச்சம்பவம் தொடர்பில் உயிரிழந்த பெண்ணின் கணவர் கைது செய்யப்பட்டுள்ளார். வீட்டில்இருந்த ரைஸ் குக் கரின் வயரால் குறித்த பெண் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், மனைவியின் கள்ளத்தொடர்பு தெரிய வந்ததால், கோபத்தில் இந்தக் கொலையை செய்ததாக குறித்த நபர் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும், பிரேத பரிசோதனை மாத்தறை மருத்துவமனையில் இடம்பெறவுள்ளதுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

### கிளிநொச்சி பூநகரிப் பகுதியில்

## இராணுவச் சிப்பாய் துப்பாக்கியால் சூடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரிப் பகுதியில் உள்ள 66 வது படைத் தலைமையகத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் தனது துப்பாக்கியால் சுட்டு தற்கொலைக்கு முயன்றுள்ளார்

நேற்றுக் காலை அவரது கைவசம் இருந்த ரி 56 ரக துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுதற்கொலை செய்ய முற்பட்ட வேளை சன்னம் அவரது இடக்காலில் பட்டு காயம் அடைந்த நிலையில் சக இராணுவ வீரர்களினால் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்

குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருவதாக கிளிநொச்சி இராணுவத் தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-312)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### புத்திரியின் குழந்தையை தத்தெடுக்கலாமா?

புத்திரி இருந்து புத்திரன் இல்லாதவர் தனது வம்சாவளி விருத்தியடைய வேண்டும் என்று நினைத்தால் புத்திரிக்குத் திருமணம் செய்வித்து அந்தப் புத்திரிக்குப் பிறக்கும் குழந்தையைத் தத்தெடுத்துக் கொள்ளலாம். இந்த உறவு முறை நிரந்தரமானதாக இருந்தாலும் இரண்டு உறவு முறைகளில் ஏதாவது ஒன்றை மட்டும் நிரந்தரமாகக் கடைப்பிடிக்க வேண்டும். இரு உறவு முறைகளுக்கும் உரிமை கொண்டாடக் கூடாது. (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ் பிரதேசத்தில் அராலிப் பிரதேசம் முழுவதும், வட்டுக் கோட்டை பிரதேசம் ஒரு பகுதி, யாழ்ப்பாணக் கல்லூரி பிரதேசம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் சாந்தசோலை கிராமம், கொக்கிளிய, அக்போபுர, கோவில்குளம், ஆச்சிபுரம், சமணன்குளம், மகா மயிலங்குளம், மருதநகர், எல்லப்ப மருதங்குளம், பெரிய கூமரசங் குளம், ஆசிக்குளம், சிதம்பரபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கான துடுப்பாட்டப் போட்டி

நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான மென்பந்து துடுப்பாட்ட போட்டி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற இருக்கிறது. (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



ஒலுமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் 2018 ஆம் ஆண்டுக்கான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிக்கான மரதன் ஓட்டப் போட்டி ஒலுமடு பாடசாலையின் அதிபர் இ.விமலேந்திரன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. ஆண்கள் பிரிவில் 12 கிலோமீற்றர் தூரத்தினை ஓடிக்கடந்து முதலாம் இடத்தினை கலையரசன், இரண்டாம் இடத்தினை த.சுதர்சன், மூன்றாம் இடத்தினை மு.றதன், நான்காம் இடத்தினை ரு.பார்த்தீபன், ஐந்தாம் இடத்தினை க.நவறஞ்சன் ஆகியோரும் வெற்றி பெற்றுள்ளனர். பெண்கள் பிரிவில் 7 கிலோ மீற்றர் தூரத்தினை கடந்து முதலாம் இடத்தினை ர.டினுயா, இரண்டாம் இடத்தினை அ.அனுசியா, மூன்றாம் இடத்தினை சு.விதுசிகா, நான்காம் இடத்தினை வ.வதுசா, ஐந்தாம் இடத்தினை வி.டிசாந்தினி ஆகியோரும் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.





வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி மாத விளையாட்டு நிகழ்வு பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதில் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்கள் கலந்து கொண்ட தாச்சிப் போட்டியில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை மற்றும் வலிகாமம் தெற்கு பிரதேச சபையினருடன் விளையாடி நல்லூர் பிரதேச சபையினர் வெற்றி வாகை சூடினர்.



சுழிபுரம் விக்ரோரியா கல்லூரியின் வருடாந்த மரதன் ஓட்டப் போட்டி நேற்று அதிபர் திருமதி சிவகுமார் தலைமையில் நடைபெற்றது.

இப்போட்டியில் முதலாம் இடத்தினை பத்மபிரிய பெற்றுக் கொண்டார். (கு)

# வெள்ளையடிக்க விருப்பம்

வேகப்பந்து வீச்சில் எந்த மாதிரி விளையாட வேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும். அதே சமயம் இந்திய வேகப்பந்து வீச்சு மீதும் மரியாதை வைத்துள்ளோம். ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெற வேண்டும் என்பதே நோக்கம். அதனால் கடைசி டெஸ்டிலும் இந்திய அணியை தோற்கடித்து 'ஒயிட் வாஷ்' செய்ய விரும்புகி றோம் என தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் காஜிசோ ரபடா தெரிவித்துள்ளனர்.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி விராட் ஹோலியைத்தான் அதிகமாக சார்ந்து இருக்கிறது. அது போன்று நாங்களும் சில வீரர்களைத்தான் நம்பி இருக்கிறோம். இந்திய அணியில் தரமான வீரர்கள் இல்லை என்று சொல்லமாட்டேன். ஆனால் அவர்களில் விராட் ஹோலியே அதிகமான ஓட்டங்கள் குவிக்கிறார் என்பதை மறுக்க முடியாது.

ஹோலிக்கு எதிராக நான் உற்சாகமாக பந்து வீசி வருகிறேன். இப்போது அவர் உலகின் சிறந்த வீரர் விருதுக்கு தேர்வாகி இருக்கிறார். சிறந்த வீரருக்கு எதிராக பதற்றமின்றி பொறுப் புணர்வோடு பந்து வீசுவது முக்கிய மானது.

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகள் இடையிலான 3 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி ஜோகன்னஸ்பெர்க்கில் உள்ள நியூ வான்டரர்ஸ் ஸ்ரேடியத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி தொடங்குகிறது. (க)



சங்கானை பிரதேச செயலக வருடாந்த விளையாட்டுப் போட்டியில் எல்லே விளையாட்டு நேற்று மாவத்தை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டியில் விக்டோரியஸ் விளையாட்டுக் கழகம் சம்பியன் ஆகியுள்ளது. சம்பியன் பட்டம் வென்ற அணியை படத்தில் காணலாம். (கு)

# சென்னை என் இரண்டாவது வீடு

## டோனி



சென்னை எனக்கு இரண்டாவது வீடு என்று உருக்கத்துடன் பேசியுள்ளார் மகேந்திர சிங் டோனி.

ஐ.பி.எல்லில் சூதாட்ட புகாரில் சிக்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, தடைக்காலம் முடிந்து இந்த ஆண்டு ஐ.பி.எல். போட்டியில் பங்கேற்கவுள்ளது.

இம்முறையும், சென்னை அணிக்கு டோனியே தலைவராக செயற்படுவார் என்று கூறப்படுகிறது. இந்நிலையில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் திருப்பம் குறித்தும், அணியிலுள்ள வீரர்கள் குறித்தும் சென்னையில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் டோனி பேசினார். அப்போது கூறுங்கயில், 'இரண்டு ஆண்டுகளாக சென்னை அணி, ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்கவில்லை என்றாலும், நமது ஆதரவாளர்கள் அதிகரிக்கவே செய்திருக்கின்றனர்.

இதுவே சென்னை அணியின் பலம். தமிழ்நாட்டில் மட்டும் இல்லாமல், எங்கு சென்றாலும் சென்னை அணிக்கு என்று தனி ரசிகர்கள் கூட்டம் உண்டு. இம்முறை 18 முதல் 20 வீரர்கள் வரை சென்னை அணியில் எடுக்க திட்டமிட்டுள்ளோம்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு திரும்பியது பெருமையாகவுள்ளது. சென்னை எனக்கு இரண்டாவது வீடு. சென்னை எப்போதுமே எனக்கு தனிச்சிறப்பு உடையது.

ஏனெனில், இங்கு தான் டெஸ்ட் போட்டியில் அதிக ஓட்டங்களை பதிவு செய்தேன். சென்னை அணியின் சிறப்பு என்னவென்றால், அனைத்து வீரர்களும் தங்களது முழுத் திறமையை வெளிப் படுத்தும் சூழல் இருப்பதே ஆகும்.

ஏற்றம், இறக்கம் இருந்து கொண்டேதான் இருக்கும். இருப்பினும் கடினமான தருணங்களை சிறப்பாக எதிர்கொண்டுள்ளோம்.

சென்னை அணி மீதான எதிர்பார்ப்பு இந்த ஆண்டு ஐ.பி.எல். போட்டியை சிறப்பாக மாற்றுவோம் என தெரிவித்தார். (க)

# துடுப்பாட்டம் சரியில்லை தோல்விக்கு காரணம் இது

## பெரேரா

பங்களாதேஷில் நடைபெற்று வரும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரில் இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி 163 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபாரமாக வெற்றி பெற்றது.

இலங்கை அணியில் அதிக பட்சமாக திசர பெரேரா 29 ஓட்டங்களும் தினேஷ் சந்திமல் 28 ஓட்டங்களும் உபுல் தரங்கா 25 ஓட்டங்களும் எடுத்தனர்.

பங்களாதேஷ் அணியின் ஷகிப் அல் ஹசன் 3 விக்கெட்டுகளும் மஷ்ரபி மொர்டசா, ருபெல் ஹொசைன் தலா இரண்டு விக்கெட்டுகளும், நசிர் ஹொசைன், முஸ்தபிசூர் ரஹ்மான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் எடுத்தனர்.

பங்களாதேஷ் அணியின் ஷகிப் அல் ஹசன் ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார். இந்நிலையில் போட்டிக்கு பின்னர் பத்திரிகையாளர்களை சந்தித்த இலங்கையின் பொறுப்பு அணித் தலைவர் திசர பெரேரா, பங்களாதேஷத்துக்கு எதிரான போட்டியில் துடுப்பாட்ட வீரர்கள் சரியாக விளையாடாததே தோல்விக்கு காரணம். புதிய பயிற்சியாளராக ஹதுருசிங்கா கிடைத்திருப்பது எங்கள் அணிக்கு பிளஸ் பொயின்ட்.



ஏற்கனவே அவருடன் பணியாற்றி இருக்கிறேன், அவர் இப்போதுதான் அணிக்கு வந்திருக்கிறார், உடனடியாக யாராலும் எந்த அற்புதங்களையும் செய்துவிட முடியாது. அணியை நெறிப்படுத்த அவருக்கு இன்னும் நேரம் வேண்டும் என்று கூறியுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசின் மோசடியை...

நேற்று கிண்ணையடியில் நடைபெற்ற போது உரையாற்றுகையில் அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்று கையில்,

தமிழ் தேசிய கூட்டமைப்பானது, அரசாங்கத்தினுடைய பங்காளி கட்சியாக உள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர்களை விட, மூன்று மடங்கு அதிகமாக உள்ள மகிந்த அணிக்கு, எதிர்க்கட்சி தலைவர் பதவியைக் கொடுக்காமல் சம்பந்தனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

எமது பங்காளி கட்சியை எதிர்க்கட்சி தலைவராக வைத்திருந்தால் நாங்கள் செய்யும் அரசியல் மோசடியை மூடி மறைப்பதற்கு அது உதவும் என்ற காரணத்திற்காக, எதிர்க்கட்சி தலைவர் பதவி வழங்கப்பட்டது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்துடன் இணைந்து ஒரு அரசியலமைப்பை உருவாக்கியுள்ளது. இந்த அரசியலமைப்பை பார்த்தால் இது முற்றுமுழுதாக ஒற்றையாட்சிக்குரிய அரசியலமைப்பாக உள்ளது. சாதாரண மக்களுக்கு இதன் நுணுக்கங்கள் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்காது.

ஒற்றையாட்சி முறையானது சிங்கள மக்களினுடைய கையில் தான் அந்த ஆட்சி இருக்கும். ஒரு நாட்டில் 75 வீதத்திற்கு மேலாக சிங்கள மக்களின் சனத்தொகை இருக்கின்ற நிலையில் ஆட்சி அதிகாரம் ஒரு மையத்தில் இருக்குமாக இருந்தால், 75 வீதமாக மக்களின் விருப்பத்தின் படிதான் அதிகாரம் பயன்படுத்தப்படும்.

ஒற்றையாட்சி முறையை சிங்கள மக்களின் கையில் கொடுத்திருக்கின்ற படியால் தான், தென் தமிழ் தேச மண் பறி போயுள்ளது. ஒட்டுமொத்த இலங்கைத் தீவும், பௌத்த நாடு. வட கிழக்கில் தமிழ் மக்கள் வாழ்வது, பௌத்த நாட்டின் கனவுக்கு சவாலாக இருக்கின்றது.

தமிழ் மக்களின் வடகிழக்கு தாயக பிரதேசம் இல்லாமல் செய்யப்பட வேண்டும். தமிழ் மக்கள் வடகிழக்கில் வாழ்வது தங்களுக்கு சர்வதேச சட்டத்தின் படி ஆட்சி உரிமை இருக்கின்ற படியால் வாழ்ந்து வருகின்றனர். ஒரு காலகட்டத்தில் சர்வதேசம் தமிழ் மக்களுக்கு வழங்கிய சட்டத்தின் படியான ஆட்சி உரிமையை அங்கீகரிக்கக்கூடும்.

அங்கீகரித்தால் சிங்கள ஒட்டுமொத்த இலங்கைத் தீவும் என்ற கனவு இல்லாமல் போகும். பிரித்தானியர் நாட்டை விட்டு வெளியேறியதில் இருந்து ஒற்றையாட்சி அரசியலமைப்பை உருவாக்கி சிங்கள தலைவர்கள் ஆட்சி செய்து எங்களது தாயக நிலப்பரப்பை பறித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்றார். (ம)

## மைத்திரி-ரணிலுக்கு...

திபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று மாலை கெலிஓயா பிரதேசத்தில் இடம்பெற்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இதனைக் கூறினார்.

தங்களை நரகத்துக்கு அழைத்துச் செல்வதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். எம்மை நரகத்துக்கு அனுப்பும் வரையில் ஜனாதிபதி பதவியிலிருந்து செல்வதில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் பனிப் போர ஒன்று நடைபெறுகின்றது. தற்பொழுது இந்த யுத்தம் வெளிப்பட ஆரம்பித்துள்ளது. இந்த நாட்டின் மக்கள் தேர்தல் ஒன்று வரும் வரையில் பார்த்துள்ளனர். யானையைத் தோல்வியடையச் செய்ய. கையைத் தோல்வியடையச் செய்ய. வெற்றிலையைத் தோல்வியடையச் செய்ய. எதிர்வரும் 10ஆம் திகதி அரசாங்கத்தின் நிலைமை குறித்து மக்கள் தீர்மானிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம)

## சந்திரிகாவின் அழை...

திபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

வத்தளை, ஹுனுப்பிட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் இதனை கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை சேர்ந்த சிலரே ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் இருக்கின்றனர்.

அவர்களில் ஊழல், மோசடிகளுடன் தொடர்பில்லாதவர்கள் கட்சிக்கு மீண்டும் திரும்ப ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கதவு பெப்ரவரி 7 ஆம் திகதி வரை திறந்திருக்கும் எனவும் முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.(ம)

## பொலிஸ்மா அதிபர்...

அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு அடிக்கல்லினை நாட்டிவைத்து புதிய பொலிஸ நிலையத்துக்கான வேலைகளை ஆரம்பித்து வைத்தார்.

நீண்டகாலமாக பொலிஸ் நிலையம் இல்லாத நிலையில் தனியார் ஒருவருக்கு சொந்தமான வீட்டில் வாடகை அடிப்படையில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் இயங்கி வந்த நிலையில் நேற்றையதினம் அதற்கென காணி ஒதுக்கப்பட்டு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

இந்த புதிய பொலிஸ் நிலைய கட்டடம் 2160சதுர மீட்டர் பரப்பளவில், 145.7 மில்லியன் செலவில் ஒருவருட காலத்தில் அமைக்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. (ம-281)

## தகுதியற்றவர்களை...

என்று சட்டம் உள்ளது. அதனை மறைத்து, சட்டவிரோதமாக அத்தகைய கள அதிகாரிகள் அல்லது போட்டியிடத் தகுதியற்றவர்கள், உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றாலும், அவர்களைத் தகுதியிழப்புச் செய்யும் அதிகாரம் எமக்கு இல்லை.

வெற்றிபெற்ற வேட்பாளர்களை தகுதியிழப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் நீதிமன்றச் செயல்முறைகளின் மூலமே முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதனைச் செய்வதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இல்லை. பதவி விலகி, அரசாங்க சேவையில் இல்லாத கள அதிகாரிகள், தேர்தலில் போட்டியிடுவதற்கு சட்ட ரீதியான தடைகள் இல்லை.

எனினும், உள்ளூராட்சி சபைகளில் பணியாற்றிய அதிகாரிகள், பதவி விலகிய பின்னரும் அவ்வாறு செய்ய முடியாது. அத்தகைய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டோம்.

எனினும், அத்தகைய வேட்பாளர்களின் நியமனப் பத்திரங்களை ரத்துச் செய்யும் அதிகாரம் எமக்கு இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

## ஐ.தே.கட்சி வசமிருந்த...

ளித்திருந்ததாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியிடம் நாட்டின் பொருளாதார முகாமைத்துவம் வழங்கப்பட்டிருந்த போதிலும் இந்த வருடம் முதல் தேசிய பொருளாதார சபையினூடாக பொருளாதார முகாமைத்துவத்தை முன்னெடுக்கவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார். (ம)

## கட்சி பேதமின்றி...

அவர் தனதுரையில், ஆட்சிக்கு வந்து சில காலங்களில் பிணை முறி விவகாரம் தொடர்பான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. நாம் அதனை மூடி மறைக்கவில்லை.

இரண்டே வாரங்களில் அது தொடர்பில் ஆராய ஆணைக்குழு ஒன்றை நியமித்தோம். விசாரணைக்காலப்பகுதியில் மத்திய வங்கி ஆளுநர் பதவி துறந்தார். நாடாளுமன்றத்துக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டது. நாடாளுமன்றத்துக்கு தேவைப்படின் செயற்குழு ஒன்றை நியமிக்குமாறு நான் அறிவித்தேன். ஆணைக்குழு அறிக்கை நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் கோப் குழு தலைவராக அரசாங்கத்தரப்பில் உள்ள ஒருவரே நியமிக்கப்பட்டார். தற்போதைய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியை சேர்ந்த உறுப்பினர் ஒருவருக்கே தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது. குறித்த குழுவானது முறிகள் விநியோகம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தது. இந்த அறிக்கையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் குறித்த அறிக்கை மீதான விவாதமும் நடத்தப்பட்டது.

இந்த அறிக்கை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு கடந்த 2016 ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி அது சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதன்போது பெர்பச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என கோப் குழு அறிவித்தது. அதற்கமைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, என்னுடன் கலந்துரையாடி பின்னர் ஆணைக்குழுவை அமைத்தார்.

குறித்த ஆணைக்குழுவுக்கு நாம் ஒத்துழைப்புகளை வழங்கினோம். நாடாளு மன்ற உறுப்பினர்களும் ஆணைக்குழுவுக்கு சென்றிருந்தனர். நானும் சென்றிருந்தேன்.

குற்றச்சாட்டு ஒன்று முன்வைக்கப்பட்ட உடன் இவ்வாறு எந்த ஒரு அரசாங்கமும் விரைந்து செயற்படவில்லை. மத்திய வங்கி பிணை முறி விநியோகம் தொடர்பில் மூன்று தடவைகள் ஆராய்ந்தோம்.

கடந்த அரசாங்க காலத்தில் பல தடவைகள் இவ்வாறான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன. இருப்பினும் அவை தொடர்பில் எந்த விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை. நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய நேரத்தை தவிர வேறு சந்தர்ப்பங்களில் அதற்கான பதில் வழங்கப்படவில்லை.

இலங்கையில் நிதி கட்டுப்பாடு நாடாளுமன்றத்திடமே உள்ளது. அன்று நாடாளுமன்றத்தில் இந்த அதிகாரத்தை மறந்திருந்தனர்.

மோசடியுடன் தொடர்புடையவர்கள் எவராயினும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். பிணைமுறி விவகாரம் தொடர்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கான பூரண ஒத்துழைப்புகளை வழங்கினோம். இதனால் எமது அரசாங்கம் ஒழுக்கமான, கௌரவமான, நியாயமான அரசாங்கம் என்பதனை எங்களால் நிரூபிக்க முடிந்தது.

கடந்த காலத்தில் இவ்வாறு அரசாங்கம் செயற்பட்டதனை நாங்கள் காணவில்லை. எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பராம்பரியத்தை மீறியமை தொடர்பில் இராஜினாமா செய்தனர். சட்டம் நிலைநாட்டப்பட்டது. விரல் நீட்ட முடியாத அளவுக்கு நீதிமன்றம் தீர்ப்புகளை வழங்கியது. மக்கள் சுதந்திரமாக கருத்துக்களை வெளியிட்டனர். வெகுஜனங்கள் பயமின்றி செயற்பட்டன.

அதுமட்டுமல்ல, பிணை முறி அறிக்கையில் குற்றவாளிகளாக குறிப்பிடப்பட்டவர்கள் எமது கட்சியிலும் இருப்பார்களாயின், அது தொடர்பில் ஆராய்ந்து தீர்மானம் மேற்கொள்ளும் பொருட்டு திலக் மாரப்பன தலைமையில் குழுவொன்றை அமைத்துள்ளோம். குறித்த குழுவின் பரிந்துரைக்கமைய நாம் செயற்படுவோம் என தெரிவித்தார். (ம)

## இலங்கையின் கோரிக்கை...

கள் சபையின் சிறப்புக் கூட்டத்தொடரின் போது இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் எழுப்பப்படும் வாய்மூல கேள்விகளை மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் ஜெனிவா அலுவலகத்துக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க கோரிக்கை விடுத்தார்.

எனினும் இந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்ட அணுகுமுறை அல்ல என்று தெரிவித்த ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர்களுக்கான சிறப்புக் குழுவின் பிரதிநிதிகள் இலங்கைக்கு என்று பிரத்தியேகமான அணுகுமுறையொன்றைக் கையாள முடியாது என்று கூறி நிராகரித்துவிட்டனர்.

எந்தவொரு அரசையும் கருத்தில்கொள்ளும் நடைமுறை பின்பற்றப்படுவதில்லை என்று மிகத் தெளிவாக ரவிநாத் ஆரியசிங்க முன்னிலையிலேயே குறிப்பிட்ட சிறுவர் உரிமைகளுக்கான ஐ.நாவின் சிறப்புக் குழுவின் பிரதிநிதியான பேராசிரியர் கேஸ்டர்ன் ஸ்டேர்ன்பேர்க், வாய்மூலம் எழுப்பப்படும் கேள்விகளை நன்கு செவிமடுத்து அவற்றுக்கு பதிலளிக்க வேண்டியது அரசுகளின் பொறுப்பும் கடமையும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுவர் உரிமைகளுக்கான ஐ.நா குழுவின் முன்னாள் தலைவரான பேராசிரியர் கேஸ்டர்ன் ஸ்டேர்ன்பேர்க், நோர்வே உச்ச நீதிமன்றின் முன்னாள் பதில் தலைமை நீதியரசர் என்பது மாத்திரமன்றி சிறுவர் உரிமைகள் தொடர்பான சர்வதேச ரீதியில் மிகவும் மதிக்கப்படும் சட்ட நிபுணர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக பல புதிய சட்டங்களையும் கட்டளைச் சட்டங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளதாக இலங்கை அரசு அறிவித்துள்ள போதிலும் அவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்தப் போகின்றது என்பது தொடர்பில் பல கேள்விகளை எழுப்பிய ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் இந்தக் கேள்விகளுக்கான பதில்களை அடுத்த கூட்டத்தொடரில் வழங்குமாறு கேட்டுக்கொண்டனர்.

இதன்போது தலையிட்ட ஜெனிவா அலுவலகத்திற்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க மின் அஞ்சல் ஊடாக கேள்விகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக கொண்டார். இதன்போது தலையிட்ட சிறுவர் உரிமைகளுக்கான ஐ.நா சிறப்புக் குழுவின் பிரதிநிதி பேராசிரியர் கேஸ்டர்ன் ஸ்டேர்ன் பேர்க், அவ்வாறான நடைமுறை பின்பற்றப்படுவதில்லை என்று கூறி நிராகரித்துவிட்டார்.(ம)

## சிங்கப்பூர் பிரதமர்...

யோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

நாளை திங்கட்கிழமை இலங்கைக்கு வரும் சிங்கப்பூர் பிரதமர் 24ஆம் திகதி வரை இங்கு தங்கிருப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விஜயத்தின் போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளார்.

இதன்போது, இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையே சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்படுத்துவது தொடர்பாகவும் விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## மரப்பெட்டிக்குள்...

வர்கள் மண்டைதீவு பொலிஸ் காவலரணுக்கு வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இப் பெட்டியானது மீட்கப்பட்டிருந்தது.

இதன்படி அப் பெட்டியில் 4 கண்ணி வெடிகள் 2 மோட்டார் குண்டுகள் மற்றும் 2 சார்ஜர் போன்றன காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் மீட்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அவற்றை ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-4)

## பொலிஸ் நிலையத்தில்...

கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது

குறித்த சம்பவம் தொடர்பில் தர்ம்புரம் பொலிஸ் நிலைய வட்டாரங்களை வினவிய பொழுது, அவ்வாறான ஒரு சம்பவம் இடம் பெற்றிருப்பதனை உறுதிப்படுத்தி உள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், பொலிஸ் நிலையத்தில் வேலை செய்கின்ற பெண் பொலிஸ் கொஸ்தாபல் ஒருவருடைய கணவன் பகல் அவருடன் வந்து உரையாடியதாகவும் திடீரென அவர் நஞ்சு அருந்திவிட்டதாகவும் அவரை கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்த்திருப்பதாகவும் இதற்கு குடும்பத்தகராறே காரணம் எனவும் தெரிவித்தனர். (ம-312)

PVSP Rent a Car
Thirunelvely
(யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் முன்பாக)
கார்கள் நாள், கிழமை, மாதம் அடிப்படையில் வாடகைக்கு
Prius hybrid - CAT
Premio - CAB
Premio - KF
Axio - KM
Axio - KL
Axio - KI
Axio - KJ
Nissan 16 - KD
Nissan 15 - KD
Alto - KI
Indica - KI



தொடர்பு: 0773777502, 0777852456

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் சாயி சமித்தியில் தங்கி இருந்து மேற்படிப்பு, வேலைவாய்ப்பு பெற்றுக்கொள்ள விரும்பும் ஆண் பிள்ளைகள் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு: 077405 2257, 077 910 4771**

(C-1279)

## வேலை வாய்ப்பு

சேவை நிறுவனம் ஒன்றில் பின்வரும் வெற்றிடங்கள் உண்டு.

யாழ் நகரில் - Branch billing Executive
நெல்லியடி - Branch billing Executive
கிளிநொச்சி - Branch Billing Executive
வாகன சாரதி - கனரக வாகனம் கொழும்பு - யாழ்ப்பாணம்

(C-1263)

**தொடர்புக்கு :- 0770696816 / 0768260497**

நேர்முகப்பரீட்சை யாழ் நகரில் இடம்பெறும்

## 2018க்கான புதிய வேலைவாய்ப்புக்கள்

எமது Holding வலையமைப்பின் இலங்கை கிளைகளின் வேலைத்திட்டத்திற்கு அமைய் உலக வியாபாரத்தில் தடம்பதிக்க நிரந்தர வேலைவாய்ப்பு பல பிரிவுகளிலும் பெற்றுக்கொள்ள

**இதோ! ஓர் அரிய சந்தர்ப்பம்**

1. நீங்கள் க.பொ.த (சா.த) அல்லது (உ.த) சித்தி அடைந்தவரா?
2. புதிய தொழில் தேடுபவரா?
3. வியாபார உலகத்தில் சிறந்த தேர்ச்சி அடைய விரும்புபவரா?
4. முகாமைத்துவத்தில் சிறந்த வருமானம் பெற விரும்புபவரா?

பயிற்சியின் பின் 40,000க்கு மேல். குறுகிய காலத்தில பதவி உயர்வும் மற்றும் சிறந்த சலுகைகளும்

- வயதெல்லை 18-30
- பகுதி நேர வேலைவாய்ப்பு (30-40) வயதுடையவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தொடர்பு: 0766668385, 0771571699**

(2470)

## யாழ் - கொழும்பு ரயிலை...

ள்ளனர்.

நேற்று சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தினால் கொழும்பிலிருந்து யாழ் நோக்கி பயணித்த கடுகதி ரயில் இரண்டு மணிநேரம் ஓமந்தை ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 300 வருடங்கள் பழைமை வாய்ந்த ஓமந்தை பெரிய விளாத்திக்குளம் கிராமத்திற்கு செல்லும் பிரதான வீதியை ஓமந்தை ரயில் நிலையம் அமைக்கும்போது தற்காலிகமாக மூடுவதாக தெரிவித்து இரவோடு இரவாக அவ்வீதி மூடப்பட்டுள்ளது.

கடந்த 7 வருடங்களாக இவ்வீதியை திறந்து விடுமாறு பிரதமர் உட்பட புகையிரத திணைக்கள அதிகாரிகள் பலருக்கும் கோரிக்கை விடுத்தும், கோரிக்கை நிறைவேறாத பட்சத்திலேயே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இப்போராட்டத்தில் 100இற்கும் மேற்பட்டவர்கள் ரயில் தண்டவாளத்தில் அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது, சம்பவ இடத்திற்கு விரைந்த பிரதேச செயலாளர் மற்றும் பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் சமரசத்தில் ஈடுபட முயற்சித்த போதிலும் அது தோல்வியடைந்தது.

அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கையில் நியாயம் இருப்பதாக தெரிவித்து, குறித்த விடயம் தொடர்பில் உரியவர்களுடன் கலந்துரையாடும் வகையில் திங்கட்கிழமை அலுவலகத்திற்கு வருமாறு தெரிவித்துள்ளார்.

அதனை ஏற்றுக்கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், போராட்டத்தை கைவிட்டுள்ளதுடன், பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு ஒரு வாரத்திற்குள் தீர்வு காணப்படாவிடின் மீண்டும் போராட்டம் வெடிக்கும் என எச்சரித்துள்ளனர். (ம-250-281)

## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

(சு-1295)

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us cnrworldwideexpress

## புதிய வருடத்தில் புதிய வாய்ப்புகள்

எமது நிறுவனமான Everest Pvt Ltd,கம்பனியானது தனது புதிய கிளை நிறுவனத்திற்காக 06 விதமான வேலைகளிற்கு 20 பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஆர்வமுள்ள ஆண் பெண் இரு பாலாரும் தொடர்பு கொள்ளவும்.

தகைமை: O/L,A/L படித்தவர்கள்
வயதெல்லை: 40 வயதிற்கு உட்பட்டவர்கள்

EPF, ETF, Medical போன்ற வசதிகளும், தங்குமிடம் மற்றும் உணவு வசதிகளும் ஒழுங்கு செய்து தரப்படும்.

No.179, Hospital Rd, Jaffna.

**தொடர்பு: 0779858580, 0775179034**

(2484)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

புளியங்கூடல் அம்மன் கோவிலுக்கு அருகாமையில் 3 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு: 076 423 5603**

(2418)

## ACCOUNTING PERSONAL CLASSES

A/L 2018 மாணவர்களுக்கு முழுமையான பாடத்திட்ட மீட்டல், பயிற்சிகளுடன், 500MCQ வினாக்களும் அனுபவம்மிக்க பிரபல்ய பாடசாலை ஆசிரியரினால் கற்பிக்கப்படும்.

**தொடர்பு:0771235671**

(2492)

## வேலையாட்கள் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள உணவகமொன்றுக்கு சைவ, அசைவ உணவு தயாரிப்பதற்கு சமையலாளர்கள் தேவை.

**தொடர்பு: 077 764 2009**

(2444)

## காணி விற்பனை

திருநெல்வேலி சந்திக்கும் கல்வியங்காட்டு சந்திக்கும் இடைப்பட்ட இராம சாமி பரிகாரி சந்தியில் இருந்து 10 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 076 569 7586, 077 029 2546**

(2478)

## 9வது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

வடக்கிற்கான உங்களது நுழைவாயில்




JITF 2018
9TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR

26 27 28 ஜனவரி JANUARY
10.00 am - 8.00 pm
யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்
Municipal Grounds - Jaffna

- வடக்கில் இடம்பெறுகின்ற மிகவும் விரிவான மற்றும் இலக்கு நோக்கிய ஒரு கண்காட்சி
- முக்கிய அதிகாரிகளுடன் நேரடி சந்திப்புக்கள் மற்றும் உரையாடல்
- சராசரியாக எமது பார்வையாளர்களில் 70% ஆனோர் கண்காட்சியாளர்களுடன் தமது நேரத்தைச் செலவிடுகின்றனர்

- மோட்டார் வாகனத் தொழிற்துறை மற்றும் உபகரணம்
- உணவு, பான வகை மற்றும் பொதியிடல் தொழிற்துறை
- பிரயாணம் மற்றும் சுற்றுலாத் தொழிற்துறை
- நுகர்வோர் பொருட்கள்
- ஆடைத் தொழிற்துறை
- விவசாய தொழிற்துறை
- நிர்மாண தொழிற்துறை
- நிதியியல் சேவை நிறுவனங்கள் மற்றும் பல

காட்சிக்கூட பதிவுகளுக்கு அழைக்கவும்
**+94 71 7488107**

jitf.lk www.jitf.lk

ORGANIZED BY LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
IN ASSOCIATION WITH CCIY
MAIN SPONSOR S-Lon

OFFICIAL PARTNERS
ORGANIZED BY LECS | IN ASSOCIATION WITH CCIY | SUPPORTED BY ASSOCHAM | ENDORSED BY | PARTNER COUNTRY

(2404)

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-1228)



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

**V2 TRAVELS-0768226240**

- யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
- பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## அண்ணா வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை



EXPRESS Courier Services

அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | வேலணை | சாவகச்சேரி | மிசாலை
முல்லைத்தீவு | கிளிநொச்சி | வவுனியா | திருகோணமலை

(C-1243)

## Vacancies

**Web Designer (6)**
Adobe photoshop, HTML, CSS knowledge of flash Cs3 /Cs4 & Action scripting (2.0/3.0) Minimum 1 year work experience

**Web Developers.(4)**
PHP, Java script, Ajax, CSS, HTML, XHTML Good knowledge in handling CMS (Joomla, Wordpress Admin Customization) Minimum 1 year Work experience.

**Marketing Executive (2)**
Business or marketing related professionals Qualification. Good computer knowledge and presentation skills. Fluent written and verbal communication in English

(C-1272)

**Email your CV with 2 nonrelated referees on or before 31st January 2018 info@egait.com**

## TECHNO WORLD

(பெருமாள் கோவில் வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்)

**A/L தொழில்நுட்பப் பிரிவு**

A/L 2020 Day:
திங்கள் - வெள்ளி 8.00 - 12.00
A/L 2018, 2019:
திங்கள் - வெள்ளி 3.30 - 5.00
A/L 2020, 2019, 2018 Day
சனி, ஞாயிறு - 8.00 - 1.30

**தொடர்பு: 077 017 5346**

(C-1296)

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கிவரும் சைவ உணவகம் ஒன்றிற்கு புதிய வடிவமைப்பினை செய்வதற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை.

1. பில் கிளாக்
2. உணவு பரிமாறுபவர்கள் (சப்பிளையர்)
3. சமையல் உதவியாளர்
4. தேநீர் தயாரிப்பாளர்
5. சுத்திகரிப்பாளர்
6. சமையலறை வேலையாட்கள் (ஆண்கள்)

**தொடர்புகளுக்கு: 077 791 7753, 075 530 4521**

(2488)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்


# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 151

வள்ளுவர் ஆண்டு 2048 21.01.2018 தொலைபேசி : 021 222 3378





# மீண்டும் உத்வேகம்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## ஆலடியில் நடந்த விசித்திரமான தேர்தல் பிரசாரக் கூட்டம்

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

இறைவணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர். ஆலடிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள சனசமூக நிலையத்தின் மைதானத்தில் தேர்தல் பிரசாரக்கூட்டம் ஏற்பாடாகி இருந்தது. அதிலும் இரண்டு பக்கத்தில் இரண்டு அரசியல் கட்சிகளின் பிரசாரக் கூட்டமாக அது இருந்தது.

எப்படி இந்தப் பிரசாரக் கூட்டத்தை நடத்தப் போகினம், இரண்டு தரப்பும் ஒலிபெருக்கியில பேசினால் சனங்களுக்கு ஒன்றும் விளங்காது என்று கங்காணி கார்த்திகேயன் கூற,

கங்காணியார் இந்தப் பிரசாரக் கூட்டம் ஒருவர் பேசியதற்கு மற்றவர் பதில் அளிப்பது போல அமைந்துள்ளது என விதானையார் விசுவலிங்கம் விளக்கம் கொடுத்தார்.

அப்ப இன்றைக்கு ஆலடி மாநாடு நடந்த மாதிரித் தான். சாத்திரியார் சதாசிவத்தின் முணுமுணுப்பு ஆலடியில் சிரிப்பை ஏற்படுத்திற்று.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் எத்தகைய பிரசாரங்களைச் செய்கினம் என்று பார்ப்பம் என மாநாட்டுத் தலைவர் வாத்தியார் வைத்திலிங்கம் கூற, ஆலடியில் அமைதி நிலவிற்று.

ஆலடி மாநாட்டில் அமைதி நிலவ, அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரசாரமும் ஆரம்பமாகிற்று. அரசியல் வாதிகளின் உரைகளுக்கு முன்னதாக **வெற்றியின் நாளை சரித்திரம் சொல்லும் இப்படை தோற்கின் எப்படை வெல்லும்** என்ற பாடல் ஒலிக்கவிடப்பட்டிருந்தது. பாடல் முடிந்த கையோடு அறிவித்தல் ஒலிபெருக்கியில் வந்தடைகிறது.

அன்பார்ந்த தமிழ் மக்களே! பொதுமக்களே பிள்ளையார் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் ஒரு வித்தியாசமான தேர்தல் பிரசாரம்.

இரண்டு அரசியல் கட்சிகள் பிரசாரம் செய்கின்றன. அரசியல் கட்சி ஒன்று, அரசியல் கட்சி இரண்டு என்பதாக அவற்றின் பிரசாரம் அமையும். ஒருவரின் கருத்துக்கு மற்றவரின் மறுப்பாக இந்தப் பிரசாரம் தொடரும். இது சனசமூக நிலையச் செயலாளரின் அறிவிப்பு.

அவரின் அறிவிப்பு இதோ! பிரசாரக் கூட்டம் ஆரம்பமாகின்றது என்பதுடன் நிறைவுபெற தேர்தல் பிரசாரம் தொடங்கிற்று.

**அரசியல் கட்சி:1**

அன்பார்ந்த தமிழ் மக்களே! நாங்களே ஏகப் பிரதிநிதிகள். உங்களுடன் என்றும் இருப்பவர்கள். எங்களுக்கு நீங்கள் வாக்களிக்காவிட்டால் தீர்வுத் திட்டம் இல்லாமல் போய் விடும். ஆகையால் உங்கள் வாக்கு எங்களுக்கே.

**அரசியல் கட்சி: 2**

இலங்கை அரசுடன் சேர்ந்து உப்புச்சப்பற்ற தீர்வைக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கின்ற நீங்களா தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள்?

உங்களுக்கும் இலங்கை ஆட்சியாளர்களுக்கும் உள்ள தொடர்பு என்ன? சர்வதேச போர்க்குற்ற விசாரணை முடிந்து விட்டது என்று நீங்கள் கூறினீர்களே அது எதற்காக? யாரைக் காப்பாற்றுவதற்காக? ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குச் சென்று தமிழ் மக்களின் பிரச்சினையை எடுத்துரைத்தவர்கள் நாங்கள். எப்போதும் கொள்கையுடன் நிற்பவர்கள். உங்களைப் போல் நாங்கள் தமிழ் மக்களை ஏமாற்றுபவர்கள் அல்ல.

**அரசியல் கட்சி: 1**

சிங்கள மக்கள் குழப்பமடையக்கூடாது என்பதற்காகவே எக்கிய ராச்சிய என்ற சொற்பதத்தை ஏற்றுக் கொண்டோம். இடைக்கால வரைபில் எல்லாம் இருக்கிறது. தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான தீர்வு கிடைக்கின்ற சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. எங்களுக்கு நீங்கள் வாக்களிக்கா விட்டால் தீர்வுத் திட்டம் அப்படியே அழிந்து போய் விடும்.

**அரசியல் கட்சி: 2**

இடைக்காலத் தீர்வுக்குள் சமஷ்டி இருக்கிறது என்று கூறிய நீங்கள் இப்போது எக்கியீ ராச்சிய என்பதை ஏற்றுக்கொண்டது சிங்கள மக்கள் குழப்பமடையக் கூடாது என்பதற்காக என்று கூறுகிறீர்களே உங்களுக்கு வெட்கம் இல்லையா? ரோசம் இல்லை? சிங்களத்தில் பயன்படுத்தப்படும் சொற்பதமே சட்டரீதியில் ஏற்றுக் கொள்ளப்படும். சிங்களத்தில் எக்கிய ராச்சிய என்று சொல்லப்படுவது ஒற்றையாட்சியை.

ஆனால் நீங்கள் ஒற்றையாட்சியில்லை என்று கூறித் தமிழ் மக்களை ஏமாற்றப் பார்த்தீர்கள். நாங்கள் இல்லை என்றால் எங்கள் மக்களை ஏமாற்றியிருப்பீர்கள்.

எக்கிய ராச்சிய என்றே இடைக்கால வரைபின் சிங்கள மொழிவடிவத்தில் கூறப்பட்டிருக்கிறது என்று நாம் மக்களுக்குத் தெரியப் படுத்தியதால்தான் நீங்கள் இப்போது அதை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். தமிழ் மக்களுக்கு உண்மையைச் சொல்லாமல் மறைப்புச் செய்வதனூடாக நீங்கள் யாருக்கு உதவ முற்படுகின்றீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். நீங்கள் சிங்கக் கொடியை-தேசியக் கொடியைத் தூக்கிய போதே எங்களுக்குத் தெரியும் நீங்கள் எந்தப் பக்கம் என்று.

**அரசியல் கட்சி: 1**

எங்கள் தலைவர் சிங்கக் கொடியைத் தூக்கியது தற்செயலானது. திருகோணமலை காளி அம்மன் மீது கொண்ட அளவு கடந்த பக்தி காரணமாக தேசியக் கொடியில் இருக்கும் வாள் ஏந்திய சிங்கம் எங்கள் தலைவருக்கு காளியம்மனின் வாகனமாகத் தெரிய அவர் சிங்கக் கொடியை ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து தூக்கிப் பிடித்தார்.

எக்கிய ராச்சிய என்று சிங்கள மொழியில் இருந்தாலும் அது ஒற்றையாட்சியல்ல. சமஷ்டி தான். தமிழ் மக்களுக்கு எல்லா உரிமையும் தருவதற்கு நல்லாட்சி உடன்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் அவற்றை இரகசியமாக வைத்துள்ளார்கள். சிங்கள மக்கள் குழம்பிவிடக் கூடாது என்பதற்காகவே இப்படியொரு ஏற்பாடு.

**அரசியல் கட்சி:2**

பொய்... பொய்... பச்சைப் பொய்... சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை. வடக்கு-கிழக்கு ஒருபோதும் இணையாது என்று ஜனாதிபதி மைத்திரி வெளிப்படையாகக் கூறிய பின்னரும் நீங்கள் ஒற்றையாட்சி இல்லை எனக் கூறுவது தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கே. அரைகுறைத் தீர்வு தமிழ் மக்கள் தொடர்ந்தும் பிரச்சினைகளுடனும் ஏக்கத்துடனும் வாழ்வதற்கே வழி வகுக்கும்.

அன்பார்ந்த தமிழ் மக்களே அரசியல் கைதிகளை விடுவிக்க முடியாத இவர்கள், காணாமல் போனவர்கள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாத இவர்களுக்கு நீங்கள் வாக்களிக்கப் போகிறீர்களா? அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்துங்கள். அரசியல் மாற்றம் ஏற்படாவிட்டால் எங்கள் தமிழினத்தின் இருப்பு என்பதே கேள்விக் குறியாகி விடும். இலங்கையில் இருந்து தமிழினத்தின் இருப்பை இல்லாமல் செய்வதற்கான ஏற்பாடுகளில் பேரினவாத சக்திகள் முனைப்புக் காட்டி வருகின்றன.

இதற்கு தமிழ் அரசியல் வாதிகளும் காரணமாக இருப்பதால் அரசியலில் மாறத்தை ஏற்படுத்துங்கள்.

அன்பார்ந்த தமிழ் மக்களே ஒரு தடவை நீங்கள் மாற்றத்தை ஏற்படுத்தினால் நீதி பிறக்கும் எங்கள் இனம் காப்பாற்றப்படும்...

இப்படியாக தேர்தல் பிரசாரக் கூட்டம் தொடர் ந்து கொண்டே இருக்க, ஆலடி மாநாட்டில் இருந்தவர்கள் தேர்தல் பிரசார உரைகளை மிகவும் உன்னிப்பாக கேட்டுக்கொண்டிருந்தனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் பேரவைக்கு அசைக்க முடியாத மக்கள் ஆதரவு

முப்பது ஆண்டுகால மண் மீட்புப் போருக்குப் பின்னர்- விடுதலைப் புலிகளின் தோல்விக்குப் பின்னர் தமிழ் மக்களுக்கு நல்லதோர் அரசியல் தலைமை கிடைக்கவில்லை என்பது நிறுத்திட்டமான உண்மை.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கைப் படையினருக்குமிடையில் நடந்த இறுதி யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிரிழந்தனர், சொத்துக்கள் அழிந்து போயிற்று இவற்றின் விளைவாக இளம் விதவைகளின் தலையில் குடும்பச் சுமை ஏறிக்கொண்டது. பெற்றோரை இழந்த பிள்ளைகள் அநாதைகள் என்ற பெயரோடு சிறுவர் இல்லங்களில் தஞ்சமடைந்தனர்.

இவைதவிர, போருக்குப் பின்பான சமூகப் பிறழ்வுகள் என ஏகப்பட்ட வலிகளும் துன்பங்களும் எம் மண்ணில் பெருகிற்று.

எனினும் தமிழ் மக்களின் அரசியல் தலைமை என்று கூறிப் பதவிகளை பெற்றுக் கொண்டவர்கள், தங்களின் குடும்பம் தங்களின் சொந்த வாழ்வு என்பவற்றுடன் மட்டுப்படுத்திக் கொண்டு அரசுடன் இணைந்து சுகபோக வாழ்வை அனுபவிப்பவர்களாக மாற்றம் பெற்றனர்.

அரசுடன் இணைந்து அவர்கள் கொடுக்கின்ற உதவிகளைத் தாராளமாகப் பெற்றுக்கொண்டு டாம்பீகமான வாழ்வுக்குள் நுழைந்தபோது, போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அவலங்களைப் புரிந்துகொள்கின்ற மனநிலை தமிழ் அரசியல் தலைமையிடம் இல்லாமல் போயிற்று என்பதே உண்மை.

இதன் காரணமாக சிங்களப் பேரினவாதிகள் போல இவர்களும் தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சினை என்று கேட்கின்ற அளவில் மாறிக்கொண்டனர்.

நிலைமை இதுவாக இருக்கையில் தமிழினப் பற்றுடைய பொது அமைப்புக்கள், புத்திஜீவிகள், மத்தியில் தமிழினம் குறித்த கவலை கடுமையாக இருக்கவே செய்தது.

தமிழ்த் தலைமை தவறான பாதையில் பயணிக்கின்றது.

அவர்களில் முக்கியமான ஒருசிலர் அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டு தமிழினத்திற்கு விரோதமாகச் செயற்படுகின்றனர் என்ற உண்மையை உணரத் தலைப்பட்டனர்.

எனினும் தமிழ் மக்கள் தமிழ் அரசியல் தலைமை அவ்வாறு செயற்படாது என்று நம்பினர்.

யுத்தத்தின் இழப்பும் போராட்டத்தின் தோல்வியும் காரணமாக தமிழ்த் தலைமை ஒரு புதுவியூகம் அமைத்துச் செயற்படுவதாகவே அவர்கள் முடிவு செய்தனர்.

அரசுடன் இணைந்து போதல் அல்லது விட்டுக் கொடுக்க வேண்டிய இடத்தில் விட்டுக்கொடுத்தல் என்ற அணுகுமுறையை தமிழ் அரசியல் தலைமை பின்பற்றுவதாக நினைத்த தமிழ் மக்கள் தீர்வு விடயத்திலும் பொறுமை தேவை என நினைத்துக் கொண்டனர்.

ஆனால் சிலரை சில காலம் ஏமாற்றலாம். பலரை பல காலம் ஏமாற்ற முடியாது என்பதற்கு அமைய தமிழ் அரசியல் தலைமையின் போக்கில் தமிழ் மக்கள் சந்தேகம் கொள்ளத் தலைப்பட்டனர்.

சர்வதேச போர்க்குற்ற விசாரணை முடிந்து விட்டது என்ற தகவல் எப்போது தமிழ் அரசியல் தலைமையால் தெரிவிக்கப்பட்டதோ அன்று ஓகோ! நாங்கள் ஏமாற்றப்படுகின்றோம்.

எங்களை எங்கள் அரசியல் தலைமை ஏமாற்றுகின்றது என்ற உண்மையை தமிழ் மக்கள் தெரிந்து கொண்ட போது மாற்றுத் தலைமை அல்லது மக்கள் இயக்கம் தேவை என்ற முடிபுக்கு வந்தனர்.

அதேவேளை வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் சொந்த அரசியல் நலன் என்பதை புறந்தள்ளி தமிழ் மக்களின் அவலத்தை வெளிப்படுத்தியே ஆக வேண்டும் என்ற திடத்துடன் தனது பணியை முன்னெடுத்தார்.

இச் சந்தர்ப்பத்தில் தான் தமிழ் மக்கள் பேரவை என்ற மக்கள் இயக்கம் உதயமாகிறது.

தமிழ் மக்களின் நலனை கவனிப்பதற்கும் உரிமையை வலியுறுத்துவதற்குமான பொது அமைப்பை உருவாக்க வேண்டும் எனப் பலர் முயற்சித்த போதிலும் அவை பயனளிக்காத நிலையில் தமிழ் மக்கள் பேரவை என்ற மக்கள் இயக்கம் இறையருள் சக்தியுடன் பிரவாகம் பெற்றது போல உதயமாகிற்று.

இதன் இணைத் தலைவராக வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பதவி ஏற்றார்.

அதுவே அவருக்கு பலமான மக்கள் செல்வாக்கைப் பெற்றுக் கொடுத்தது. தமிழ் மக்கள் பேரவை நடத்திய எழுக தமிழ் எழுச்சிப் பேரணி ஒரு வரலாற்றுச் சிறப்பம்சமாயிற்று.

தமிழ் மக்களை இனியும் ஏமாற்ற முடியாது. தமிழ் அரசியல் தலைமையை நம்பினால் நம் கதி நடுத்தெரு என்று இலங்கை அரசு வரும் அளவுக்கு நிலைமை மாறியது.

அரசியல் தீர்வு என்று சர்வதேசத்தை சமாளிப்பதற்காக வெளியிடப்பட்ட இடைக்கால வரைபு சமஷ்டியை தருவதாக அல்லது சமஷ்டிக்கு மேலான உரிமைகளைத் தருவதாக தமிழ் அரசியல் தலைமை கூறியது.

இச்சந்தர்ப்பத்தில் இடைக்கால வரைபு சிங்களத்தில் எவ்வாறு கூறுகிறது எனக் கேள்வி எழுப்பிய போது சிங்கள மக்களைச் சமாளிப்பதற்காக ஒற்றையாட்சி என்ற பொருளைத் தரும் சிங்களச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது என தமிழ் அரசியல் தலைமை கூறியது.

இதுவே தமிழ் மக்களின் இயக்கமான பேரவையின் முதல் வெற்றி எனலாம்.

இந்நிலையில் இடைக்கால வரைபு குறித்தும் தமிழ் மக்களுக்கு சாதகமாக இருக்கக்கூடிய சர்வதேச சட்டங்கள் தொடர்பிலும் ஒரு பெரும் கருத்தாடல் நிகழ்வை தமிழ் மக்கள் பேரவை ஏற்பாடு செய்தது.

*16.01.2018* அன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் சட்டத்துறை பேராசிரியர் மு.சொர்ணராஜா, யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத் துறைத்தலைவர் கு.குருபரன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.



இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் ஊடகங்களில் மட்டுமே செய்யப்பட்ட அறிவித்தலை சிரமேற்கொண்டு கருத்தரங்கில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டது தான்.

ஆக, ஒட்டுமொத்தத்தில் தமிழ் மக்கள் பேரவையின் மாபெரும் சக்தியாக தமிழ் மக்கள் இருக்கின்றனர் என்பது மீண்டும் ஒரு தடவை உறுதி செய்யப்பட்டுள்ளது. இது பேரவையின் செயற்பாட்டுக்கு உத்வேகம் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

**விதுரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

## விதியை மாற்றியமை



ஒரு முறை ராஜா எதிரிகளை தாக்க ஓர் இராணுவப் படை ஒன்றை தயார் செய்து போருக்கு தயாரானார். அவர் "எப்படியும் இந்தப் போரில் வெற்றி பெறுவோம்" என்று நம்பிக்கையுடன் இருந்தார். ஆனால் அந்த படையினரோ பெரும் சந்தேகத்துடனேயே இருந்தனர். அனைவரும் சோர்ந்து போய் நம்பிக்கையின்றி இருந்தார்கள்.

இதனால் அந்த ராஜா தன் படை வீரர்களுக்கு தைரியத்தை வரவழைக்க என்ன செய்யலாம் என்று ஒரு ஜென் துறவியைப் பார்த்து, கேட்கச் சென்றார்.

அப்போது அந்தத் துறவி ராஜாவிடம் ஒரு யோசனையைச் சொன்னார். அதேபோல் ராஜாவும் செய்தார். அது என்னவென்றால்,

அந்த ராஜா போர் செல்லும் வழியில், அவர்கள் குல தெய்வ கோவிலில் நிறுத்தி பிரார்த்தனை செய்து விட்டு ஒரு நாணயத்தை எடுத்து வீரர்களின் முன் காண்பித்து "நான் இப்போது இந்த நாணயத்தை சுழற்றி விடுவேன், தலை விழுந்தால் நாம் வெற்றி பெறுவோம். இல்லையேல் போரில் தோற்போம்" என்று துறவி சொன்னதைச் சொன்னார்,


வீரர்களிடம் "நம் தலைவிதியை இந்த நாணயம் நிர்ணயிக்கட்டும்" என்று கூறி நாணயத்தை சுழற்றினார். அனைவரும் அதை கூர்ந்து கவனித்தனர்.

அப்போது தலை விழுந்தது. அதனால் அந்த வீரர்கள் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்று நம்பிக்கையுடனும் சந்தோசத்துடனும் எதிரிகளை தாக்கத் தயாரானார்கள்.

யுத்தத்தில் வெற்றியும் பெற்றனர். யுத்தத்திற்கு பின்னர், துணை அமைச்சர் "விதியை யாராலும் மாற்ற முடியாது" என்று ராஜாவிடம் சொல்ல "ஆம், என்று ராஜா சொல்லி அந்த நாணயத்தின் இரு பக்கத்திலும் தலை இருப்பதை" காண்பித்தார்.

நம்பிக்கையுடன் செயற்பட்டால் எத்தகைய காரியத்தையும் எளிதில் வெல்லலாம், விதியையும் மாற்றி அமைக்கலாம்.

## வாசிப்பு



தகவல் பெறுவதற்கு மிக முக்கியமான ஒரு வழி வாசிப்பு ஆகும். ஆகவே ஏனைய அனைத்துக் கல்விசார் திறன்களுக்கும் அடிப்படையானது வாசிப்பு என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும். வாசிப்பு ஒரு மனிதனை விடயம் தெரிந்த, அறிந்த அறிவு பெற்ற மனிதனாக உருவாக்கும். ஒரு மனிதன் தான் வேலை செய்யும் இடத்தில் திறன்பட செயற்படுத்துவதற்கும் வினைத் திறனுடன் வேலை செய்வதற்கும் வாசிப்பு அவசியம். தற்கால உலகத்தில் திறமையாகத் தொழிற்படுவதற்கு வாசிப்பு ஒரு அடிப்படை தேவையாகும். இவ்வடிப்படைத் திறனில்லாவிடின் விரக்தி, கோபம்,பயம் போன்ற உளரீதியான பாதிப்புகள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. சிறந்த உள விருத்திற்கு வாசிப்பு அவசியமாகும்.

ஒரு நல்ல தொழிலைப் பெறுவதற்கும் அதிக வாசிப்புப் பழக்கம் உறுதுணையாக இருக்கும். குறைந்த வாசிப்புத் திறனுள்ளவர்களால் ஒரு விடயத்தை கிரகிப்பதற்கும் ஓர் அறிக்கைச் செய்தியை வாசித்து விளங்குவதற்கும், பதிலளிப்பதற்கும் அதிக நேரத்தை செலவிட வேண்டி ஏற்படும்.

போதிய வாசிப்பும் கிரகித்தலும் இன்றேல் ஒரு தனி நபரின் அடைவு மட்டம் குறைவாகவே இருக்கும்.

(தொடரும்)

## ஒழுக்கம் உடைமை



**1. ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும். 131**
ஒழுக்கமே எல்லார்க்கும் மேன்மையைத் தருவதாக இருப்பதால், அந்த ஒழுக்கமே உயிரை விடச் சிறந்ததாகப் போற்றப்படும்.


**2.பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்**
**தோம்பித் தேரினும் அஃதேதுணை. 132**
ஒழுக்கத்தை வருந்தியும் போற்றிக் காக்க வேண்டும் பலவற்றையும் ஆராய்ந்து போற்றித் தெளிந்தாலும், அந்த ஒழுக்கமே வாழ்க்கையில் துணையாக விளங்கும்.

**3.ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும். 133**
ஒழுக்கம் உடையவராக வாழ்வதே உயர்ந்த குடிப்பிறப்பின் தன்மையாகும் ஒழுக்கம் தவறுதல் இழிந்த குடிப்பிறப்பின் தன்மையாகி விடும்.

**4.ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்**
**தின் எய்துவர் எய்தாப் பழி. 137**
ஒழுக்கத்தால் எவரும் மேம்பாட்டை அடைவர். ஒழுக்கத்திலிருந்து தவறுதலால் அடையத் தகாத பெரும் பழியை அடைவர்.

**5.அழுக்கா(று) உடையான்கண் ஆக்கம்போன்(று)**
**இல்லை ஒழுக்கம் இலான்கண் உயர்வு 135**
பொறாமை உடையவனிடத்தில் ஆக்கம் இல்லாதவாறு போல, ஒழுக்கம் இல்லாதவனுடைய வாழ்க்கையில் உயர்வு இல்லையாகும்.

## தோமஸ் அல்வா எடிசன்



(01.07.2018 தொடர்ச்சி)

தலை பெரிதாக இருந்ததால், 'மண்டு, மூளை வளர்ச்சி குறைந்தவன்' என ஆசிரியரும் மாணவர்களும் கிண்டல் செய்யவே, பள்ளிப் படிப்பை நிறுத்தி விட்டு தாயிடமே பாடம் பயிலத் தொடங்கினான் சிறுவன் தோமஸ். ஊரில் விளையும் பொருட்களை புகை வண்டியில் நகரத்துக்குக்கொண்டுசென்று விற்பனை செய்தும், நகரத்தில் இருந்து பத்திரிகைகள் வாங்கி வந்து மற்ற ஸ்டேஷன்களில் விற்பனை செய்தும் சம்பாதித்தான். உள்நாட்டுப் போர் காரணமாக, பத்திரிகைகளுக்கு நல்ல வரவேற்பு இருப்பதை அறிந்து, ரயில்வே அதிகாரிகளின் உதவியுடன் புகை வண்டியிலேயே இயந்திரத்தை வைத்து, நகரத்துச் செய்திகளை அச்சடித்து 'வீக்லி ஹெரால்ட்' பத்திரிகையை விற்கத் தொடங்கினான். ஆசிரியர், அச்சடிப்பவர், விற்பனையாளர் என எல்லா வேலையையும் செய்த எடிசனுக்கு அப்போது வயது 15. எடிசன் தன் முதல் கண்டுபிடிப்பாக 1868இல் பதிவு செய்த 'வாக்குப்பதிவு இயந்திரம்' அரசினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. தந்தி மற்றும் பங்குச் சந்தை சாதனங்களைத் தொடர்ந்து மின்சார விளக்கைக் கண்டுபிடித்ததும், உலகமே இவரைத் தலையில் வைத்துக் கொண்டாடியது. பாடும் மற்றும்பேசும் ஃபோனோகிராஃப் இயந்திரம் இவரை பெரும் கோடீஸ்வரனாக்கியது. ஒலியைப்போலவே ஒளியையும் பதிவு செய்ய முடியும் என 'சினிமாவைக் கண்டுபிடித்ததும், 'கண்டுபிடிப்புகளின் தந்தை' எனப் புகழாரம் கிடைத்தது! 1914ஆம் வருடம் அவரது சோதனைச் சாலையில் மிகப் பெரிய தீ விபத்து ஏற்பட்டது. ஆறுதல் சொல்ல வந்த நண்பர்களைப் பார்த்து, "தீ எவ்வளவு அழகாக எரிகிறது பாருங்கள். இரசாயனப் பொருட்களைத் தவறான விகிதத்தில் கலந்து விட்டேன் என்பதை, 67 ஆவது வயதில் எனக்குக் கற்றுக் கொடுத்த இந்த தோல்வியும் எனக்குப் படிப்பினையே" என்றார் எடிசன் சிரித்தபடி. தனது 81ஆவது வயதில் மரணமடையும் வரை 1,093 கண்டுபிடிப்புக்களை எடிசன் பதிவு செய்ய முடிந்ததற்குக் காரணம், தோல்விகளை வீழ்ச்சியாகக் கருதாத இவரது தன்மையே!

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3.2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



### வேட்பாளர்கள் மூலைக்கு மூலை உள்ளார்களே?

**சுதன்** குளப்பிட்டி

**யாழ்ப்பாணத்தில் குற்றங்கள் அதிகரிக்க காரணம்?**

எம் பண்பாடு கலாசாரம் எவ்வளவு கட்டுக் கோப்பாக இருந்ததோ அவ்வளவுக்கு கட்டவிழ்ந்து கெட்டுக்குட்டிச்சுவராய்ப் போய்க் கொண்டிருக்கிறது. போதையின் உச்சப்பிடியில் சிக்கிய இளைஞர் களை அதிலிருந்து மீட்கத் தவறுவோமாக இருந் தால் அது எம் இனத்தின் இருப்பை கேள்விக்குறி யாக்கும் என்பது நிறுத்திட்டமான உண்மை.

**மைத்திரி** யாழ்ப்பாணம்

**பிணைமுறி மோசடியுடன் எல்லாம் முறிந்து விட்டதாமே?**

மீனின் நடுத்துண்டை முறி என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அதற்காக அம்மா விடம் நானும் அண்ணனும் தங்கையும் சண் டைபோட்டிருக்கிறோம். அதுபோலத் தான் இந்த முறியும். முறிக்கு ஆசைப்பட்டு முறிந்து விட்டது என்பதுதான் உண்மை.

**நந்தகுமார்** மானிப்பாய்

**நீங்கள் அரசியலில் குதிப்பீர்களா?**

நீச்சல் தெரியும் என்பதற்காக பாழாங் கிணற் றில் குதித்தால் நிலை என்னவாகும். குதிக்க வேண்டும் என்று முடிவெடுத்தவுடனேயே குதித்து விடக்கூடாது. கொஞ்சம் அலசி ஆராய்ந்து விட்டு குதித்தால் காலுக்கு நல்லது.

**கலைவாணி** சாவகச்சேரி

**அன்பின் வழியும் வலிமையும் எப்படி இருக்கும்?**

கடவுளுக்கும் பக்தனுக்குமிடையிலான உறவு. காற்றாய், ஒலியாய், எண்ணத்தில் தோன்றும் உருவமாய் எண்ணும் கடவுளிடத்தே எப்படி அன்பு பொங்கி எழுகிறதோ. அதை வார்த்தை களால் வர்ணித்து விட முடியாது. இந்த அன்பின் வலிமையை எந்த சக்தியாலும் உணர்ந்து விடவோ உலுக்கி விடவோ முடியாது

**தனகோபி**

**தேர்தலில் வியாசர் நிற்பதாக கேள்வி பட் டோம் உண்மையா?**

தம்பி கோபி பல கட்சிகள் கேட்டு வந்தவை தான் இந்த தேர்தலில வெண்டா வருச கோட்டா, வாகனப் போமிட் இன்னும் பல அண்டதடீல் ஒதுக்கீடுகள் ஒன்றும் இல்லை என்று உள்ளாலை அறிஞ்சன் அதால நிற்கேல்லை. அடுத்து வாற பாராளுமன்ற, ஜனாதிபதி இப்படி கொஞ்சம் பெரிய தேர்தலா ரை பண்ணுவம் எண்டு தான்.

**சயன்** யாழ்ப்பாணம்

**தமிழனுக்கு விடிவு கிடைக்க வேண்டுமென்றால்?**

ஒரு சில பெரிசுகளை பாராளுமன்றத்திலி ருந்தும் ஒன்றிரண்டு சிறிசுகளை மாகாண சபையில் இருந்தும் வீட்டுக்கு அனுப்பினால் எல்லாம் சரி வரும்.

### யாழ்ப்பாணத்தில் குற்றங்கள் அதிகரிக்க காரணம்?

**சுதன்** குப்பிளான்

**வீட்டுக்கு வீடாய் இம்முறை இறங்கி போவது ஏன்?**

அண்மையில் முகப்புத்தகத்தில் ஒரு பதிவை பார்த்தேன். வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் போட்டிருந்த பதிவு, சின் னத்தைப் பார்க்காதீர்கள் நல்லெண்ணத்தைப் பாருங்கள். அட நாசமறுக்க வீட்டுக்கு இந்த நிலை வந்துட்டுதே எண்டும் சொக்காய்ப் போயிட்டு எனக்கு.

**குமார்** சுழிபுரம்

**வீட்டு மதில்கள் சுவரொட்டிகளால் அசிங்கப்படு கிறதே?**

தம்பி இது தேர்தல் காலம் ஆடு, மாடு, கழுதை எண்டு ஐந்தறிவு ஜீவன்களுக்கு உணவளித்து புண்ணியம் தேடுற நேரம் இது.

அதனால இது அசிங்கம் இல்லை அமைதியா இரும். ஐந்தறிவு ஜீவன்கள்தானே ஒட் டுறதும் தின்னுறதும். அதனால் பொறுமை காக்க.

**மாயவன்** கைதடி

**வேட்பாளர்கள் மூலைக்கு மூலை உள் ளார்களே?**

இப்போது மூலைக்கு மூலை வென்றபின் மாலைக்கு மாலை சென்றபின் மாதத்திற்கு மாதம் பின்பு விழாக்களுக்கு மட்டும் அதன் பின்பு வருடத்திற்கு ஒருமுறை அட அதற்கிடை யில் அடுத்த தேர்தல் வந்து விடும்.
என்னது மறுபடியும் முதல்ல இருந்தா?

### பெண்ணின் கடைக்கண் பார்வைக்கு காதல் என்று பொருளா?




**மது** கரவெட்டி

**பெண்ணின் கடைக்கண் பார்வைக்கு காதல் என்று பொருளா?**

நாசமறுக்க. அது உன்னைக் கண்டு தாவ ணியைஎடுத்து கழுத்தில போட்டிருந்த சங்கிலியை மறைச்சுக் கொண்டு பார்த்த பார்வை, காதல் பார்வை போல கிடக்கோ தம்பிக்கு.

**அன்பு** மானிப்பாய்

**மாயை என்பதற்கு சிறந்த உதாரணம்?**

2013,2014,2015 இப்படி ஒவ்வொரு வருடமும் தீர்வு வரும் என்று ஐயா சபதம் விடுவதும் ஒன்றும் இல்லாத தீர்வுத் திட்டத்தில் எல்லாம் இருக்கு என்று அறிக்கை விடுவதும். நடக்காத போர்குற்ற விசாரணை நடந்து விட்டதாக நாடகமாடுவதும். நல்லாட்சியை இறுக்கப் பற்றிக் கொண்டு தீர்வு தராவிட்டால் விலகுவோம் என நாக்கூசாமல் பேசுவதும் இப்படி மாயைக்கு பல பல உதாரணங்களைச் சொல்லலாம் ஆனால் இந்த இடம் போதாதே.

## வியாசரின் வியாக்கியானம்



என்னதான் கருத்துச் சொன்னாலும் மற்றவயின்ர காது கிழியக் கத்தினாலும் அது செவிடன் காதில ஊதின சங்கு மாதிரித்தான். அட சரி எந்த நாய் எந்தப் பொட்டை புகுந்தால் நமக்கென்ன எண்டு இருப்பமெண்டு பாத்தா, அதுக்கு மனமும் கேக்குதில்லை.

கண்ட கண்ட நாய்கள் பூருற பொட்டு முழுக் கலும் நாச மறுந்த நம்மட கண்ணுக்குத் தான் தெரியுது. இது தேர்தல் காலம் என்ற [illegible] கண்ட நிண்ட கத்தல் முழுதும் நம்மட காதிலதான் விழுகுது போல. அட நடக்கப் போறது உள்ளூராட்சி சபைத் தேர்தல், அதிலை வென்றால் தங்கட பிரதேசத்துக்கு என்னென்ன செய்ய வேணும் எண்டு அறியாமல் - தெரியா மல் வாயில் வந்ததுகளையெல்லாம் சொல்லி வானளக்குறாங்களே...

சரி போனால் போகுதெண்டு நானும் கணனியில இருந்து உள்ளூராட்சி உறுப்பினர்களின் பணி என்ன எண்டு தேடினால் சமூக கட்டமைப்பை உரு வாக்கல், சமூக கலை கலாசார மேம்பாட்டுக்காக பாடுபடல், கிராம மயானங்களைச் சீர் செய்தல் அதோடு சமூக முரண்பாடுகளை தீர்த்து வைத் தல் இது தான் அவையின்ர பணி.

அவை என்னவெண்டா ஐ.நா சபையில போயி ருந்து தமிழரின்ர பிரச்சினை அத்தனையும் தங் கட தலைமையில தீர்த்து வைக்கிறமாதிரி பேசுகி னம். எந்த நாய் எந்த பொட்டுக்க புகுந்தா நமக் கென்ன அப்படி எண்டுட்டு நம்மளால இருக்க முடியலையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருவியடி நானுனக்கு!

ஒரு சோடி கனவுகள் எனக்கும் அவளுக்கும்
இரு சோடி கால்கள் மணலில் புதைத்து
இருள் சூழ் வேளையிலே இதமாய் கதை பேசும்
ஒரு கோடித் திங்கள் அவள் வதனம்.

சம்ரமஞ்சம் தேவையில்லை, சாமரமும் தேவையில்லை
இப்பிறப்பில் மோட்சமடி என் இதழ்கள் பதித்த முத்தங்கள்
தப்பென்று சொல்லாதே.தர மறுத்து போகதே!
செப்படி ஒரு வார்த்தை செல்லமே நீ எனக்கு

வெள்ளியாவாய் மீன்கள் வானக் கடல் மீது
துள்ளி யெழும் திரைகள் தொடு தூரத்தில்
கள்ளச் சிரிப்போடு கதை பேசும் காதலி
அள்ளித் தருகின்றாள் அன்பு முத்தங்கள்.

அள்ளி எடுத்துனை மார்போடு நான் சேர்த்து
கிள்ளி விளையாடும் கன்னங்கள் ஓரழகு
தள்ளிப் போகாத வரையிலும் நீ- மீன்
துள்ளி விளையாடும் அருவியடி நான் உனக்கு

தேகம் நனைக்கும் திரைத்துளியும்
தேகம் வருடும் தென்றற் காற்றும்
தேகத்தைக் கட்டிக் கொண்டுதிரும் மணலும்
தேயாத வெண்ணிலவும் மீனும் இங்கு

அந்தகார இருளில் எனைத் தள்ளி
இந்த உயிர் விட்டுப் பிரிந்தாயோ
எந்த உறவும் இனி நிரப்பிட போவதில்லை
என்னவளே நீ இருந்து விட்டுப் போன இடங்க



மா.சிவா
கரவெட்டி




## நாம் மறவோம்

புரையோடிய
கனவினைப் பொறுக்கி
நரல் கோடி
நினைவினை அழித்து
நானும் நீயுமாய்
நாலு சுவருக்குள்
நாகரிக முத்தம்
பதித்தோம்
அர்த்தம் மறந்தும்
அந்தரித்தும் போனோம்
கைகள் பின்னிய
விரல்களைச் சீர்செய்து
நிமிர்ந்து பார்க்கையில்
சாட்சி இல்லா ஊமை
வாத்தைகளோடு
சரீரம் சாய்கையில்
சங்கீதமாய் ஒலித்த
சாவுமணி எம்
காதலை சவக்குழிக்குள்
சமாதியாக்கிப் போனதை
இன்னோர் சரித்திரத்திலும்
நாம் மறவோம் பெண்னே!

யாழ்.வாகீஷ்

## கழிந்த வருடத்தில் கண்டதென்ன?

ஆண்டொன்று கழிகையிலே
ஆண்ட பரம்பரைதான்
மீண்டெழ வழியின்றி
மாண்டு செல்லல் முறைதானோ?

வீட்டுக்கு வாக்களித்தும்
வீடு வந்து சேராதோர்!
காட்டுக்குள் காடழிப்பு
கள்ளக் குடியேற்றம்

அரசைத் துறந்த வள்ளல்
அரசு தேடி அங்குறைய
காவியுடைகளெங்கும்
காடைத் தனம் புரிய...

பொருத்து வீட்டுக்காய்
பொருதும் தலைமைகளால்
வாழ்வே யிருளாகி
வருந்துவதும் நாம் தானே!

'சமஷ்டி' யெனச் சத்தமிட்டோர்
சமாதி நிலையானதால்
நல்லாட்சி தனை வாழ்த்தி
நானிலமும் வாழ்த்துமே!

-விக்கிரமன்-

## நதிமூலம் ரிஷிமூலம்

தும்மலைக் கூட
உசுப்பேத்தித் தும்மும்
தறுதலை தம்பிகளுக்கு...

செம்பட்டைத் தலைகளுக்கு
தண்ணிகாட்டி
கொஞ்சம் எண்ணெய் காட்டி
சீவி சிலுப்பேத்தி...

நீண்டு நெடிதாய்க் கிடக்கும்
தாடி மீசையை
தரதரவென இழுத்தெறிந்து

காய்ந்து கறுத்துக் கிடக்கும்
முகத்துக்குக் கொஞ்சம்
பெயாரன் லௌலி பூசி

கைவிட்ட மரங்களாய்க் கிடந்த
நகங்களைக் கத்திரித்து

புழுதி பற்றிய கால்களுக்கு
ஒலிவ் எண்ணெய் தடவி

பொலிவாய்...
கும்பிட்ட படி
ஓட்டுவாங்க வீடு வரும்
ராசாக்களே!

நதி மூலம் ரிஷி மூலம்
பார்க்கவில்லைத்தான்
ஆனாலும்
நதி மூலம் ரிஷி மூலம் மறக்கவில்லையே!

.மாவை. நா.கஜேந்திரன்





# மௌனத்தின் தேடல்- 384



## பூமாதேவியின் சீற்றம்

மண்ணைப் பிளக்க பொன்னைக்
கொடுக்கும் பூமியிலே- அன்று
மாட்டெரு கூட்டெரு என்று
வீட்டிலே தேக்கி வைத்து
அதைக் கொண்டு வயலிலே
பயிர் செய்தான்- உழவன்
அன்று மண்ணுயிரையும் காத்து
மானிடத்தையும் காத்தான்- இன்று
புல்லுக்கொரு மருந்து
பூச்சிக்கொரு மருந்து- என
மண்ணுக்கு நஞ்சூட்டி
பசுமைக்குத் தீயிட்டு
பூலோகத்தையே அழிக்கும்
மானிடரின் அராஜகத்தால்
இயற்கையே சீற்றம்
கொண்டு விட்டது!
தன் பிள்ளை நஞ்சுண்பதைப்
பார்ப்பாளா பூமகள்?
பருவத்தை மாற்றினாள்
நாட்டிலே பஞ்சத்தை ஏற்படுத்தினாள்
உழவனை ஏரிலே தூக்கினாள்

அ.அகிலனி
கரவெட்டி

## உழவரின் நிலை

உழவரின் நிலை இங்கே
மாட்டிற்கு ஒப்பாகும் ஏனெனில்
மாடு பூட்டும் ஏர்தனிலே இறைவன்
உழவனைப் பூட்டிவிட்டான்

நி.குகாகினி
கிளிநொச்சி

## விவசாயியே உன் நிலை ஓர் படிப்பினை

கரம் கொண்டு உரம் தனை இட்டு
வளப்படும் உழவன் மனமும் உடலும்
புடலங்காய் தொங்குவது போல்
ஏரில் தொங்கிய வண்ணம் உள்ளது
விவசாயி எனப்படுவோன் தம்துன்பை
தெரிவிக்க உண்ணாவிரதம் செய்து
இறுதியாக ஊசல் குண்டு போல்
அவனுயிர் ஏரில் ஊசலாடுகிறது
இத்துன்ப வெளிப்பாட்டின் காரணம் அறிய
உன் நிலை ஒரு படிப்பினை

இ.தனா
உடுப்பிட்டி

## வலியோடு சில வரிகள்

வயலிலும் சரி- இறைவன்
மனதிலும் சரி ஈரம்
இருப்பதாக தோன்றவில்லை...
வானம் கூட விடாது
சிரித்துக்கொண்டேயிருக்கிறது
பட்ட கடனுக்கு வட்டிகூட
கட்ட வசதியில்லை...
வயிறோ பல நாட்களாக
பசித்திருக்கிறது
என்னை வாழ வைத்த
மண்ணிலே என் வாழ்வை
முடித்துக்கொள்கிறேன் மன்னித்து விடு

த.மோகனரூபன்
சுழிபுரம்

## மனிதம் இறந்ததுவா?

மாடு பூட்டி உழும் ஏர்தனில்-இன்று
மானத்தமிழன் மாடாய்த்தூங்குகின்றான்
இங்கு மாடுகள் இறந்தனவா? இல்லையெனில்
மனிதம் இறந்ததுவா?

நி.பிரசாத்,உருத்திரபுரம்

## முடிவிலியாய்

விதைத்து விளைவித்து விலைபேசமுடியா விந்தை
வானம் பொய்த்து மானம் செத்து
கடன் படியேறும் கொலைக்களம்
நாணம் செய்யும் தலைமைகளின்
தலைக்கு விழும் முடிச்சுக்கள்
அவிழ்க்க முடியாததாய்
இது ஓர் முடிவின் தொடக்கம் முடிவிலியாய்...

மேகரா,அல்வாயிசெட

## வாழ்வைத் தேடி

நெற்றி வியர்வை
நிலத்தில் சிந்தி
விவசாயி உழைத்தாலும்
சிந்தனைப் பறவை
சிறகடித்துப் பறக்கும்
சிறந்த முறையில்
கண்மணிகள் போல்
நெல்மணிகளை
காப்பாற்ற வேண்டுமென்று
காலநிலையானது
காலைவாரும் போது
உடனடித் தேவைக்கு
உரமானியம் கிடைக்காமை
திடமனதையும்
தடுமாற வைக்கும்

க.நாகராசா
துணாவில்

## விவசாயிகள் நிலை

காடு மேடு பார்க்காமல்
காலநிலை பார்த்து
தன் வயிற்றை பார்க்காது
நெல்வயல் விதைத்து
பருவம் பார்த்து உரம் எறிந்து
பதம் பார்த்து
அறுவடை செய்யும் நேரத்தில்
அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை
அரசாங்கம்
நெல்விற்று கடனைப் போக்கலாம்
என்ற விவசாயி
செலவின் பாதி விலைக்கு
நெல்லை விற்றான்
கடனை போக்க முடியாமல்
கடவுளாய் மதிக்கும்
தம் ஏர் மேலே தூக்குண்டு செத்தானே
"பாதிக்காதீர்கள் விவசாயிகளை"
"விவசாயிகளுக்காக கூரல் கொடுப்போம்"

கெ.நித்திகேசு
நெல்லியடி

# மௌனத்தின் தேடல் -385



**அன்பு வாசகர்களே!**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 03.01.2018 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.


குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரன்னை

சிறுகதை



# உணர்வுகளின் சங்கமம்

நேரம் பகல் 12.30 ஐக் காட்டிக் கொண்டிருந்தது. தொலைக்காட்சியில் சீரியில் தொடரில் மூழ்கியிருந்த நிர்மலாவின் காதுகளில் வாசலில் வான் வந்து நிற்கும் சத்தம் தெளிவாகக் கேட்டது. மகன் நிருபன் பாடசாலையில் இருந்து வந்து விட்டான் என்ற நினைப்போடு அவன் சீரியல் தொடரில் மூழ்கிப் போனாள். அத்தனை சுவாரஸ்யக் காட்சி அதில் போய்க் கொண்டிருந்தது.

சரியாக ஒரு மணிக்கு தொடர் நாடகம் நிறைவு பெற்றதும் தொலைக்காட்சிப் பெட்டியை நிறுத்தி விட்டு எழும்பியவளுக்கு அப்போதுதான் நிருபனின் ஞாபகம் வந்தது. அவசர அவசரமாக வெளியே வந்து எட்டிப் பார்த்தாள். போட்டிக்கோவில் இருந்த கதிரையொன்றில் நிருபனின் புத்தகப் பையும் தண்ணீர்ப் போத்தலும் வைக்கப்பட்டிருந்தது. துணுக்குற்றவளாய் நிர்மலா மகனை உரத்த குரலில் அழைத்தாள். நிருபன்... நிருபன்... அவர்கள் வீட்டுக்கராசில் இருந்து குரல் வந்தது. வாரன் அம்மா. குரல் வந்த திசையைப் பார்த்து நிர்மலா ஓடினாள். அங்கே நிருபன் நாய்க்குட்டியொன்றை கையில் தூக்கி வைத்துக்கொண்டு கொஞ்சிக் கொண்டிருந்தான். அவர்களது வளர்ப்பு நாயான ஜிம்மி கராஜுக்குள் குட்டி போட்டிருந்தது. மகனைக் கண்டதும் நிர்மலாவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

சீ.. ஏன் இப்ப குட்டியைத் தூக்கி வைத்திருக்கிறாய். என்ன அரியண்டமோ தெரியாது. அதைப் போட்டுட்டு வா முதல்ல போய் குளிக்க வேணும். முகத்தைச் சுளித்தவாறு பொறிந்து தள்ளியவள் அத்துடன் நின்றுவிடாமல் அவனது கையிலிருந்து குட்டியையும் பறித்து கீழே போட்டு விட்டு அவனைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு குளியலறைக்குப் போனாள். கீழே விழுந்த குட்டி வாள்... வாள் என அவலக் குரலில் கத்திக் கொண்டிருந்தது. நல்லவேளையாக அந்த நேரத்தில் ஜிம்மி அங்கு இருக்கவில்லை. இருந்திருந்தால் வீட்டுக்காரர் என்றும் பாராமல் பல் பொதித்திருக்கும்.

நிருபனின் செயலால் நிர்மலாவுக்கு ஒரே அருக்களிப்பு. நான் சொல்லி அவன் கேட்கப் போவதில்லை. தினமும் அவன் இதேமாதிரித்தான் செய்யப் போகிறான். எப்படி அவனைத் தடுப்பது? மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டாள்.

மின்னல் என ஒரு கீற்று அவளது பொறியில் தட்டியது. " அ... அதுதான் சரியான தீர்வு" அவள் கங்கணம் கட்டிக்கொண்டாள்.

மறுநாளும் நிருபன் பாடசாலை விட்டு வந்ததும் சந்தடியில்லாமல் மெதுவாக கராஜை நோக்கி நடந்தான். உள்ளே எட்டிப் பார்த்தவனுக்கு ஏமாற்றம் காத்திருந்தது. குட்டிகள் இருந்த இடம் வெறுமையாகக் கிடந்தன. என்ன நடந்திருக்கும் என்று அந்தப் பிஞ்சு மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டான். நேரே அம்மாவிடம் போனான். சிணுங்கும் குரலில் அம்மாவை அழைத்தவன், " நாய்க்குட்டி எங்கை?" என்று கேட்டான். அதற்குக் கள்ளச் சிரிப்புடன் நிர்மலா பதிலளித்தாள்.

" எனக்குத் தெரியுமே" நீ அடிக்கடி போய் குட்டியளைத் தூக்கினதால... ஜிம்மிதான்



அதுகளை எங்கையும் பாதுகாப்பான இடத்துக்கு கொண்டு போய் வைத்திருக்கும்.

நிருபன் வளவு முழுவதும் ஓடியோடித் தேடினான். ஜிம்மிதான் மாமரத்து நிழலில் சோகமே உருவாகப் படுத்திருந்தது. அருகில் போய் நாயை உற்றுப் பார்த்தான். கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. அவன் ஜிம்மி என்று கூப்பிட்டுப் பார்த்தான். படுத்த படுக்கையிலேயே வாலை ஒருதரம் சுழற்றிவிட்டு சுருண்டு கொண்டது. அதைப் பார்த்ததும் நிருபனுக்கும் கண்களில் நீர் முட்டிவிட்டது. நேராக அம்மாவிடம் போனான்.

"அம்மா! நாய்க்குட்டிகளை என்ன செய்தனீங்கள்? அங்கை ஜிம்மி அழுதுகொண்டு படுத்திருக்குது..."

அவனது உள்ளக் குமுறல்கள் பெரும் அழுகையாக உருவெடுத்தது.

"எனக்கொன்றும் தெரியாது ராசா. நீ அழாதை"

கண்களைத் துடைத்துவிட எத்தனித்தவளின் கைகளை அப்பால் தட்டி விட்டான் நிருபன். மனமறிந்து சொன்ன பொய் அவளது உள்ள[illegible]யது. பெரும் பிரயத்தனத்தின் பின் ஒருவாறு நிருபனைச் சமாதானப்படுத்தி அழைத்துப் போனாள்.

இரண்டு நாட்கள் கழித்து நிருபன் பாடசாலையால் வரும் போது அழுத கண்களுடன் வந்தான்.

" அம்மா! சந்தையடியில ஒரு நாய்க்குட்டி றோட்டுக் கரையில செத்துப் போய்க்கிடக்குது. அது சரியாய் எங்கட நாய்க்குட்டி மாதிரியே இருந்தது"

நிர்மலாவின் மனதில் உறுத்தல் தோன்றியது.

" எங்கட நாய்க்குட்டி அங்கையெல்லாம் போகாது. அது யாரோ வளர்த்த நாய்க்குட்டியாய் இருக்கும்"

நிருபனைச் சமாதானப்படுத்துவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது.

நிருபனுக்கு தடிமல் காய்ச்சல் வந்து பிள்ளையைப் படுத்த படுக்கையாக்கிவிட்டது. நிர்மலாவும் அவனைத் தனியார் மருத்துவமனையில் காட்டி மருந்து எடுத்தும் அது முற்றாகக் குணமடைந்த பாடாயில்லை. இரண்டு நாட்களுக்குக் காய்ச்சல் விட்டிருக்கும். பின்னர் மீண்டும் வரும். இரண்டு கிழமைகளாக அவன் பாடசாலைக்கும் போகவில்லை. சளித்தொற்று வேறு அவனைப் பாடாய்ப்படுத்தியது.

நோயை இன்னதென இனங்காணலாம் என்ற நம்பிக்கையுடன் கொண்டு போனார்கள். நிருபனோ தலைவலி தாங்க முடியாதவனாய்த் துடித்துக்கொண்டிருந்தான். சீராக உணவும் உட்கொள்வதில்லை. வெறும் நீர்ப்பதார்த்தங்கள்தான். அதுவும் அரை டம்ளர் வரைதான் குடிப்பான். எலும்பும் தோலுமாகக் காட்சியளித்தான். பிள்ளையின் நிலைகண்டு பெற்றவர்கள் ஏங்கித் துடித்துப் போனார்கள்.

வைத்தியசாலையில் நானாவித மருத்துவ பரிசோதனையின் பின் அவனுக்கு வந்திருப்பது டெங்குக் காய்ச்சல் என்பது உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. வார்ட்டில் அவனை அனுமதித்து சேலைன் ஏற்றப்பட்டது. கூடவே ஊசிமூலம் மருந்துகளும் சேலைனுடன் சேர்த்து உள்ளே போய்க் கொண்டிருந்தன. நிருபனின் அப்பாவை அழைத்து அந்த மருத்துவர் சொன்னார்.

"நீங்கள் காய்ச்சல் வந்தவுடனேயே கொண்டு வந்திருக்க வேண்டும். இரண்டு கிழமைகள் கழித்துத்தான் வந்திருக்கிறியள். வி வில் ட்ரை அவர் பெஸ்ற்"

அதனைக் கேட்டதும் நிர்மலாவுக்கும் அவனது கணவனுக்கும் உயிர் நாடி ஒடுங்கிப் போனது. செய்வதறியாது திகைத்த அவர்கள் கடவுளையே நம்பி பிள்ளையின் நலனுக்காய் காத்திருந்தனர். நாட்கள் இரண்டு கழிந்தன. நிருபனின் உடல் நிலையில் பெரிதாக மாற்றம் எதுவும் தென்படவில்லை. மாறாக அவன் சுய நினைவை இழந்து கொண்டிருந்தான்.

அணையப் போகும் தருணத்தில் அகல் விளக்கு பிரகாசமாய் எரிவது ஆபோல நிருபனும் உயிர்ப்பு வரப் பெற்றான். கண் களைத் திறந்து மடல்களை வெட்டினான். நிர்மலாவும் கணவனும் மகனுக்கு நினைவு திரும்பி விட்டுது என்ற மகிழ்ச்சியுடன் அவனையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தனர். சட்டென கண்கள் நிலை குற்றி நின்றுவிட்டன.

"நிருபன்! நிருபன்!!"

ஏக காலத்தில் பெற்ற இருவரும் அவனை அழைத்ததுடன் உடலைப் போட்டு உலுப்பினர்.

" ஐயோ என்ர பிள்ளை"

நிர்மலாவின் குரல் அந்த வார்ட்டின் சுவர்களில் மோதி எதிரொலித்தது. நர்ஸ்சும் வார்ட் டொக்டரும் நிர்மலாவின் அவலக் குரல் கேட்டு ஓடி வந்தனர். டாக்டர் நிருபனின் நாடியைப் பிடித்துப் பார்த்து விட்டு சைகை காட்ட, நர்ஸ் அவனைப் போர்த்தியிருந்த போர்வையை இழுத்து அவனது முகத்தையும் மூடிவிட்டான்.

மயங்கி விழுந்த நிர்மலாவுக்கு தண்ணீர் தெளித்து அவளது மயக்கத்தைப் போக்கி மெதுவாக வெளியே அழைத்து வந்தான், அவளது கணவன். கடும் துயரத்திலும் தங்கள் இதயத்தைக் கல்லாக்கி ஆக வேண்டிய கருமங்களைப் பார்ப்பது... அது ஆண்களுக்கு கடவுளால் கொடுக்கப்பட்ட வரமாகும். பிறகென்ன மளமளவென்று செய்தி பரவி உற்றார், உறவினர், நண்பரென அனைவரும் வந்து புடைசூழ்ந்து ஆகவேண்டிய காரியங்களைப் பார்த்து நிருபனின் வெற்றுடல் மண்ணுக்குள் புதைக்கப்பட்டும் விட்டது.

நாட்கள் இரண்டு நகர்ந்தன. நிர்மலாவின் பெற்றோர், சகோதரர்கள், கணவனின் சகோதரர்கள் என வீடே நிரம்பியிருந்தாலும் அங்கு ஒரு நடைபிணமாய் தன் பிஞ்சு மகனின் நினைவுகளால் அலைக்கழிக்கப்பட்டவளாய் கண்ணீரே கதி எனச் சுருண்டு கிடந்தாள் நிர்மலா. இரவு நடுநிசியாயிற்று. நிர்மலாவினால் உறங்க முடியவில்லை. பார்க்கும் இடமெல்லாம் நிருபனின் நினைவுகள் தோன்றி அவளை நெக்குருக வைத்தன. மெதுவாக எழுந்து வெளியே வந்தாள். அங்கும் நிருபனின் ஞாபகங்கள்தான் அவளை வாட்டி வதைத்தன. வீட்டு வாயிற்படியில் அமர்ந்து கொண்டாள். குளிர்க்காற்று அவளது மேனியைத் தழுவிச் சென்றது.

அதேபடியில் நிருபன் அவளது மடியில் சாய்ந்திருந்து நிலவைப் பார்த்து பாடி மகிழ்ந்த நாட்களின் நினைவுகள் அவளது நெஞ்சத்தை நெருடிச் சென்றன. பெரும் விம்மலுடன் அழுகை வெடித்தது. குலுங்கிக் குலுங்கி அழுதாள். இறுகிப் போயிருந்த அவளது இதயம் இலேசாகும் வரை அழுது தீர்த்தாள். எத்தனை நேரம்தான் அப்படியே இருந்தாளோ... அவளது கால்களில் ஏதோ ஊர்வது போன்ற ஸ்பரிசம் ஏற்படவே அவள் திடுக்கிட்டு கீழே உற்றுப் பார்த்தாள்.

அவளது காலடியில் கிடந்து கொண்டு ஜிம்மி அவளது கால்களை தனது நாவினால் நக்கிக் கொண்டிருந்தது. என்ன நினைத்தாளோ... நிர்மலா குனிந்து தனது கையினால் அதன் முதுகைத் தடவிக் கொடுக்கத் தொடங்கினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிளம் பாலகி படுகொலை



## நடந்தது என்ன?

யாழ். குடாநாட்டை அதிரவைக்கும் சம்பவமாக நேற்று முன்தினம் வண்ணார் பண்ணை வடமேற்கு, பத்திரகாளி அம்மன் கோவில் வீதி பகுதியில் இடம்பெற்ற கோரச் சம்பவத்தில் மூன்று வயது குழந்தை உயிர் பரிதாபமாக பிரிந்த சம்பவம் பலரையும் அதிர்ச் சிக்குள்ளாக்கியுள்ளது.

குடும்பத்தில் உள்ள பெரியவர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறு காரணமாக இடம்பெற்ற இந்த மூர்க்கத்தனமான கொலைவெறி தாக்குதலில், உலக நடப்பை பற்றி எதுவுமே அறியாத பச்சிளம் பாலகியின் உயிர் பறிக்கப்பட்டதற்கு பொறுப் புக்கூற வேண்டிய கடமை பலருக்கும் உள்ளது.

வண்ணார்பண்ணை வடமேற்கு, பத்தி ரகாளி கோவில் வீதி பகுதியில் நேற்று முன்தி னம் 9.30 மணியளவில் ஒரு குடும்பத்தில் தாய்க்கும் மகனுக்கும் இடையே தகராறு இடம் பெற்றுள்ளது. அதில், ஆத்திரமடைந்த மகன் தனது தாயை கைக்கோடரியால் வெட்டி கொலை முயற்சி செய்ததுடன், அந்தச் சமயம் தனது தாயுடன் இருந்த தனது தம்பியின் மகளான மூன்று வயது பாலகியையும் கோடரியால் வெட்டி கொலை செய்துள்ளார். பின்னர் குறித்த சந்தேக நபரான மகன் தானும் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டுள்ளார்.


இச் சம்பவத்தில் தனுசன் நிக்சயா (வயது -03) என்ற சிறுமியே கொல்லப்பட்டதுடன், குணரத்தினம்



பரமேஸ்வரன் (ஈஸ்வரன்) (வயது-33) என்ப வரே தற்கொலை செய்து கொண்டவராவார். பரமேஸ்வரனின் தாயாரான குணரத்தினம் பரமேஸ்வரி (வயது-55) என்ப வர் பலத்த காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசா லையில் அவசர சிகிச்சை பிரிவில் அனும திக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக தெரிய வருகை யில், கொலையாளியாக சந்தேகிக்கப்படும் நபரான ஈஸ்வரன் தனது குடும்பத்துடன் வசிக்காமல் தனியாக வசித்து வந்துள்ளார். இவர் போதை பொருளுக்கு அடிமையாகியும் இருந்துள்ளார் என சகோதரர்கள், உறவினர்கள் தெரிவித்தி ருந்தனர். இந்த நிலையில் குறித்த நபர் அடிக்கடி தனது குடும்பத்தினருடன் தக ராறில் ஈடுபடுவதும் பணம் தேவை ஏற்படும் போதெல் லாம் இவ்வாறான தகரா றில் ஈடுபடுவதை வழக்கமா கக் கொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கின்றனர்.

குறித்த சிறுமியின் தாயார் கர்ப்பவதியாக இருந்த காரணத்தினால், மாதாந்த கிளினிக் செல்வதற்காக வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார். இதன்போது தனது மகளான நிக்சியாவை பத்திரகாளி கோவில் வீதியில் அமைந்துள்ள தனது மாமியாரின் வீட்டில் கணவருடன் விட்டுவிட்டுச் சென்றுள்ளார். சற்று நேரத்தில் சிறுமியின் தந்தையும் வேலை நிமித்தம் வெளியே சென்றுள்ளார். வீட்டில் சிறுமியும் பேர்த்தியும் மட்டுமே இருந்துள்ளார்கள். அப்போது எதிர்பாராத விதமாக பரமேஸ்வரியின் மகனான ஈஸ்வரன் அங்கு



அந்த வீடு என்றும் இல்லாதவாறு நிசப்தம் நிறைந்து காணப்பட்டது. அங்கு வந்து அந் தக் கொடூரச் செயலைப் பார்த்த மனிதர்களின் கண் களின் ஓரம் நனையத் தவறவில்லை.

ஆம் கருவாகி உருவாகி உலகில் தலை நிமிர்ந்து இந்த சமூகத்தில் கௌரவமாக வாழ எத்தனித்த ஒரு சிறு மொட்டு வெட்டிச் சாய்க்கப்பட்டிருக்கிறது.

துள்ளிவிளையாடி மழலை மொழி பேசி அந்த வீட்டின் விறாந்தையில் தவழ்ந்து திரிந்த ஒரு சிறு மொட்டு உயி ரற்று இரத்த வெள்ளத்தில் உறங்கிக் கொண்டிருக்கின்றது.

கருவில் உருவாகிய முதல் அவளை கையில் ஏந்தி மார்பில் பால்கொடுத்து பகல்-இரவு பாராமால் பக்கு வமாய் கவனித்த அன்னையின் மனம் படும்பாடு பார்த் தவர் கண்கள் எப்படிக் கலங்காதிருக்கும்.

கொடிய போரில் கொத்துக் கொத்தாய் மனிதர்கள் மாண்டு போன காலம் மாறி இன்று சொந்த விரோதங் களுக்காய் உறவுகளை உறவுகளே அழிக்கும் நிலையை எண்ணிப் பார்க்கும் போது மனது விம்மி வெடிக்கிறது.

திடீரென வந்துள்ளார்.

வழமைபோல தாயாரோடு வாக்குவாதத்தில் ஈடு பட்டுள்ளார். வாக்குவாதம் முற்றி தான் வைத்திருந்த கைக்கோடரியால் தாயையும் வெட்டி அங்கு நின்றிருந்த சிறுமியையும் இரக்கமின்றி வெட்டியுள்ளார். பின்னர் தானும் நஞ்சருந்தியுள்ளார். இதில் தாயார் நெஞ்சிலும் தலையிலும் படுகாயமடைந்த நிலையில் உயிருக்கு போராடிய நிலையில் இரத்த வெள்ளத்தில் வீட்டின் வெளி முற்றத்தில் கிடந்துள்ளார். சிறுமிக்கு கழுத்து பகுதியிலும் கால் பகுதியிலும் படுகாயமேற்பட்டு அதிக இரத்த வெளியேற்றத்தினால் வீட்டின் வாசலிலேயே சற்று நேரத்தில் உயிரிழந்து கிடந்துள்ளார். வாக்குவா தம் இடம்பெற்ற வீட்டில் திடீர் அமைதி ஏற்பட்டதால் சந்தேக மடைந்த அயல்வீட்டுப் பெண்மணிஒருவர்வெளிப்படலை ஊடாக எட்டிப் பார்த்த போது மேற் குறித்தவாறு இருவர் இரத்த வெள்ளத்தில் கிடந்த கொடூர காட்சியை கண்டு கூக்குரல் இட்டு அயலவர்களை உத விக்கு அழைத்துள்ளார்.

உடனடியாக தாயார் வைத்தியசாலைக்கு ஏற்றப்பட்டதுடன் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதன் அடிப்படையில் பொலிஸார் அவ்விடத்துக்கு வந்து நஞ்சருந்திய நிலை யில் கிடந்த கொலையாளியாக சந்தேகிக்கப்ப டும் ஈஸ்வரனை வைத்திய சாலைக்கு கொண்டு சென்றனர். ஆனால் அவர் சிறிது நேரத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உறவினர்கள் அனைவரும் குறித்த சம்பவ இடத்துக்கு வந்த பின்னரே இந்த கொடூரச் சம்பவத்தை பார்த்து அதிர்சிய டைந்தனர். கொலையாளியாக சந்தேகிக்கப் படும் ஈஸ்வரனின் சகோதரர்களில் ஒருவர், அப்பகுதியில் நின்றவர்களுக்கு இது தொடர்பில் கூறுகையில், சகோதரம் என்று பொறுமையாக இருந்தோம். இப்படி கொடூரமாக பச்சிளங் குழந்தையை கொல்லுவான் என நினைக்க வில்லை என அழுது புலம்பினார்.

தனது மகன் அடிக்கடி வீட்டுக்கு வந்து பணம் கேட்டு தம்முடன் சண்டை பிடித்து வந்த தாகவும், இவ்வாறு வரும்போது போதைப் பொருட் களை அருந்தி விட்டே வருவதாகவும் இதேபோன்று அன்றைய தினமும் தனது



மனைவியிடம் பணம் கேட்டிருக்கலாம். இதன் போது ஏற்பட்ட முரண்பாட்டினால் குறித்த கொலை இடம்பெற்றிருக்கலாம் என தந்தையார் தெரிவித்திருந்தார். உறவினர்கள் அனைவரி டமும் பொலிஸார் சம்பவம் குறித்து வாக்கு மூலங்களைப் பெற்றுச் சென்றனர்.


குறித்த நபர் நீண்ட காலமாக இவர்களுடன் குறித்த கொலையாளி வசிப்பதில்லை எனவும், யாழ்.நகரில் உள்ள நகைக் கடை ஒன்றில் வேலை செய்பவர் எனவும், சில நேரங்களில் வீட் டுக்கு வந்து தகராறில் ஈடுபட்டுச் செல்வது வழமை எனவும் அயலவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தற்செயலாக இடம்பெற் றிருப்பினும் இவ்வாறான சம்பவம் இடம்பெறுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என உறவினர்களுக்கு தெரிந்திருந் தும், இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளாது இருந்ததும் இவ்வாறான பிரச்சி னைகள் அடிக்கடி நடக்குமிடத்தில் குழந்தைகளை பாதுகாப்பின்றி பெற்றோர் விட்டுவிட்டு செல்வது தொடர்பிலும் பெரியவர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டியது மிகமிக அவசியமாகும்.


பெரியவர்களின் பிரச்சினைகளில் ஒன்றும் அறியாத இளம் உயிர்கள் அடிக்கடி பறிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. இதில் பெற்றோரும் பெரியவர்களும் சமூகத்தினரும் இனியாவது அவதா னமாக செயற்பட்டால் இளம் சமுதாயத்தைக் காப்பாற்ற முடியும்.

பொ. சோபிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராஜீவ் கொலை உத்தரவிட்டது யார்? உடையும் மர்மங்கள்



## விறு விறு தொடர் 02

கடற்கரையே இல்லாத பெங்களூருக்கு ஏன் சென்றார்' என்று என்னிடம் பொட்டம்மான் கேட்ட கேள்வியுடன் முடிச்சுப் போட்டுப் பார்க்க வேண்டும்.

சிவராசனிடம் மூன்று டயரிகளைக் கண்டெடுத்தது சி.பி.ஐ. அவற்றில் இரண்டு பொக்கெட் டயரிகள், ஒன்று பெரிய டயரி. அந்த டயரியில் சிவராசன் எனது சொந்தப் பெயரான 'இரவி' என்று எழுதியிருக்கிறார். பொதுவாக இயக்கத்தினர் யாருடைய சொந்தப் பெயரையும் பயன்படுத்துவதில்லை. குறிப்பாக எழுத்தில் பதியமாட்டார்கள். வேண்டுமென்றே பல சந்திப்புகளை, தகவல் பரிமாற்றங்களை திகதி வாரியாகக் குறிப்பிட்டு டயரி எழுதியிருக்கிறார். இது புலிகளின் உளவுப்பிரிவு செயற்பாட்டுக்கு விரோதமானது. எழுத்தில் உள்ள சாதாரணத் தகவலைக்கூட உடனுக்குடன் எரிக்க வேண்டும்.

தனு போட்டோ வெளியானதிலிருந்தே பயஸ், ஜெயக்குமார், விஜயன் ஆகியோர் வேறு இடம் செல்ல முயன்றபோது தடுத்தவர் சிவராசன். மே 24 ஆம் திகதியிலிருந்து ஜூன் 14 ஆம் திகதி வரை நான் கைந்து தடவையாவது சிவராசனை 'ஈழம் சென்று விடுங்கள்' என்று நான் சொன்னதைத் தவிர்த்தார். 'ராஜீவ் இறந்ததும் சிவராசன் நேபாளம் செல்லத் திட்டமிட்டார்' என்பதை வாணன் என்ற இலங்கைத் தமிழர் வாக்குமூலத்திலிருந்து அறியலாம்.

பொதுவாக உளவுப்பிரிவு உறுப்பினர்கள், அரசியல் பிரிவு உறுப்பினர்களுடன் சேரமாட்டார்கள். அரசியல் பிரிவு ஆட்கள் வெளிப்படையாக இயங்குபவர்கள். ஆனால், அரசியல் பிரிவு திருச்சி சாந்தனுடன் இவர் வலியச் சென்று சேர்ந்துள்ளார். இருவருமே மாத்தையாவின்கீழ் பணியாற்றியவர்கள். புலிகளின் அரசியல் பிரிவு தலைவராக இருந்த மாத்தையா, 'ரோ' உளவாளி என்று கண்டுபிடிக்கப்பட்டு உண்மை நிரூபணமாகி, மரண தண்டனைக்கு உள்ளானவர். இந்த மாத்தையாவின் 'ரோ' தொடர்பாளராக அறியப்பட்டவர் நெய்வேலியில் இருந்த நீலன். அவரைத் தமிழகம் வந்ததும் சிவராசன் பார்த்துள்ளார். இந்த நீலனைத் தமிழக கியூ பிரிவு விசாரித்தது. ஆனால், உடனடியாக விடுதலை செய்துவிட்டது. இந்த நீலன் கைது செய்யப்பட்ட பிறகுதான் மாத்தையாவின் செயல்கள் அம்பலமாகின. இப்படிப் பல்வேறு மர்மங்கள் கொண்டவர் சிவராசன்.

1987 இல் தளபதி சூசையின்கீழ் வல்வெட்டித்துறை நகரில் நான் பணியாற்றினேன். மயிலியதனை என்ற பகுதியில் சிவராசன் இருந்தார். அப்போது இரகு அல்லது இரகுவரன் என்று அழைக்கப்பட்டார். அப்போதுதான் அவருக்கும் எனக்கும் அறிமுகம். அந்த ஆண்டு மே மாதம் வடமராட்சி பகுதி சிங்கள இராணுவத்தின் பிடிக்குள் போனது. அதன்பிறகு நாங்கள் வேறு வேறு பகுதிகளுக்குப் போய்விட்டோம். நான் 1990 இல் தமிழகம் திரும்பியபோது, 'இரகுவோடு தொடர்பில் இருங்கள்' என்று பொட்டம்மான் சொன்னார். 1991 மே மாதத்துக்கு முன்னதாக ஐந்து முறை சந்தித்து இருப்பேன். இவை எதுவும் ராஜீவ் கொலைத் திட்டம் குறித்தது அல்ல!

ராஜீவ் கொலைக்கு முன்னும் பின்னுமாக சிவராசனுக்கு மும்பையிலும் சவுதி அரேபியாவிலும் வங்கிக் கணக்கு இருந்தது. பணப்பரிமாற்றமும் நடந்தது. இதனை இந்திய அரசின் நிதி நுண்ணறிவுப் பிரிவு கண்டுபிடித்தது. ஆனால், அதை சி.பி.ஐ. மூடி மறைத்தது. சிவராசனுக்கு உத்தரவிட்டது புலிகள் அல்ல, சி.ஐ.ஏ. முகம் மறைத்து பல சதிகாரர்கள் இருக்கிறார்கள்.

இப்படி உருவான சதிகளில் ஒன்றுதான், அனுஜா படத்தை தனு என்று சொன்னது. அனுஜா படத்தை என்னிடம் காட்டினார்கள். நான் 'அது அனுஜா' என்றேன். வடமராட்சியில் நான் அவரைப் பார்த்திருக்கிறேன். குரூப் லீடர் அவர். 'விடுதலைப் புலிகளின் பிரசாரப் பிரிவு வெளியிட்ட கலண்டரில் அவர் படம் இருக்கும்' என்றேன். அந்த அனுஜாவைத்தான் தனு என்று சொல்லி, 'விடுதலைப்புலிகளால் அனுப்பப்பட்ட பெண்தான்' என்று கதை கட்டினார்கள்.



"'புலிகளின் பயிற்சி என்ன மாதிரியானது' என்பது இந்தியப் புலனாய்வு அமைப்புகளுக்குத் தெரியாத ஒன்றல்ல. பயிற்சியே அவர்கள் கொடுத்ததுதான். புலிகளின் யுக்திகளும்கூட அவர்களுக்கு அத்துபடிதான். புலிகளே 'சமர்கள பயிற்சிகளை' வீடியோவாக எடுத்து ஊடகங்களில் வெளியிட்டுள்ளனர். அதுவும் புலனாய்வு அமைப்புகளிடம் இருக்கிறது. புலிகளின் நுணுக்கங்களையெல்லாம் இந்திய அமைதிப் படை ஈழத்தில் இருந்தபோது சுமார் மூன்றாண்டுகள் நேரிலேயே பார்த்துள்ளனர். 'இவ்வளவுக்கும் பிறகு என் மூலம் என்ன கதை எழுதப் போகிறார்களோ?' என உள்ளுக்குள் அரண்டு கிடந்தேன்."

இந்தக் கட்டுக்கதைகளுக்கு தமிழக தடயவியல் துறையும் ஒத்துப்போனது.

"தமிழகத்தில்தான் புலிகள் பயிற்சி பெற்றார்கள் என்பது பலருக்கும் தெரியாது. அன்றைக்குப் பிரதமராக இருந்த இந்திரா காந்திக்கும் முதல்வராக இருந்த எம்.ஜி.ஆருக்கும் தெரிந்தே இந்தப் பயிற்சி முகாம்கள் இருந்தன. திண்டுக்கல் மலைப் பகுதியில் புலிகளின் 7 ஆவது பயிற்சிப் பாசறையில் பெண் புலிகளுக்கான பிரத்தியேகப் பயிற்சி முகாம் இருந்தது. அதில் பயிற்சி பெற்ற பெண் போராளிகளில் ஒருவர்தான் அனுஜா. 1986 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் பிரசாரப் பிரிவு, அந்த ஆண்டுக்கான கலண்டரை வெளியிட்டது. அதில், பெண் போராளிகள் அணிவகுத்துச் செல்வது போன்ற படம் இருக்கும். அதில், புலிக்கொடி ஏந்தி தலைமையேற்று நடப்பவர்தான் அனுஜா.

அந்தப் புகைப்படம் உலகெங்கும் பல இதழ்களில் வந்துள்ளது. அப்போது பயிற்சி பெற்ற, வெளிப்படையாக இயங்கிய புலிகளின் புகைப் பட்ங்களெல்லாம் இந்திய உளவுத்துறைகளிடம் உள்ளன. ராஜீவ் காந்தியைக் கொல்ல, இப்படிப் பரவலாக அறிந்த ஒரு பெண் போராளியை அனுப்பியிருப்பார்கள் என்று நினைப்பதே கேலிக்கூத்தானது. 'சி.பி.ஐ. அதிகாரிகள் காட்டிய புகைப்படத்தில் இருப்பது அனுஜாதான்' என்று நான் சொன்னேன். 'ஸ்ரீபெரும்புதூரில் மாலையுடன் நிற்பதும், புலிக்கொடி ஏந்தி நடந்து செல்வதும் தனுதான்' என்றார்கள் அவர்கள். 'இல்லை' என்று நான் சொன்னேன். அடித்தார்கள். இரத்தம் வரும் வரை அடித்தார்கள். கையில் வழிந்த இரத்தத்தைச் சட்டையில் துடைத்தபடி விளக்கினேன்.

சம்பவம் நடந்து ஒன்பது மாதங்கள் ஓடிவிட்டன. இன்னமும் தனுவை இன்னாரென்று கண்டுபிடிக்க முடியவில்லை. அவர் யார், எந்த ஊர் என்ற விபரங்களையும் அவர்களால் அறிய முடியவில்லை. அதனால், அனுஜாவை 'தனு' என்று கதைவிட்டு அதையே உண்மை என்று முடிக்க இருக்கிறார்கள். சி.பி.ஐ. சொன்னதையே தடய அறிவியல் துறை 'உண்மை' என்று சொன்னது.

தடா சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடந்தபோது, அரசுத் தரப்புச் சாட்சியாக அந்த தடயவியல் அதிகாரி வந்திருந்தார். அனைவரிடமும் அவர் இயல்பாகப் பேசிக்கொண்டிருந்தார். "விடுதலைப்புலிகளின் கலண்டரில் இருந்த புகைப்படத்தையும் தனுவின் தலையையும் கம்ப்யூட்டரில் ஒப்பிட்டு. இரண்டும் ஒருவர்தான். தனுதான் அனுஜா என்று எப்படிப் பொய் சொன்னீர்கள்' என்று அந்த அதிகாரியிடம் சுசீந்திரன் கேட்டார்.

அவரும் சிரித்துக்கொண்டே, "அப்படியானால் அறிவியல் பொய் சொல்கிறது என்கிறீர்களா?" என்று எதிர்க்கேள்வி கேட்டார்.

"அறிவியல் பொய் சொல்லாது என்பது எங்களுக்கும் தெரியும். ஆனால், அந்த அறிவியலைப் பயன்படுத்துபவர்கள் பொய் சொல்லலாம் அல்லவா?" என்று சுசீந்திரன் கேட்டார். அதற்கு மேல் அந்த அதிகாரி எங்கள் பக்கத்தில் நிற்கவில்லை.

பொலிஸ் அதிகாரி இக்பால், நாங்கள் பயன்படுத்திய 'வயர்லெஸ் கருவி' பற்றி நிறைய கேள்விகளைக் கேட்டார். விடுதலைப் புலிகளின் பல உறுப்பினர்கள் பேசியிருந்ததை உளவுத் துறை ஏற்கனவே 'டேப்'பில் பதிவுசெய்து வைத்திருந்தது. அதையெல்லாம் போட்டுக் காட்டி, "இவை யார் யாருடைய குரல்கள், எங்கிருந்து யாருக்குப் பேசுகிறார்கள். இவற்றின் அர்த்தம் என்ன, அது என்னவிதமான 'சங்கேத' மொழி" என்றெல்லாம் கேள்விகளை அடுக்கினார்.

பின்னர் 50, 60 புகைப்படங்களை என்னிடம் நீட்டினார். அவை, புலிகளின் பிரசாரப் பிரிவு வெளியிட்டிருந்த படங்கள். எட்டு மாதங்களாகப் பத்திரிகைகள் எல்லாம் அவற்றைப் பலமுறை பிரசுரித்துவிட்டன.


-மர்மங்கள் அடுத்த வாரம் தொடரும்...-

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைக்குமா நல்லாட்சி?

கடந்த 2002ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் இடையில் இவ்வாறான ஒரு முறுகல் நிலையே ஏற்பட்டது.



இலங்கையின் சமகால அரசியல் நிலையில் என்ன நடக்கின்றது என அனைவரும் உற்றுநோக்கும் வகையில் நாட்டின் அரசியல் களம் ஒரு தளம்பல் நிலையில் சென்று கொண்டிருக்கின்றது.

அரசிற்குள் நிலவும் உட்பூசல்களும் கருத்து வேற்றுமைகளும் தலைமைப்பீடங்களில் நிலவும் சில முரண்பாடுகளுமே இதற்குக் காரணம்.

கடந்த் 3 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கையின் அரசியல் களம் ஒரு சுமுகமான நிலையிலேயே சென்று கொண்டிருந்தது. அதாவது பிணை முறி மோசடி தொடர்பான ஜனாதிபதி தனது அறிக்கையினை வெளியிடுவதற்கு முன்னரான காலப்பகுதி!

இந்நிலையில், குறித்த அறிக்கையில் அதிகளவில் ஐக்கிய தேசிய கட்சியினைச் சார்ந்தவர்களுக்கு ஜனாதிபதியால் எச்சரிக்கை விடப்பட்டிருந்ததும், அதில் மிக முக்கியமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்விற்கு எதிராகவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தமையே இன்றைய அரசியல் தளம்பல் நிலைக்கு வித்திட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் மூலம் ஆட்சி அமைத்திருந்தாலும் கூட ஜனாதிபதியின் அறிக்கையின் பின்னர் கூட்டரசாங்கத்திலும் அரச அங்கத்தவர்களிடையேயும் புரிந்துணர்வு அற்ற நிலை காணப்படுவதை நாட்டின் மக்கள் சமகாலத்தில் உணர்ந்துள்ளனர்.

மேலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சியின் முக்கியஸ்தர்கள் பகிரங்கமாக மக்கள் மத்தியில் தற்போது தமது பரப்புரைகளை முன்னெடுத்து வருவதானது அரசாங்கத்தில் நிலவும் பிரச்சினைகளை மக்களுக்கு புடம் போட்டு காட்டுவதாய் அமைந்துள்ளது.

அதேசமயம் இது கூட்டெதிர்க் கட்சியினருக்கும் தங்களது தரப்பினை வலுப்படுத்தும் சந்தர்ப்பமாய் அமைந்துள்ளதுடன், மகிந்தவின் தேவையையும் மக்கள் உணர்கின்றார்கள் என்ற நிலைப்பாட்டையும் அரசாங்கத்தின் குழப்ப நிலைகள் உணர்த்துகின்றன.

இந்த நிலையில் தான் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இருந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியேறியிருந்தமை அரசின் தளம்பல் நிலையை சுட்டிக் காட்டுவதாய் அமைந்துள்ளது.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரை சாடுவதும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சார்ந்தவர்கள் ஐக்கிய தேசிய கட்சியை சாடுவதும் கூட அதிகரித்துவிட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியினரிடையே மைத்திரிக்கு எதிரான குரல்களும் மேலோங்க ஆரம்பித்து விட்டன. உதாரணமாக அண்மைக்காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் மக்களுடனான பொதுக் கூட்டங்களில் மைத்திரியை பகிரங்கமாக விமர்சித்து வருகின்றனர்.

அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான மரிக்கார், சமிந்த ஆகியோர் ஜனாதிபதியைப் பகிரங்கமாகவே விமர்சித்து உரையாற்றி வருகின்றனர்.

அதைவிட, கடந்த 10ஆம் திகதி பிணைமுறி மோசடி தொடர்பாக விவாதிக்கும் விசேட நாடாளுமன்ற அமர்வில் ஏற்பட்ட குழப்பநிலையும், அதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் யார் திருடன் என கூச்சலிட்டதும் கூட, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள்வர்களிடையே விமர்சனத்தை தோற்றுவித்திருந்தது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கூட ஜனாதிபதி மைத்திரிக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார் என்பதை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அந்த யார் திருடன் என்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சாடுவதாய் அமைந்திருந்த கூற்று உணர்த்துகின்றது.

இந்நிலையில், அமைச்சரவைக் கூட்டத்தில் இருந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிநடப்பு செய்திருந்தமை தென்னிலங்கை அரசியல் அவதானிகளிடையே பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

மைத்திரியின் அடுத்தகட்ட நடவடிக்கை எவ்வாறானதாக இருக்கும், அது இலங்கை அரசியலில் பாரிய மாற்றங்களை தோற்றுவிக்குமா? என்ற நிலை இதன் காரணமாக தோற்றம் பெற்றுள்ளது.

மேலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான அரசியல் காய் நகர்த்தல்களும் வலுப்பெறுகின்றன, தற்போது பிரதமருக்கு எதிரான கூட்டெதிர்க்கட்சியினரின் நம்பிக்கையில்லாப் பிரேரணை தயாராகியுள்ளமை அதற்கு சான்று.

ஆட்சியில் இருக்கக்கூடிய ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் எதிராக தற்போது அதிகபடியான அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன எனக்கூட கூறலாம், இலகுவாய் கூறுவதென்றால், பிணை முறி தொடர்பான ஜனாதிபதியின் அறிக்கை அவருக்கே தற்போது தலையிடியாக அமைந்துள்ளது.

இவ்வாறான அழுத்தங்களின் மூலம் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் ஒரு வலுவான முறுகல் நிலை தோன்றும் பட்சத்தில் அதன் விளைவு எவ்வாறு இருக்கும் என்பதோடு, கூட்டரசாங்கத்தின் ஆயுள் தொடர்பிலும் சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.

இதேபோன்றதான ஒரு சூழ்நிலை கடந்த 2002 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்றதை இத்தருணத்தில் சுட்டிக்காட்டலாம். கடந்த 2002ஆம் ஆண்டு ஆட்சிக்காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் இடையில் இவ்வாறான ஒரு முறுகல் நிலையே ஏற்பட்டது.

2002 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு அற்ற நிலையின் காரணமாக அப்போதைய ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா அதிரடியாக செயற்பட்டு அப்போதைய பாதுகாப்பு அமைச்சு, உள்துறை அமைச்சு, ஊடகத்துறை அமைச்சு ஆகியவற்றை கைப்பற்றிக்கொண்டார்.

அப்போதைய அமைச்சரவையில் இருந்த ஜோன் அமரதுங்க, திலக் மாரப்பன ஆகியோரது பதவிகள் இதன் போது பறிபோயின.

அத்துடன் 3 மாத காலத்திற்கு நாடாளுமன்றத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஒத்திவைத்து, அந்த 3 மாத காலப்பகுதி நிறைவடைந்த பின்னர் அதிரடியாகநாடாளுமன்றத்தைகலைத்தார்.

இதுபோன்ற ஒரு முறுகல் நிலையே தற்போதும் நிலவுவதால் அன்றைய ஜனாதிபதி சந்திரிகாவைப் போல மைத்திரியும் செயற்படுவாரா? என்பதே தற்போதைய கேள்வி!

அவ்வாறான அபாயகரமான சூழ்நிலை உருவாகுமா? அல்லது ஐக்கிய தேசியக் கட்சியினர் அழுத்தங்களின் மூலமாக மைத்திரியை அந்நிலைக்கு உட்படுத்திவிடுவரா? என்ற ஐயப்பாடும் நிலவுகின்றது.

மேலும், ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டத்தில், ஜனாதிபதி சம்பந்தமாக விமர்சனங்களை முன்வைப்பதில்லை என முடிவு செய்துள்ளதாக அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ தெரிவித்திருந்தார்.

அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் வெளியிடும் கருத்துக்கள் சம்பந்தமாக அவர்களை இலக்கு வைத்து பதிலளிக்க வேண்டுமே தவிர ஜனாதிபதியை இலக்கு வைக்கக் கூடாது என்ற தீர்மானத்தை செயற்குழு எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஐ.தே.கவின் முடிவிற்கமைய ஜனாதிபதியை அவர்கள் சீண்டாமல் இருப்பார்களா? முடிவில் மாற்றங்கள் ஏற்படுமா? இந்த நிலை இன்னும் எத்தனை நாட்களுக்கு தொடரும் என்ற எதிர்ப்பார்ப்பே தற்போது தென்னிலங்கை அரசியல் குறித்து நிலவுகின்றது.

மேலும், மைத்திரியை ஐ.தே.கவினர் சீண்டாமல், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரை இலக்கு வைத்து செயற்பட்டார்கள் எனில், சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தில் இருக்கும் மைத்திரி அதற்கு எவ்வாறு பதில் அளிக்கப்போகின்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் மீது ஐ.தே.கவினர் வலுவான அழுத்தங்கள் கொடுத்தால், மைத்திரி கூட்டரசாங்கத்தின் ஜனாதிபதி என்ற நடுநிலையுடன் செயற்படுவாரா? இல்லை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற ரீதியில் செயற்படுவாரா? என்ற ஐயப்பாடும் நிலவுகின்றன.


எது எப்படியாயினும், ஐ.தே.க. தொடர்பில் மைத்திரியின் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன? என்பதே தென்னிலங்கை அரசியல் அவதானிகளினதும், நாட்டு மக்களினதும் எதிர்ப்பார்ப்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியக் கிரிக்கெட்டின் இரும்புக்கோட்டை

# ராகுல் டிராவிட்!

கிரிக்கெட் உலகில் மிகவும் கடினமான விஷயம் எதுவெனில், அது டெஸ்ட் போட்டிகளில் மூன்றாவது வீரராக களமிறங்குவதுதான். அப்படிப்பட்ட சிரமமான காரியத்தை, அலாதியான காதலோடு அள்ளி அனைத்துக் கொண்ட கிரிக்கெட்டின் காதலன், ராகுல் டிராவிட். மூன்றாவது வீரராகக் களமிறங்குவதில் அப்படி என்ன சிரமம்... அதில் என்ன ஸ்பெஷல்?



ஓப்பனிங் பட்ஸ்மேன்கள் பாட்டுகளைக் கட்டும்போதே, மூன்றாவது வீரரும் கட்ட வேண்டும். களம் செல்லும் இருவரில் யாரேனும் ஒருவர் முதல் பந்திலேயே அவுட் ஆகலாம். இல்லை, இருவருமே நிலைத்து நின்று 50-60 ஓவர்கள் வரை கூட ஆடலாம். போருக்குத் தயாரான நிலையில் நிலைநிறுத்தப்படும் பீரங்கியைப்போல எந்நேரமும் எதற்கும் தயாராக இருக்க வேண்டும்.

எதிரணியின் திட்டங்களை தவிடுபொடியாக்குவதில் மிகப்பெரிய கடமை மூன்றாவதாக களமிறங்கும் வீரருக்கு இருக்கிறது. டெஸ்ட் போட்டிகளில் பயன்படுத்தப்படும் பந்தின் வழுவழுப்பு அவ்வளவு எளிதில் மறையாது. அதனால், அதிக நேரம் ஸ்விங் ஆகும். சரி, பொறுமை காத்து பிறகு அடித்துக்கொள்ளலாம் என்றும் இருக்க முடியாது.

இந்திய துணைக்கண்டத்தில் ஆடப்படும் போட்டிகளில் பெரும்பாலும் மைதானங்கள் முழுவதும் பச்சைப்புற்கள் இருக்காது. பந்து விரைவில் சொரசொரவென ஆகி ரிவர்ஸ் ஸ்விங் ஆவதற்கு அதிக வாய்ப்பு உண்டு. அதனால், தொடக்க வீரர்களும் மூன்றாவது வீரரும் பொறுமையாக ஆட்டமிழக்காமல் ஆடி, பந்து ஸ்விங் ஆகும் தன்மையிலிருந்து பாதுகாத்தால் அதற்கடுத்து வரும் வீரர்கள் பதம் பார்ப்பார்கள்.

இந்தியாவிலேயே இந்த நிலைமை என்றால், இங்கிலாந்து, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் பந்து ஏகத்துக்கும் ஸ்விங் ஆகும். இந்தியாவின் தொடக்க வீரர்கள் பட்டியலைப் பார்த்தால் தலையே வெடித்து விடும். டிராவிட் வருவதற்கு முன்பு, ஆடிய காலம் என்று கொஞ்சம் பட்டியலிட்டால் இரு வீரர்கள் மட்டுமே தேறுவர். அவர்கள் சேவாக் மற்றும் கம்பீர். இவர்கள் இருவரும் ஆடிய கால கட்டத்தில்தான் டிராவிட் கொஞ்சம் நம்பிக்கையோடு ஒரு கோப்பை தேநீராவது அருந்த முடியும். அதுவும் இந்திய ஆடுகளங்களில் மட்டுமென்றால் மிகையாகாது.

இப்போது அன்னிய மண்ணில் ஒரு டெஸ்ட் போட்டியை வெல்ல ஏதேதோ வித்தைகள் செய்தும் ரிசல்ட் நெகட்டிவாக வர முக்கிய காரணம், குறைந்தது 150 பந்துகளை சந்திக்கக்கூடிய பொறுமை இன்றைய வீரர்களிடம் இல்லாமல் போனதே. இன்றுவரை டெஸ்ட் போட்டிகளில் அதிக பந்துகளை எதிர்கொண்ட வீரர் டிராவிட் மட்டுமே. ஒரு பௌலர் டிராவிட்டுக்குப் பந்து வீசும்போது, 6 முறை கஷ்டப்பட்டு வெவ்வேறு லெந்த்களில் பந்து வீச யோசிக்க வேண்டும். மிஞ்சி மிஞ்சிப்போனால் 7-8 ஓவர்களுக்கு மேல் பந்துவீச ஒரு பௌலருக்கு உடம்பில் தெம்பு இருக்காது. யாருக்கு மரியாதை கொடுக்க வேண்டுமோ, கொடுத்து விட்டு மற்றவர்களை அடித்து ஆடுவதே புத்திசாலித்தனம்.

டிராவிட் மூன்றாவது வீரராகக் களமிறங்கி 10,524 ரன்களை எடுத்துள்ளார் 52.88. டெஸ்ட் போட்டிகளில் அதிகமுறை வெவ்வேறு வீரர்களோடு ஜோடி சேர்ந்து ரன் குவித்த வீரர்களிலும் டிராவிட்தான் டாப்.




சில நேரங்களில் சிலருக்கு ஏற்படும் காயங்கள் அணிக்கு சாதகமாக முடியும். அப்படி சாதகமாக முடிந்த விஷயங்களில் மிகப்பெரிய ட்விஸ்ட்களில் ஒன்றுதான் சஞ்சய் மஞ்சரேக்கர். அவர் காயம்காரணமாக 1996-ம் ஆண்டு லார்ட்ஸ் டெஸ்ட் போட்டியிலிருந்து விலக, டிராவிட் அடியெடுத்து வைத்தார். அதேபோல சச்சின் வெகு நாட்களாக வலியில் வாட, ஒருநாள் போட்டிகளில் யாரைத் தொடக்க வீரராக களமிறக்குவது என முழித்துக்கொண்டிருந்த கங்குலிக்கு கிடைத்த பொக்கிஷம், சேவாக்.

இந்திய அணி அந்நிய மண்ணில் சாதித்த பெரும்பாலான வெற்றிகளில் டிராவிட்டின் பங்கு அளப்பறியது.

இதை எந்தத் தராசு கொண்டும் அளவிட முடியாது. தன் அறிமுகப் போட்டியே இங்கிலாந்தில் அரங்கேறியாதால், அதன் பின்பு எப்போது இங்கிலாந்து சென்றாலும் ஒரு கலக்கு கலக்காமல் வர மாட்டார். 1999 உலகக்கோப்பையில் அதிக ரன்கள் குவித்த வீரர் என்ற பெருமையோடு 2002ஆம் ஆண்டு சுற்றுப்பயணம் செய்த போது, ஹெடிங்கிலி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில், சேவாக் 8 ரன்னோடு நடையைக் கட்ட, சஞ்சய் பாங்கருடன் ஜோடி சேர்ந்து, நாள் முழுவதும் இங்கிலாந்தின் பந்துவீச்சாளர்களை கதறவைத்தார் டிராவிட்.

பாங்கர் 236பந்துகளை எதிர்கொண்டு 68 ரன்கள் சேர்க்க, டிராவிட் 307 பந்துகளில் 148 எடுக்க, சச்சினும் கங்குலியும் தங்கள் பங்குக்கு சோர்ந்த இங்கிலாந்தை சுளுக்கெடுக்க, இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 46 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இந்த டெஸ்ட் போட்டியின் வீடியோ பதிவுகளைக்கொண்டு வளரும் வீரர்களுக்கு பாடமே எடுக்கலாம். தற்போது 80 சதவீத போட்டிகள் நான்கு நாட்களுக்குள் முடிந்து விடுகிறது.

அவசரம் அவசரம், அவசரத்துக்கெல்லாம் பெரிய அவசரம் என்று பக்கத்துக்கு தெருவில் பந்து சென்றால் கூட, ஷாட் ஆட முற்பட்டு அவுட்டாகும் இன்றைய வீரர்களைப் பார்க்கையில் பரிதாபமாக இருக்கிறது.

2007இல் இங்கிலாந்து சுற்றுப்பயணத்தை 1:0 என்று வென்று பல வருடங்களாக இங்கிலாந்தில் தொடரைக் கைப்பற்றாத அணியாக இருந்த நிலையை மாற்றினார். குழுவாக செயல்பட்டு எல்லோரும் ஏதோ ஒருவிதத்தில் வெற்றிக்கு வித்திட்ட தொடர் அது மட்டுமே. வாசிம் ஜாஃபர், தினேஷ் கார்த்திக்கின் அற்புதமான தொடக்கம், டிராவிட், சச்சின், கங்குலி, லட்சுமண், தோனி என எல்லோருமே தங்களது ஃபார்மின் உச்சத்தில் இருந்த நேரம் அது. போதாக்குறைக்கு கும்ளே ஒரு செஞ்சுரி போட, அட்டகாசமாக முதல்முறையாக பல வருடங்களில் இந்திய அணி காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டு தாயகம் திரும்பியது.

உலகக்கோப்பைக்கான அணியை உருவாக்கும்பொருட்டு 2009இல் தோனி ஒருநாள் போட்டியிலிருந்து டிராவிட்டை நீக்க, உலக சம்பியனான இந்திய அணி 4:0 என இங்கிலாந்து சுற்றுப் பயணத்தில் அடி வாங்கிய போது, இறுதி வரை உயிரைக் கொடுத்து ஆடிய ஒரே வீரர். தொடக்க வீரராக வந்து ஆட்டமிழக்காமல் சதமடித்துவிட்டு, ஃபாலோ ஆன் ஆனபோதும் பத்து நிமிடத்தில் மீண்டும் களமிறங்கிய அந்த மன தைரியத்தைக் க்ண்டு கிரிக்கெட் உலகமே ஆனந்தக்கண்ணீர் வடித்தது.

ஒரு தின ஆட்டங்களுக்கு வேண்டாம் என ஒதுக்கிய நிர்வாகமே மீண்டும் இங்கிலாந்துக்கு எதிராக ஆட அழைத்த போது. நான் நிச்சயம் இதை எதிர்பார்க்கவில்லை.. அதனால், இப்போதே விடைபெறுகிறேன்" என்று தனக்கும் அணிக்கும் உண்மையாக இருந்து விலகிய டிராவிட் போன்று வேறொரு வீரர் கிடைப்பதெல்லாம் நடக்காத காரியம். படேலின் பந்துவீச்சில் ஹாட்ரிக் சிக்ஸர்கள் பறக்கவிட்டு தன்னுடைய சர்வதேச இருபது ஓவர் போட்டியை முடித்ததெல்லாம் ஆச்சர்யத்தின் உச்சம்.

கமென்ட்ரியை விட அடுத்த தலைமுறை வீரர்களை அடையாளம் காண்பது அவருக்குப் பிடித்த வேலை. டிராவிட்டே தேடினாலும் இன்னொரு டிராவிட்டை அடையாளம் காண முடியாது ஏனெனில், அவர் ராகுல் டிராவிட். (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : உழைக்கும் கரங்கள்
இசை: எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர் : கே.ஜே.யேசுதாஸ்
வரிகள்: புலமைப் பித்தன்



நாளை உலகை ஆள வேண்டும் உழைக்கும் கரங்களே
இந்த நாடு முழுதும் மலர வேண்டும் புரட்சி மலர்களே
புரட்சி மலர்களே உழைக்கும் கரங்களே
நாளை உலகை ஆள வேண்டும்...
கடமை செய்வோம் கலங்காமலே
உரிமை கேட்போம் தயங்காமலே
கடமை செய்வோம் கலங்காமலே
உரிமை கேட்போம் தயங்காமலே
வாருங்கள் தோழர்களே
ஒன்றாய் வாருங்கள் தோழர்களே
நாளை உலகை ஆள வேண்டும்...
ஏர் பூட்டி தோளில் வைத்து
இல்லாமை வீட்டில் வைத்து
ஏர் பூட்டி தோளில் வைத்து
இல்லாமை வீட்டில் வைத்து
போராடும் காலமெலாம் போனதம்மா
எல்லோர்க்கும் யாவும் உண்டு
என்றாகும் காலம் இன்று
நேராக கண்ணில் வந்து தோன்றுதம்மா
விடியும் வேளை வரப்போகுது
தருமம் தீர்ப்பை தரப்போகுது
நியாயங்கள் சாவதில்லை என்றும் நியாயங்கள் சாவதில்லை
நாளை உலகை ஆள வேண்டும்...

கல்விக்கு சாலை உண்டு நூலுக்கு ஆலை உண்டு
நாட்டுக்கு தேவை எல்லாம் நாம் தேடலாம்
தோளுக்கு வீரம் உண்டு தோற்காத நியாயம் உண்டு
நீதிக்கு நெஞ்சம் உண்டு நாம் வாழலாம்
சிரிக்கும் ஏழை முகம் பார்க்கலாம்
சிந்தும் கண்ணீர் தனை மாற்றலாம்
வாருங்கள் தோழர்களே
ஒன்றாய் சேருங்கள் தோழர்களே
நாளை உலகை ஆள வேண்டும்

# கல் சுவரைவிட வலுவானது சிலந்தி வலை

"ஒருவரை நம்பலாமா, வேண்டாமா? என்பதைக் கண்டுபிடிப்பதற்குச் சிறந்த வழி அவரை நம்புவதுதான்" என்று சொல்லியிருக்கிறார் எர்னெஸ்ட் ஹெமிங்வே (Ernest Hemingway). மனிதர்களை நம்புவதில் மட்டுமல்ல... எதன் பொருட்டாக இருந்தாலும், அது ஆழமானதாக இருக்கவேண்டியது அவசியம். "நம்பினார் கெடுவதில்லை" தொடங்கி "என்னை நம்பிக் கெட்டவர்கள் யாரும் இல்லை... நம்பாமல் கெட்டவர்கள் ஏராளம்" என்கிற எம்.ஜி.ஆரின் பிரபல வசனம் வரை நம்பிக்கை உணர்த்தும் செய்திகள் ஏராளம். அழுத்தமாக, தீவிரமாகக் கூட வேண்டாம்... ஒரே ஒரு கணம் ஒன்றில் நம்பிக்கை வைத்தால்கூட அது நமக்கு அள்ளித்தரும் அற்புதம் அபாரமானது. அது எப்படி என்பதை விளக்குகிறது இந்தக் கதை.

அது இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்த காலகட்டம். அமெரிக்காவின் கப்பற்படையைச் சேர்ந்த வீரன் அவன். ஓர் அச்சந்தர்ப்பமான சூழ்நிலையில் தன் படைப் பிரிவிலிருந்து பிரிந்துவிட்டான். ஒரு சின்னஞ்சிறிய தீவில் மாட்டிக் கொண்டான். படைப் பிரிவைத் தேடி, அவர்களோடு சேர்ந்துகொள்ள வேண்டுமே... என்கிற ஏக்கம் ஒருபுறம். "எதிரிகளிடம் மாட்டிக் கொண்டுவிடக் கூடாதே' என்கிற பயம் ஒருபுறம். அந்த கப்பற்படை வீரன் கடற்கரையோரமாக நடந்தான். அவனிடம் துப்பாக்கி இருந்தது... உணவும் கொஞ்சம் நீரும் கூட இருந்தது. ஆனால், எதிரிகள் குறித்த பயம் மட்டும் அவனைப் படுத்தியெடுத்தது. கொஞ்சம் தூரம் நடந்திருப்பான். ஒரு சத்தம் அவனை உலுக்கியது. காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு சத்தத்தைக் கவனித்தான். செடிகளை விலக்கிக் கொண்டு, சருகுகளை மிதித்துக் கொண்டு சிலர் வேகமாக முன்னேறி வரும் சத்தம் அவனுக்குப் பயம் உறுதியாகிவிட்டது. நிச்சயம் வருபவர்கள் எதிரிகளாகத்தான் இருக்க வேண்டும். தன்னந்தனியாக இருக்கிறான். கூட அவன் தோழர்கள் யாரும் இல்லை. என்ன செய்வது. ஒளிவதைத்தவிர வேறு வழியில்லை.

அவசர அவசரமாக ஒளிந்து கொள்ளத் தோதான இடம் ஒன்றைத் தேடினான். அருகில் ஒரு குன்று இருந்தது. அதன்மேல் வரிசையாகச் சில குகைகள் இருப்பது தெரிந்தது. விறுவிறுவென்று அந்தக் குன்றில் ஏறினான். நான் காவதாக இருந்த குகைக்குள் நுழைந்து உள்ளே போய் ஒடுங்கி, உட்கார்ந்து கொண்டான். கொஞ்சம் வசதியாக இருந்தது குகை பாதுகாப்பாக இருப்பதாக உணர்ந்தான். கப்பற்படையில் இருந்ததால், இராணுவ நடைமுறைகளையும் செயற்பாடுகளையும் அவன் நன்கு அறிவான். வருபவர்கள் நடந்தவிதத்தை வைத்து அவர்கள் யாரையோ தேடிவருகிறார்கள் என்பதை அவன் உணர்வு சொன்னது. "அப்படித் தேடிவரும் பட்சத்தில் நிச்சயமாக இந்தக் குகைகளையும் விட்டுவைக்க மாட்டார்கள். அப்படியானால்



என்னைக் கண்டுபிடித்துவிடுவார்கள். கண்டுபிடித்துவிட்டால்..? அவ்வளவுதான் உயிர் உடலில் தங்காது இப்படி நினைத்ததும் அவன் உடல் நடுங்கியது.

இப்போது என்ன செய்வது நாம் தப்பிப்போம் என்று நம்புவதைத் தவிர வேறு வழியில்லை. பிரார்த்தனை... அதை மட்டும்தான் இப்போது செய்ய முடியும். அவன் கண்களை மூடி பிரார்த்தித்தான். கடவுளே... என்னை என் எதிரிகளிடமிருந்து காப்பாற்று. உன்னை மனமார நம்புகிறேன்... மனமுருக வேண்டுகிறேன்...' அவன் பிரார்த்தித்த அந்த ஒரு கணத்தில், தான் நிச்சயம் காப்பாற்றப்படுவேன் என்று முழுமனதோடு நம்பினான்.

ஆனால்... அது என்ன..? கும்பலாகச் சிலர் அந்தக் குன்றின் மேல் ஏறிவருவதுபோலச் சத்தம் கேட்கிறதே..! நிச்சயம் அவர்கள் தான்... எதிரிகள்தான். ஐயோ... நான் என்ன செய்வேன்?'

இப்படி அவன் யோசித்துக்கொண்டிருந்தபோதே அதைப் பார்த்தான். அது ஒரு சிறிய சிலந்தி. உள்ளே ஒரு மனிதன் இருக்கிறானே என்கிற பயமில்லாமல், அது பாட்டுக்கு வேலையில் இறங்கியது. அந்தக் குகையின் வாசலில் ஒரு வலையைப் பின்ன ஆரம்பித்தது. அந்த வீரனுக்கு அது வேடிக்கையாக இருந்தது. நான் என்ன கேட்டேன்... கடவுள் என்ன செய்கிறார்? கல்லாலான ஒரு சுவரைக் கொண்டு இந்தக் குகை வாசலை கடவுள் மூடியிருக்க வேண்டாமா? ஒரு சிலந்தியை அனுப்பிவைத்திருக்கிறாரே...' என்று நினைத்தான்.

இப்போது சில படை வீரர்கள் வரும் சத்தம் நன்றாகக் கேட்டது. அவர்கள் மேலே வந்துவிட்டார்கள். முதல் குகையருகே அவர்கள் நிற்பதும் அதற்குள்ளே ஓர் ஆள் நுழைந்து, இங்கே யாரும் இல்லை' என்று சொல்வதும் அவன் காதில் விழுந்தது. அவனுக்கு உடல் தூக்கிவாரிப்போட்டது. குகையின் கடைசி நுனிக்குப்போய் கற்பாறையை ஒட்டி உட்கார்ந்துகொண்டான். அந்தச் சிலந்தி வெளியே கேட்கும் ஆள் அரவம், உள்ளே அவன் இருப்பது எதையும் கண்டுகொள்ளவில்லை. அதுபாட்டுக்கு வலை பின்னுவதில் பிஸியாக இருந்தது. அவர்கள் இரண்டாவது குகைக்குள் நுழைந்து தேடிப் பார்த்தார்கள். எதுவும் அகப்படாமல் அடுத்த குகைக்குள் நுழைந்தார்கள். அதற்கடுத்து அவர்கள் இவனிருக்கும் குகைக்குள்தான் வந்தாக வேண்டும். எப்படியும் ஒருவன் உள்ளே வந்து பார்க்கத்தான் போகிறான். கடவுளே... அவன் கண்களை மூடிக்கொண்டான். அவன் இதயம் வேகமாகத் துடித்தது. அவனிருந்த குகை வாசலில் சிலர் நிற்பதும், நிச்சயம் இதுக்குள்ள யாரும் இருக்க மாட்டாங்க என்று ஒருவன் சொல்வதும் கேட்டது. அவர்கள் குகைக்குள் தேடாமலேயே அங்கிருந்து நகர்ந்துபோனார்கள். அன்றைக்கு அந்த வீரன் உயிர்பிழைத்துவிட்டான். இப்போது அவனுக்குக் காரணம் புரிந்துவிட்டது. குகை வாசலில் கூடுகட்டிக்கொண்டிருக்கிறது ஒரு சிலந்தி. அப்படியானால், சிறிது நேரத்துக்கு முன்னால் யாரும் அதற்குள் நுழைந்திருக்க வாய்ப்பில்லை. இப்படி நினைத்துத்தான் எதிரிகள் உள்ளே நுழையாமல் சென்றுவிட்டார்கள்.

அவன் கண்களை மூடிக்கொண்டு சொன்னான்... கடவுளே... மிக்க நன்றி. என்னை மன்னித்துவிடு கடவுளே... ஒரு கல் சுவரைவிட நீ அனுப்பிய சிலந்தியின் வலை வலுவானது என்பதை நான் மறந்துவிட்டேன்.'

# முதுமையில் இளமை

ஆண்கள் 60 வயதையும் பெண்கள் 58 வயதையும் அடைந்தாலே சீனியர் சிட்டிசன் என்ற அந்தஸ்தைப் பெற்று விடுவார்கள். ஆனால், உண்மையில் அவர்கள் முதியவர்களா? இல்லவே இல்லை என்கிறது ஒரு மானுடவியல் ஆய்வு.

பிரிட்டன் அரசின் 'தி ஃப்ரெண்ட்லி சொசைட்டிஸ் ஆக்ட்' 1875 இன்படி, முன்பு நீங்கள் 50 வயதைத் தாண்டியிருந்தாலே முதியவர் என்ற முத்திரை குத்தப்படும். ஆனால், ஐக்கிய நாடுகள் சபை அதை ஏற்கவில்லை. 60 வயதைத் தொட்டவர்கள்வேண்டுமானால் முதியவர் ஆகும் தறு வாயில் இருப்பதாக ஏற்கலாம் என்ற வரையறையைக் கொண்டுவந்தது.

இந் நிலையில், இந்த இரண்டிலும் உடன்படா வண்ணம், உலகச் சுகாதார அமைப்பு (WHO), வேறொரு 'வயது அட்ட வணை' யைத் தற்போது வெளியிட்டுள்ளது. அதன்படி,

0-17 வயது: வயதுவந்தோர் (Unde rage)

18-65 வயது: இளைஞர்கள் (Youth/Young People)

66-79 வயது: நடுத்தரவயது (Middle-Aged)

80-99 வயது: முதியவர்கள்ஃ சீனியர் சிட்டிசன்ஸ் (Elderly/ Senior)

100+ வயது: நீண்ட காலம் வாழ்ந்த வயதானவர் (Long-Lived Elderly).

1970-களில் தொடங்கப்பட்ட இந்த மானுடவியல் ஆய்வு, பின் வரும் மூன்று காரணிகளை அடிப்படையாகக்கொண்டது.

❖ வயது வரிசை (Chronology)

❖ சமூகச் செயற்பாட்டில் மாற்றம் (மாத விடாய் மாற்றங்கள், செய்யும் பணியின் தன்மை மாற்றம், பெற்ற குழந்தைகளின் வயது).

❖ திறன்களில் மாற்றம் (சொந்தப் பணிகளைக் கூடச் செய்ய முடியாத நிலை வருதல், முதுமை மற்றும் உடல் பண்புகளில் மாற்றம்).



இந்த மூன்றில், இரண்டாவது காரணியான சமூகத்தில் உங்கள் பங்குதான், மேற்கண்ட அட்டவணையில் நீங்கள் எந்தக் கட்டத்தில் இருக்கிறீர்கள் என்பதைச் சுட்டிக் காட்டப் பெரிதும் உதவுகிறது. இதன்படி, அமெரிக்காவில் 66 வயது, கனடாவில் 65 வயது என்று இருக்கும் ஓய்வு வயது தற்போது 67 வரை நீட்டிக்கப்படவுள்ளது.

❖ உலக வங்கியின் 2016 ஆம் ஆண்டின் தரவுகள் படி, உலக மக்கள் தொகையில், 65 வயதைத் தாண்டியவர்கள் வெறும் 8.5 சதவிகிதம் மட்டுமே. இது 2050 ஆம் ஆண்டின் போது இரட்டிப்பாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நீங்கள் வயதானவர், முதியவர் என்பதை எடுத்துரைக்கும் வகையில் ஒரு நிலையான, அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகள் இது வரை எதுவும் கிடையாது. இது நாடுகளுக்கு ஏற்றவாறு மாறிக் கொண்டே தான் இருக்கின்றது.

ஆனால், உலகச் சுகாதார அமைப்பைப் பொறுத்தவரை, 65 வயதைத் தொடங்கிட்டாலும், நீங்கள் இன்னமும் ஓர் இளைஞர்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 117

## கண்நோய் (Conjunctivitis)



கண்ணின் விழி வெண்படலமானது சிவப்பு நிறமாக மாறும் நிலைமை கண்நோய் எனப்படும். இது பின்வரும் காரணங்களால் ஏற்படலாம்.

- நோய்க்கிருமித் தொற்று - பக்றீரியா
- ஒவ்வாமை உ+ம்மகரந்த மணிகள், வைரஸ், தூசி
- இரசாயனபதார்த்தங்கள் - அமிலம்/காரம்.

கண்நோய்க்குரிய பிரதான காரணம் நோய்க்கிருமித் தொற்றாகும். அதிகளவில் வைரஸ் காரணிகளால் கண்நோய் ஏற்படுகின்றது. கண்நோயின் பிரதான குணங்குறிகளாவன.


- கண் சிவத்தல்
- கண்மடல் வீங்குதல்
- கண்கடித்தல்/எரிவு
- கண்ணில் பிறபொருள் உள்ளதுபோன்றஉணர்வு
- கண்ணின் சுரப்பிகளால் பார்வை மங்கலடைதல்
- பிரகாசமான ஒளியைப் பார்க்க முடியாமை / நோவு ஏற்படுதல்.

இதைத்தவிர வைரஸ் அல்லது பக்றீரியாவினால் ஏற்படும் போது கண்நோய் குணங்குறிகளுடன் தொண்டை நோ, காது நோ, தடிமன், காய்ச்சல் போன்ற அறிகுறிகளும் சேர்ந்து காணப்படலாம்.

வைரஸினால் ஏற்படும் போது கண்ணிலிருந்து அதிகளவு தண்ணீர்த் தன்மையான திரவமும் பக்றீரியாவினால் ஏற்படும் போது தடித்த பீழையும் கண்ணிலிருந்து வெளியேறும். இதன் காரணமாக நித்திரையால் எழும்பும் போது கண்மடல்கள் ஒட்டியவாறு காணப்படும்.

கண் நோயானது பொதுவாக ஆரம்பித்து ஐந்து நாள்களுக்குள் குணமாகிவிடும். ஆயினும் சில வேளைகளில் கண்நோயானது இரண்டு கிழமை தொடக்கம் மூன்று கிழமை வரை கூடச் செல்லலாம்.






வைரஸினால் ஏற்படும் கண்நோய்க்கு நோயெதிர்ப்பு மருந்துச் சொட்டுக்கள் பிரயோசனப்படாது. பக்றீரியாவினால் ஏற்படும் போது மருந்துச் சொட்டுக்களைப் பாவிப்பது நோய் குணமாகும் நேரத்தை விரைவுபடுத்துவதுடன் பிறருக்குப் பரவுவதையும் குறைக்கின்றது.

கண்நோய் ஏற்படும் போது குளிர்ந்த நீரால் கண்களைக் கழுவுதல், குளிர்ந்த துணிகளை கண்ணில் வைத்திருத்தல், Artificial Tear சொட்டுக்களைப் பாவித்தல் என்பன கண்ணின் நோவைக் குறைக்கும்.


இரசாயனப் பதார்த்தங்கள் கண்ணில்படும் போது சுத்தமான நீரினால் கண்களைக் கழுவ வேண்டும். உடனடியாக வைத்திய உதவியை நாட வேண்டும்.

சாதாரணமாக ஏற்படும் கண்நோய்க்கும் பின்வரும் சந்தர்ப்பங்களில் வைத்திய உதவியை நாடவேண்டும்.

- கண்ணில் வலி அதிகரித்துக் காணப்படுதல்
- கண்கடும் சிவப்பு நிறமாயிருத்தல்
- கண்பார்வை மங்கலடைதல் (பீழையை அகற்றிய பின்பும்)
- நோயெதிர்ப்பு சக்தி குறைந்தோர்
- கொப்பளிப்பானுடன் சேர்ந்த கண்நோய்.

கண்நோயானது ஒருவரில் இருந்து இன்னொருவருக்கு மிக விரைவாகத் தொற்றக்கூடியது. இதன்காரணமாக தனிச்சுகாதாரம் பேணுதலே நோய் பரவுவதைத் தடுக்கும் முறையாகும். அடிக்கடி கண்களினுள் கையைப் போடுவதைத் தவிர்த்தல். பிறரின் துவாய், தலையணை, கைக்குட்டை போன்றவற்றை பகிர்ந்து கொள்ளுதலைத் தவிர்த்தல். கண்ணைத் துடைக்கப் பாவிக்கும் துணிகளைத் தகுந்த முறையில் சுத்தம் செய்தல். பிறருக்குரிய கண்மருந்துகளைப் பாவிப்பதைத் தவிர்த்தல்.

கண்களைத் துடைத்த பின்பும், கண் மருந்தை விட்ட பின்பும் கைகளை சவர்க்காரமிட்டுக் கழுவுதல் போன்ற சுகாதார முறைகளைப் பின்பற்ற வேண்டும்.



## காதுக்குடும்பி (Ear Wax)



மனிதனின் காதானது வெளிக்காது, நடுக்காது, உட்காது என மூன்றாகப் பிரிக்கப்படுகிறது. வெளிக்காதானது காதுச்சோணை, புறக்காதுக் கால்வாய் என்பவற்றை உள்ளடக்கியது. இது செவிப்பறை மென்சவ்வின் மூலம் நடுக்காதிலிருந்து பிரிக்கப்படுகின்றது.

புறக்காதுக் கால்வாயானது, வெளிப்புற மூன்றிலொரு பகுதி கசியிழையத்தினாலும், மீதி என்பினாலும் ஆக்கப்பட்டது. புறக்காதுக்கால்வாயின் உட்பரப்பானது தோலினால் மூடப்பட்டுள்ளது. தோலானது கால்வாயின் வெளிப்புற மூன்றிலொரு பகுதியில்சீத்சுரப்பிகளையும்வியர்வைச் சுரப்பிகளையும் கொண்டுள்ளது.



அழிவடைந்த தோல்கலங்களும் சுரப்பிகளும் சேர்ந்து உருவாக்கப்படும் பதார்த்தமே காதுக்குடும்பி எனப்படும் அழிவடைந்த தோல் புரதத்தினால் ஆனது. மிகுதி பல்வேறு வகையான கொழுப்பமிலங்களைக் கொண்டது.

காதுக் குடும்பியானது பரம்பரை அலகுகளின் அடிப்படையில் உலர்வகை, ஈரவகை எனப் பிரிக்கப்படுகின்றது. உலர் வகையானது ஆசிய, செவ்விந்திய மக்களிடமும், ஈரவகையானது ஆபிரிக்க, ஐரோப்பிய மக்களிடமும் காணப்படுகின்றது.

**சாதாரண மனிதரில் பின்வரும் நன்மைகள் காதுக்குடும்பியினால் கிடைக்கின்றன.**

- **காதுக்கால்வாயைச் சுத்தப்படுத்தல்:**

காற்றிலுள்ள சிறுதூசு போன்ற அழுக்குகள் புறக்காதினுள் செல்லும் போது அவை சுரப்பிகளில் ஒட்டிக் கொள்ளும். பின் தோற்கலங்களும் சுரப்புகளும் வெளியேறும் போது அழுக்குகளும் அகற்றப்படுகின்றன. தாடையின் அசைவின் காரணமாக குடும்பி வெளியேற்றம் இலகு வாக்கப்படுகிறது.

இதன்மூலம் செவிப்பறை மென்சவ்வு பாதுகாக்கப்படுகின்றது.

- **ஈரலிப்பாக்குதல்**

சுரப்பிகளில் உள்ள கொழுப்புத் தன்மையான பதார்த்தங்கள் காதின் தோலில் உலர்தல், உதிர்தல், கடித்தன்மை (Itchy) என்பவற்றிலிருந்து பாதுகாக்கின்றது.

- **நோய் எதிர்ப்புத் தன்மை:**

சுரப்புகள் சில பக்றீரியா மற்றும் பூஞ்சன வகைகளின் வளர்ச்சியைத் தடுக்கும் அல்லது குறைக்கும் பதார்த்தங்களைக் கொண்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் காதுக்குடும்பியானது பிரச்சினைக்குரிய ஒன்றாகவும் மாறுகின்றது. குடும்பியானது அதிகளவு உருவாகும் போது புறக்காதுக் கால்வயை அடைக்கின்றது. இதன்போது கேட்டல் குறைபாடு, காது அடைப்பு, காதுநோ, காதினுள் இரைச்சல் மற்றும் தலைச்சுற்று ஆகிய குணங்குறிகள் ஏற்படுகின்றன.

பயம், மனவழுத்தம், கடுமையான வேலைகள் போன்றவையும் காதுக்குடும்பி அதிகளவில் உருவாகுவதற்குக் காரணமாகின்றன. கேட்டல் கருவிகள் மற்றும் Ear Phones அடிக்கடி பாவிப்போருக்கும் கூட குடும்பி தொல்லை தரும் ஒன்றாக இருக்கிறது. இதனால் கேட்டல் கருவி உபயோகிப்போர் ஒவ்வொரு 3-6 மாதத்துக்குக் காதைச் சுத்தம் செய்தல் வேண்டும்.

Ear bud எனப்படும் பஞ்சு சுற்றப்பட்ட சிறியதடிகள், Hair Clip, Safety pin என்பவற்றை காதைச் சுத்தப்படுத்தும் நோக்குடன் காதினுள் விடுவது ஆபத்தானதாகும். இதன்போது காதின் வெளிப்பகுதிக்கு அண்மித்ததாக உருவாக்கப்படும் குடும்பியானது நடுக்காதை நோக்கித் தள்ளப்படுவதால் பிரச்சினை அதிகமாகும். சிலசமயங்களில் செவிப்பறை மென்சவ்வில் கிழிவுகளையும் ஏற்படுத்தலாம்.

இதனால் காதினுள் குடும்பி இருந்து பிரச்சினையாக உள்ளது எனக் கருதும் பட்சத்தில் வைத்திய ஆலோசனையை நாடுதல் வேண்டும்.


முதலில் குடும்பியை இளக்கும் திரவங்கள் பாவிக்கத் தரப்படும் இந்தத் திரவத்தில் 2-3 சொட்டுக்களை தினமும் 2-3 தடவை 3-5 நாள்களுக்குக் காதினுள் விடவேண்டும். இவ்வாறு செய்யும் போதே குடும்பி இளகி வெளியேறிவிடும். இதன்போதும் குடும்பி வெளியேறாவிட்டால் வைத்தியர் சிறு உபகரணங்களைப் பயன்படுத்தி இலகுவாக அகற்றிவிடுவார்.

Dr.R. ரமாவித்தியா - யாழ் போதனா வைத்தியசாலை

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான [illegible] இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் செய்யப் போவது மக்களுக்கான அரசியல்



ரசிகர் மன்றத்தை நற்பணி மன்றமாக்கி... இரத்த தானம், கண் தானம், உடல் தானம் என்று தானும் செய்து, தன் மன்றத்தாரையும் செய்ய வலியுறுத்தி... இப்படி மற்ற நடிகர்களுக்கு முன்மாதிரியாக இருப்பவர் கமல்ஹாசன். "நீங்கள் அரசியலுக்கு வருவீர்களா?" என்று பல தருணங்களில் கேட்கப்பட்ட கேள்விக்கு, "அது என் வேலையல்ல" என்று சளைக்காமல் பதில் அளித்தவர், இன்று அரசியல் களத்தில் நிற்பது காலம் செய்த முரண். இந்த மாற்றம் எந்தப் புள்ளியில் அவருக்குள் மையம்கொண்டது என்று தெரியவில்லை. ஆனால், ஜெயலலிதா மறைவு, கலைஞரின் ஓய்வு... எனக் கிடைத்த இடைவெளியைப் பயன்படுத்திக்கொள்கிறார் என்ற விமர்சனத்தைக் கூட, 'அப்படியும் இருக்கட்டுமே' என்று நேர்மறையாக எதிர்கொள்கிறார்.

இன்று இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தில் உள்ள அப்துல் கலாமின் இல்லத்திலிருந்து கட்சியின் பெயரையும், கொடியையும் அறிவித்து தன் அரசியல் பயணத்தைத் தொடங்குவதாக அறிவித்துள்ளவர், அதற்கான ஆலோசனைகளில் பரபரப்பாக இருக்கிறார்.

"வாக்குக்குப் பணம் கொடுப்பதையும், மக்களைக் கவர இலவசங்களைக் கொடுப்பதையும் அவர் அறவே வெறுக்கிறார். ஆனால், இடஒதுக்கீட்டுக் கொள்கையில் திராவிடக் கட்சிகளுடன் ஒத்துப்போகிறார். கல்வி, சுகாதாரம், தொழில் துறை... என்று வளர்ச்சிக்கான நிறைய எண்ணங்களும் திட்டங்களும் அவரிடம் உள்ளன. பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு வெளியே வருபவர்கள், எவ்வித திட்டமிடலுமின்றி வருடங்களைக் கடத்த மட்டுமே கல்லூரிகளில் சேர்வது குறித்து அடிக்கடி கவலையுடன் குறிப்பிடுவார். பாமரனுக்கு எழுகின்ற அடிப்படையான எண்ணம் தொடங்கி, பிரமாண்டமான திட்டங்கள் வரை அவரிடம் தெளிவானபார்வை உள்ளது. தமிழகத்தின் வளமான எதிர்காலத்தை நோக்கிய கனவுகளுடன் அவரது அரசியல் இருப்பதால், அவரை நாங்கள் வரவேற் கிறோம்" என்கி றார் அவருடன் நெருங்கிப் பழகும் நற்பணி மன்ற நிர்வாகி ஒருவர்.

'சினிமாவில் உள்ளதுபோல் ரஜினியுடன் இணக்கமாக இருப்பாரா? அல்லது எதிரும் புதிருமாக நிற்பாரா?' என்பது குறித்து வேறொரு நற்பணி மன்ற நிர்வாகியிடம் கேட்டோம். அதற்கு அவர், "ரஜினியுடன் இப்போது வரை இணக்கமான நட்பே தொடர்வதாக நினைக்கிறோம். கட்சி தொடங்கியதாலேயே அவரைப் பகைத்துக்கொள்ள வேண்டும் என்று கமல் நினைக்கமாட்டார். ரஜினியின் கருத்துடன் முரண்பட்டால், நட்பைக் கடந்தும் அதைத் தெரிவிப்பார். ரஜினி '234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிடப் போகிறேன்' என்று அறிவித்துவிட்டார். தேர்தல்தான் அரசியல் என்பது ரஜினியின் கருத்தாக இருக்கிறது. எழுத்து, பேச்சு... இவற்றின் மூலம் கமல் எதை நோக்கிய அரசியலை முன்னெடுக்கிறார் என்ற தெளிவுள்ளது. கமல் மக்கள் நலனை மனதில் வைத்துச் செயற்படுகிறார். 'நான் செய்யப் போவது மக்களுக்கான அரசியல். அதில் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கிறேன்' என வெளிப்படையாக கமல் அறிவித்துள்ளார்" என்கிறார்.

'முரசொலி விழாவுக்குப் போனது, ஸ்டாலினுடனான நட்பு என்று தி.மு.கவுடன் இதுவரை இணக்கமாக இருக்கும் கமல், அவர்களுக்கு எதிராகப் பேசுவாரா?'- இதுகுறித்து சிலரிடம் பேசினோம். "தன் இருப்பை வெளிப்படுத்த, வம்படியாக அவர் எப்போதும் பேசமாட்டார். தி.மு.க. மட்டுமல்ல, எந்தக் கட்சியினருடனும் தானாகச் சென்று நட்பை முறித்துக்கொள்ள மாட்டார். அரசியல் பயணத்தின்போது இவர் முன்வைக்கும் கருத்துகளுக்கு அவர்கள் எதிர்க்கருத்து சொல்ல வேண்டிய சூழல் ஏற்படும். அப்போது இரு தரப்புக்குமான உறவு எப்படி இருக்கும் என்பது புரியும்" என்கிறார்கள் அவர்கள்.

கமலின் பயணத்திட்டங்கள் குறித்துக் கேட்டோம். "தற்போது தென்மாவட்டங்களில் நீண்டகாலமாக கிடப்பில் போடப்பட்டுள்ள திட்டங்கள் குறித்த தகவல்களை கமல் சேகரித்து வருகிறார். அதேபோல அங்கு செயற்படுத்த வேண்டிய அத்தியாவசியத் திட்டங்கள், மக்களின் உடனடித் தேவைகள், அங்குள்ள பிரச்சினைகளுக்கு இவர் முன் வைக்கும் தீர்வுகள்... இப்படிப் பயணத் திட்டங்கள் தயாராகி வருகின்றன. இதற்காக நற்பணி மன்ற நிர்வாகிகள் மட்டுமன்றி நடுநிலையாளர்களிடமும் கமல் பேசிவருகிறார்.

முக்கிய நகரங்களில் மக்களைச் சந்தித்து அவர் உரையாடுவார். வளர்ச்சிக்கான தன் திட்டங்களை அவர்களிடம் பகிர்ந்து கொள்வார். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு இலட்சம் பேரை நேரடியாகச் சந்தித்து, அவர்களின் கருத்தைக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்குள் உள்ளது. இதேபோல அடுத்தடுத்து ஒவ்வொரு மாதமும் எல்லா மாவட்டங்களுக்கும் செல்வதும் அவரது திட்டமாக உள்ளது. சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை எல்லா மாவட்டங்களையும் தொட்டுக்கொண்டு செல்வது போல அவரின் பயணப் பாதை அமையும். பெப்ரவரி 21 ஆம் திகதி எப்போது விடியும் என்று காத் த ிருக்கிறோம்" என்கிறார். கமலின் நெருக்கமான வட்டத்தில் இருக்கும் ஒருவர்.

இந்தியாவிலேயே ஆந்திரா விலும் தமிழகத்தி லும் தான் தியேட்டருக்குச் செல்லும் சினிமா ரசிகர்கள் அதிகம். சுமார் 15 சதவிகிதம். தமிழகத்தில் அதைத் தாண்டிய மற்றவர்களை எப்படி ஈர்க்கப்போகிறார்கள் என்பதைப் பொறுத்தே கமல் மற்றும் ரஜினியின் அரசியல் பாதை அமையும்.

**ஜூனியர் விகடன்**

# எடப்பாடியை எச்சரித்த நடராஜன்



தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தன்னுடைய நடவடிக்கைகளை மாற்றாவிட்டால் அவரை மாற்ற நான் அரசியல் களத்தில் இறங்கத் தயங்க மாட்டேன்' என்று சசிகலாவின் கணவரான ம.நடராஜன் தெரிவித்துள்ளார். 'சசிகலாவிடம் இதற்கான ஒப்புதலை வாங்கி அரசியல் களத்தில் குதிப்பேன் என்றும் நடராஜன் கூறியுள்ளார்.

"ஜெயலலிதாவின் மரணத்தை விசாரிக்க ஆணையம் அமைத்ததே தவறு. மக்களுக்கு பல சந்தேகங்கள் எழும். ஆணையம் அமைத்ததால் ஜெயலலிதா மரணத்தில் என்ன தெளிவை பெற்று விட்டார்கள்? நாளையே ஆணையம் தீர்ப்பு தந்தாலும் அதனால் எதுவும் நடக்கப் போவதில்லை.

ஜெயலலிதாவின் உழைப்பில் 2016இல் வந்தது அ.தி.மு.க .அரசு. எனவே அ.தி.மு.க. அரசு நீடிக்க வேண்டும் என்றே சசிகலா விரும்புகிறார். ஆனால் எடப்பாடி பழனிச்சாமி நீடிப்பாரா என்பதில்தான் சசிகலா மாறுபட்டிருக்கிறார். இந்த அரசின் செயற்பாடு மக்கள் விரோத செயற்பாடு என்பது தான் என்னுடைய நிலைப்பாடு. பழனிச்சாமிக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இல்லை.

இன்றும் எனக்கு நாடு முழுவதும் செல்வாக்கு இருக்கிறது. ஒரே ஒரு தொலைபேசி போட்டு என்னுடைய காரியத்தை சாதிக்க முடியும். ஆனால் எந்த ஒரு தகுதி யுமே இல்லாமல் முதல்வர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவர் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று பாடுபடுகிறார். மற்றவர்களிடம் 'நீங்கள் தேர்தலில் வெற்றி பெற என்னுடைய தயவு வேண்டும்' என்று மிரட்டுவதெல்லாம் ஏற்பதற்கில்லை.

ஜெயலலிதா வாசித்த அறிக்கைகள் எல்லாமே நான் எழுதிக் கொடுத்தவைதான். நான் போட்டு கொடுத்த இலவச திட்டங்கள்தான் அ.தி.மு.கவின் தேர்தல் [illegible] இடம்பெற்றன. ஜெயலலிதாவிடம் வாழ் நாள் முழுவதும் இருந்த நல்ல விடயம் நான் எழுதிக் கொடுத்த அனைத்து விடயங்களையும் ஒரு மாற்றம் இல்லாமல் அப்படியே பின்பற்றி வெற்றியைக் கண்டார்.

ஜெயலலிதா ஒருபோதும் சசிகலாவை விட்டுக் கொடுக்கத் தயாராக இருந்த தில்லை. சசிகலா தன்னுடைய தோழி என்று ஜெயலலிதா அறி வித்திருந்தார். இதற்கு மேல் என்ன உத்தரவாதம் தேவை என்று அனைவருமே கேள்வி எழுப்புகின்றனர். சசிகலா என்னுடன் வாழ வேண்டும் என்று அழைத்து வர என்னுடைய தாயாரும், சசிகலாவின் தாயாரும்போயஸ்கார்டன்சென்றனர். அப்போது ஜெயலலிதா தட்டு நிறைய வைரநகைகளை வைத்து எடுத்து வந்து இவையெல்லாம் சசிகலாவிற்காக செய்திருக்கிறேன் என்று சொன்னார்.

ஆனால் அதற்கு சசிகலாவின் தாயார் கிருஷ்ண வேணி 'இதெல்லாம் வேண்டாம். என் மகள் அவளு டைய கணவரு டன் தான் வாழ வேண்டும்' என்று சொன்னார்.

ஆனால் ஜெயலலிதாவிற்கு சசிகலா தன்னுடன் மட்டுமே இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது என நடராஜன் தெரிவித்தார்.

தந்தி தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# facebook

# பள்ளியில் திருட்டு



இரவு பனிரெண்டு மணிக்கு மேல் ஆகி விட்டது. ராமசாமியும், அவன் அப்பா, அம்மா, தங்கை, நால்வரும் அவர்கள் ஊருக்கு பேருந்தில் வந்து இறங்கினர். பேருந்து நிலையத்தில் இருந்து பத்து நிமிடம் நடந்தால் போதும், அவர்கள் வீட்டுக்கு போய் விடலாம். நால்வரும் வேகமாக வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள்.

நேரம் பனிரெண்டுக்கு மேல் ஆகிவிட்டதால், தெருவெல்லாம் வெறிச்சென்று இருந்தது. வீதியில் விளக்கும் எரியவில்லை. அவ்வப்பொழுது இவர்களை கடந்து செல்லும் வாகனங்களின் வெளிச்சத்தை வைத்து பாதையில் நடக்க ஆரம்பித்தார்கள்.

வழியில் இவர்கள், ராமசாமியும், அவன் தங்கையும் படித்துக்கொண்டிருக்கும் பள்ளியை தாண்டித்தான் போக வேண்டும்.

அந்த இருளில் நடக்கும்போதே ராமசாமியின் தங்கை அண்ணா நம்ம ஸ்கூலு என்று கைகாட்ட ஆமாம், நாளைக்கு ஸ்கூலுக்கு போகணும், சொல்லிவிட்டு பாடசாலைக் கட்டடத்தைத் தாண்டி பார்வையை செலுத்தினான். அப்பொழுது யாரோ அந்த இடத்தை விட்டு நகர்வது போல் தெரிந்தது. சட்டென நின்று உற்றுப் பார்த்தான், பாடசாலையைத் தாண்டி சிறிது தூரம் நடந்தால் முன்புறம் தலைமையாசிரியர் அறையும், பள்ளி அலுவலகமும் இதை ஒட்டி மற்றொரு அறையும் இருக்கும், கட்டடத்தின் வலது, இடது, பாதையின் வழியாக சென்றால் பின்புறம் பாடசாலைக் கட்டடம் இருக்கும்.

இப்பொழுது இரு உருவங்கள் வலது புற பாதையை கடந்து பாடசாலை அருகே நகர்ந்து செல்வது தெரிந்தது. நன்றாக உற்றுப் பார்த்தான். பாடசாலை காவலாளி இவனுக்கு தெரியும், அவருடைய உருவம் அந்த இரு உருவங்களில் ஒத்துப்போகவில்லை. என்ன செய்வது? யோசிக்கும்போது அவன் அப்பா அவனை கூப்பிடுவது கேட்டது. திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். அவன் அப்பாவும், அம்மாவும் தங்கையும் அவனை விட்டு நீண்ட தூரம் முன்னால் சென்றிருந்தார்கள். அங்கிருந்து அப்பா கத்தினார்.

ராமு சீக்கிரம் வா, அங்க எதுக்கு நின்னுட்டே? இவன் சரி முதல்ல வீட்டுக்குப் போவோம், அப்புறம் பார்க்கலாம், சொல்லிவிட்டு வேகமாக அவர்களை நோக்கி சென்றான்.

காலையில் தூங்கி எழும்போதே அவனுக்கு பாடசாலை இருளில் பார்த்த உருவங்கள் யாராய் இருக்கும் என்ற கேள்வியே மனதில் இருந்தது. வகுப்பில் அருகில் உட்கார்ந்திருக்கும் நண்பன் பாலுவிடம் நேற்று இரவு வரும்போது பாடசாலைக்குள் இருவரை பார்த்ததாக சொன்னான்.

பாலு யோசித்தான், யார் அந்நேரத்துக்கு உள்ளே இருந்திருப்பாங்க? நம்ம பசங்களை மாதிரி இருந்ததா? இல்லை பெரிய ஆளுங்க மாதிரி தெரிஞ்சுது என்று சொன்னான் ராமசாமி.

சரி இன்றைக்கு இராத்திரி வேணா பார்த்துடலாமா? பாலு கேட்டவுடன் தயக்கத்துடன் பாத்துடலாம் என்று சொன்னான். ஏன் பயமாயிருக்கா? பாலு கேட்டவுடன் சே சே. அதெல்லாம் இல்லை. அந்நேரத்துக்கு எப்படி வீட்டை விட்டு வெளியே வர்றதுன்னு யோசிச்சேன்.

எப்படியாவது எந்திரிச்சு வரணும்? பாலுவின் இருப்பிடம் ராமசாமி வீட்டை தாண்டி சிறிது தூரத்தில் இருந்தது. பாலு நான் உன் வீட்டுக்கு வந்துடறேன், நீ ரெடியா இரு என்னன்னு போய் பார்த்துடலாம். சரி என்று தலையாட்டினான் ராமசாமி.

இரவு தூங்கி விடாமல் மிகவும் கஷ்டப்பட்டு விழித்திருந்தான் ராமசாமி.

பாலு வந்தவுடன் கூப்பிடுவதாக சொல்லியிருந்தான். அதற்காக விழிப்புடன் காத்திருந்தான். அவன் வீட்டில் அனைவரும் உறங்கியிருந்தனர்.

ராமு... ராமு... கிசுகிசுவென பாலுவின் குரல் கேட்டது. சத்தம் காட்டாமல் எழுந்த ராமசாமி கதவை சத்தமில்லாமல் திறந்தான். வெளியே பாலு நின்று கொண்டிருந்தான். கதவை அப்படியே சாத்தி வெளியே தாழ்ப்பாள் போட்டவன், பாலுவை பார்த்து நீ எப்படி வந்தே?

ஸ்..ஸ் நடந்து கிட்டே பேசலாம் வா..சொல்லிவிட்டு விறு விறுவென நடக்க ஆரம்பித்தான். ராமசாமி அவன் பின்னால் ஓடினான். பேசலாம் என்று சொன்னானே தவிர பேசவேயில்லை. நடை அவர்கள் பாடசாலையை நோக்கி அவ்வளவு வேகமாக இருந்தது.

இருவரும் பாடசாலை சுவர் அருகே நின்று எட்டிப் பார்த்தனர். உள்ளே இருளாய் இருந்தது. ஒன்றும் கண்ணுக்கு தெரியவில்லை. பாலு ராமசாமியிடம் அப்படியே பாடசாலை தாண்டி உள்ளே பார்த்துடுவோம். ராமசாமி வேண்டாம் கேற்றை திறந்து போகலாம் என்றான்.

வேண்டாம் கேற் திறக்கும்போது சத்தம் வரும். அப்ப உள்ளே யாராவது இருந்தா நமக்கு ஆபத்து என்றான். அதுவும் நல்ல யோசனையாகத்தான்பட்டது.

சத்தமில்லாமல் பாடசாலை மதிலில் ஏறி உள்ளே குதித்தனர். மெல்ல... மெல்ல கால் வைத்து அலுவலக கட்டடத்தை நோக்கி நடந்தனர். அவர்கள் இருவர் மனதும் பயத்தில் துடித்துக்கொண்டிருந்தது.

சரக்கென யாரோ நடக்கும் அரவம் கேட்டவுடன் பாலுவும், ராமுவும் சட்டென ஓடி அங்கிருந்த தூண் ஒன்றின் மறைவில் நின்று சத்தம் வந்த திசையை பார்த்தனர்..

அலுவலக அறையை ஒட்டி இருந்த அறையில் இருந்து இருவர் தலையை நீட்டி பார்த்து விட்டு வெளியே வந்தனர். திறந்து இருந்த கதவை மெல்ல சாத்திப் பூட்டு ஒன்றையும் பூட்டி விட்டு திரும்பினர்.

அவர்கள் கையில் ஆளுக்கொரு பெட்டி போல ஏதோவொன்று இருந்தது. சுற்றும் முற்றும் பார்த்து விட்டு இருவரும் சரசரவென நடந்து பாடசாலை அருகில் வந்து சுவர் மேலேறி அந்த பக்கம் குதிப்பதை திகிலுடன் பார்த்தனர். பாலுவும், ராமசாமியும்.


(தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1307

Search for people, places and things | Nagendram Home

### அம்புஜா

நீங்க வீர விளையாட்டு விளையாடுவீங்களா?



சில சமயம் மனைவியை எதிர்த்துப் பேசுவேன்

### அரவிந்

மனைவி: உங்களை பார்த்துக்கிட்டே இருக்கனும் போல இருக்குங்க..



கணவன்: அப்பவே ஜோசியர் சொன்னாரு கல்யாணத்துக்கு அப்புறம் சனி பார்வை உங்க மேலேயே இருக்கும்னு

### கமலன்

முடி சின்னதா வெட்டி விடுங்க எவ்வளவு சின்னதா?



பொண்டாட்டி கைல பிடிக்க முடியாத அளவுக்கு

### சரண்

எதிரியை ஒழிக்க முதலில் அவர்களை நமது நண்பராக்குங்கள்



நம்மகூட சேர்ந்த பிறகு அவன் உருப்படவா போறான்

### சாதிக்


மாமியார்: நேற்று நான் போன சினிமாவைப் பார்த்து சிரிச்சு சிரிச்சு பாதி உயிர் போயிடிச்சு



மருமகள்: அப்படியா அத்தை! அந்தப் படத்தை இன்னிக்கும் ஒரு தடவை போய் கண்டிப்பாகப் பார்த்திட்டு வாங்க

### சமிதா

லவ் பண்ணும்போது அட்வைஸ் பண்ற ப்ரண்ட்ஸ் எல்லாம் முட்டாளாய்த்தான் தெரிவாங்க



ஆனா நீ ஏமாந்து நிற்கும்போது தான் நீ முட்டாள் ஆனது உனக்கு புரியும்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானாசேர்ந்த கூட்டம்

## திரைவிமர்சனம்

சூர்யா தன் திரைப்பயணத்தின் மிக முக்கியமான இடத்தில் இருக்கின்றார். ஆம் அஞ்சான், மாஸ் என படுதோல்வி படங்களில் இருந்து 24, சிங்கம் 3 என சுமார் வெற்றியை ருசித்த



இவருக்கு தற்போது மெகா ஹிட் ஒன்று தேவைப்படுகின்றது. அதற்காக நானும் ரவுடி தான் வெற்றி பட இயக்குனர் விக்னேஷ் சிவனுடன் இவர் கைக்கோர்த்த படம் தான் தானா சேர்ந்த கூட்டம். இந்த படம் இவருக்கு எதிர்ப் பார்த்த வெற்றியை கொடுத்ததா? இதோ பார்ப்போம்.

பாலிவுட்டில் அக்ஷய் குமார் நடிப்பில் செம்ம ஹிட் அடித்த படம் ஸ்பெஷல் 26. அப்படத்தின் அதிகாரப்பூர்வ ரீமேக்கே இந்த தானா சேர்ந்த கூட்டம்.

சூர்யா அவருடைய நண்பர் கலையரசன் அரசாங்க வேலைக் காக போராடி வருகின்றனர். இதில் சூர்யா CBIக்கும், கலையரசன் பொலிஸ் வேலைக்கும் முயற்சி செய்துவர, ஒரு சில ஊழல் மேலதிகாரிகள் சதியால் இருவருக்குமே வேலை கிடைக் காமல் போகின்றது.

அதை தொடர்ந்து கலையரசன் தற்கொலை செய்துக்கொள்ள, சூர்யா தனக்கென்று ஒரு கூட்டத்தை சேர்த்துக்கொண்டு அரசாங்கத்தில் இருக்கும் குள்ள நரிகளை எப்படி ஓட ஓட விரட்டு கின்றார் என்பதே மீதிக்கதை.

முதல் வார்த்தையே விண் டேஜ் சூர்யா இஸ் பேக் என்று தான் சொல்ல வேண்டும். தனக் கென்று ஒரு ஸ்டைல் வைத்துக் கொண்டு மௌனம் பேசியதே, அயன், சிங்கம் என கலக்கி வந்த சூர்யா சில நாட்களாக தடுமாறி வர, அவரை மீட்டுக்கொண்டு வந்து விட்டார் விக்னேஷ் சிவன். லோக்கலாகவும் சரி, தன்மைனஸ் என்று சொல்லப்படும் உயரத்தை கூட வெளிப்படையாக பேசி கடைசியில் அதற்காகவே ஒரு பன்ச் வைக்கும் இடத்திலும் சரி சூர்யாவின் அவுட் ஆப் கிரவுண்ட் சிக்ஸர் தான் இந்த தானா சேர்ந்த கூட்டம்.

சூர்யா தனக்கென ஒரு போலி CBI கும்பலை வைத்துக் கொண்டு அரசாங்கத்தை ஏமாற்று பவர்களையும், அரசாங்க வேலைகளில் இருந்து வேலை செய்யாமல் லஞ்சம் வாங்கு பவர்களையும் ஓட விடுகின்றார். அதற்கு உறுதுணையாக ரம்யா கிருஷ்ணன், செந்தில், சத்யன் என ஒரு கூட்டம்.

நீண்ட நாட்களுக்கு பிறகு ரம்யா கிருஷ்ணன் காமெடியிலும் கலக்கியுள்ளார். அதைவிட சீனியர் சீனியர் தான் என செந்திலும் கடைசி வரை தன் கெத்தை விடாமல் நம்மை சிரிக்க வைத் துள்ளார். அதிலும் கிளைமேக் ஸில் பொலிஸிடம் நெஞ்சை நிமிர்த்தி நான் ஜோக்கர் இல்லை என்று ஆங்கிலத்தில் பேசும் காட்சி கைத்தட்டல் பறக்கின்றது.

படத்தின் முதல் பாதி நண் பனின் இழப்பு அதற்காக சூர்யா எடுக்கும் முயற்சி, கீர்த்தியுடன் காதல் என கலகலப்பாகவே செல்கின்றது. அதிலும் இடைவேளையில் நவரச நாயகன் கார்த்தியிடம் சவால் விட்டு போனை வைக்க, இரண்டாம் பாதி பட்டையை கிளப்ப போகின் றது என தோன்ற வைக்கின்றது.

இந்த மாதிரி வேலைகளை தற்போது செய்தால் இரண்டு செக்கண்டில் கண்டுப்பிடித்து விடுவார்கள். அதற்காக கதையை 80களில் நடப்பது போல் காட்டி யுள்ளது புத்திசாலித்தனம். அதிலும் ஒவ்வொரு காட்சிக்கு ஏற்றார் போல் தில்லு முல்லு, சபதம், நாயகன் பட போஸ்டர்கள் இருப்பது சூப்பர்.

இத்தனை ப்ளஸ் விஷயங் கள் படத்தில் இருந்தாலும் கிளைமேக்ஸ் ஏதோ படத்தோடு ஒன்றவே இல்லை. இன்னும் கொஞ்சம் அழுத்தமாகவே முடித் திருக்கலாம் என்று தோன்று கின்றது, படம் முடிந்துவிட்டதா? என கேட்கும் நிலையில் உள் ளது.

சூர்யா, ரம்யா கிருஷ்ணன், செந்தில் என அனைவரின் நடிப் பும் கவர்கின்றது. சில நிமிடம் வரும் ஆனந்தராஜில் இருந்து ஆபிஸராக வரும் கார்த்தி, சுரேஷ் மேனன் வரை அசத்தியுள்ளனர்.

படத்தின் முதல் பாதி விறு விறுப்பிற்கு, பஞ்சமில்லை, அனிருத்தின் துள்ளலான இசை, தினேஷின் கலர்புல்லான ஒளிப் பதிவு.

படத்தின் வசனம் ஜாலி யாகவே சென்றாலும் இரண்டாம் பாதி குறிப்பாக கிளைமேக்ஸ் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மொத்தத்தில் சூர்யாவின் 'அன்பான' தானா சேர்ந்த கூட் டத்திற்கு(ரசிகர்களுக்கு) விருந்து.


## யாழ்ப்பாண பிறவுண் வீதி கிளை

அன்பான
வாடிக்கையாளர்களே,

இந்த வருடம் முதல் எமது விஷன் கெயார் யாழ்ப்பாண பிறவுண் வீதி கிளை, வர்த்தக விடுமுறை தவிர்ந்த வாரத்தின் 7 நாட்களிலும் உங்கள் வசதிக்காக திறக்கப்படும். இனி வார இறுதி விடுமுறை நாட்களிலும் உங்கள் வசதிக்கேற்ப எமது சேவைகளை உங்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

நன்றி




WELCOME
7 DAYS
OPEN

Our services
Spectacles | Sunglasses
Refraction | Contact lenses
Doctor channeling | Hearing aids
Biometry | OCT scan
Orthoptic assessment | Visual Field test

VISION CARE
OPTICAL SERVICES

முகாமையாளர்,
விஷன் கெயார் ஒப்டிகல் சேர்விசஸ் (வரை) தனியார் நிறுவனம்,
இல. 108, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021 - [illegible] / 077 - 3426515


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org